MSM 66

48

காஞ்சம் பார்த்து ஒப்புகள் இல்லை

மருந்துசெய்முறையும்
அனுபவ வைத்தியமும்
பாகம் ௨.

7, 8, 9 & 10-91 ஆகிய தேதிகளில்
ஆய்வு மெத்தவ அநுபவராலல் கன்னியா-
குமரியிலிருந்து கொண்டுவந்த சுவடி.

மருந்து செய்முறையும்
அனுபவ வைத்தியமும்.
பாகம் 2

உரை எழுதிமுடிக்கப்பட்டது.
30.4.04 - 5.7.04.

270. மஞ்சள், வாசனைப்புல்லு, கற்பூரம்,
கடுக்காய், ஆகிய வற்றை வகைக்கு 20 கி
எடுத்து சாறு விட்டரைத்து எடுத்து,
வெங்காரத்தூள், ஒட்டடை வகைக்கு
10 கி எடுத்து அக்கலவையில் போட்டு
அடித்துக் கொள்ளவும். எண்ணெயில்
கலந்து ஒரு வேளைக்கு மூன்று முறை
– யாக (24 நிமிடத்திற் கொருமுறை) ஒரு
கரண்டி (4மி.லி) அளவு கொடுக்க,
கெர்ப்பத்தில் வரும் ஏழு நோய்கள்
சூதக வாய்வு, திரட்சி வாய்வு, கெர்ப்பக்
கிராணி, குன்மசூலை ஆகிய நோய்கள்
மூன்று நாளில் தீரும். பத்தியம் காக்க
வேண்டும். வெள்ளாட்டுப்பால், வெந்நீரும்
ஆகும். மூன்று நாள் பத்தியத்துடன்
மருந்தருந்து நான்காம் நாள் தலை
குளித்து விடவும். அதற்கடுத்த மூன்று
நாட்களுக்கு

136. அ. செஞ்சல்வாச கற்பூர மிஞ்சி அரிதகியுடன்
வருசாணி நாற்க பூஞ்சு
வருகொச்சை நீரேற காலன்சார் விட்டரை
வார்த்தெரித் திருகடத் தீள்
எஞ்சுறு வெங்கார மாகாசத் தூள்வகைக்
கிருகழுஞ் சிட்டு வடிநீ
எண்ணெய்தனில் வார்த்துவிட் டோர்பொழுது மூன்றுநாழி
யந்திடு கரண்டி யளவு
துஞ்சு கெற்பத்தில் வருநோய்களோ டேகுடன்
சூதக வாய்வு திரட்சை
சொல்லரிய கெற்பக்கிராணி குன்ம சூலை
துலைந்துபோ மூன்று நாளும்
அஞ்சாது பத்தியம் ஒன்று மாகாது
வெள்ளாட்டுப்பால் வெண்ணீர்மோம்.
அகது நாலாம்நாள் தலைக்கிரோர் வார்த்திடு
அதுதொட்டு மூன்று நாளே.
270

நான்மூன்றை விழலியிலை கிருவையிலை யாரை யிலை.
நலமான அவரைப்பால் வெண்ணெயிலரித
தாரார்க்கின்ற தெண்ணெய் சுக்கிலே நாயகனோ டேழார்க்கினம்
வார்ந்திடச் சொல்லும் வெடிக்கு மிண்டாரு திகு
செறுமிவ் வெண்ணெய் தனிலே.
ஒளமான நீர்முள்ளிச் சாறுநாவற் சாறும்
வரிசைசெய்க் குருள் மாத்தை

271.

சிராவி, கிளுவை, ஆவாரை என்னும் இலைகளை அவரைப்பாலில் அரைத்து வெண்ணெயில் கலந்து சாப்பிடவும். அடுத்து ஆறாம் நாளன்று தலைக்கு எண்ணெய் தேய்த்து குளிக்கவும். ஏழாம் நாள் கணவனோடு உறவாக இருக்கவும். இவ்வாறு செய்ய குழந்தை பெற மாட்டாதவளுக்கும் குழந்தையுண்டாம்.

மேலும் இவ்வெண்ணெயில் நீர் முள்ளிச் சாற்றையும் நவச்சாரத்தையும் சேர்த்துக் கொடுக்க மாந்தை, நீராம்பல், பெருவயிறு, மகோதரம், சூலை, எட்டு வகைக் குன்மம், கிரப்பன், வாதசூலை, பித்தம், வீக்கம், சோகை, பாண்டு, இந்திர கண்டி எனும் மூத்திரநோய், வாய்வு, மலக்கட்டு, வயிற்றிரைச்சல், கிருமி ஆகிய நோய்கள் இணமாகும். வாய்வுகளையும் பலவகை நோய்களையும் தீர்க்கும். மேடிக்கு தீர்வு சொல்லும் ஒரு எண்ணெய் இது.

நாள்மூன்றை விரலியிலை கிருமையிலை யானையிலை
நலமான அவரைப் பால்
வெண்ணெயி லளித்தாறாங் கினத்தெண்ணெய் மூழ்கியே
நாயகனோ டேழாங் கினம்
வாழ்ந்திடச் சொல்லும் பேடிக்கு முண்டாகும்
மற்றுமிவ் வெண்ணெய் தனிலே
வளமான நீர்முள்ளிச் சாறுநவச் சாரமும்
வரிசை செய்தருள் மாந்தை
தாளாகு நீராம்பல் பெருவயிற் கோதரஞ்
சூலையொடு அட்ட குன்மம்
சேர்கரப்பன் வாதசூலை பித்தம் விக்கம்
சோகைபாண் டுந்திர கண்டி
மாணும் வாய்வால் பெக்கட் டரைச்சல்
கிருமி மாறிவிடு மிந்தவெண்ணெய்
வாய்வுக்கும் வல்வியா திக்கு பேடிக்கு
மற்றுள் ளோர்க்கு மென்னே.

271

272. கர்ப்பகால நோய்க்கு உளாந்தியாமணக்கு எண்ணெய்

வெள்ளைப்பூண்டினை 3500 கி எடுத்து வாயகன்ற சட்டியில் போட்டு 21.4 லி தண்ணீர் ஊற்றி காய்ச்சி எட்டிலொன்றாய் முறைப்படி குடிநீராய்ச் சுருக்கி, அதிலுள்ள மருந்துச் சக்கையினைப் பிழிந்து கொள்ளவும், குடிநீரினை மட்டும் மறுசட்டியிலூற்றவும்.

உழிஞை, உத்தாமணி இலை, வெள்ளைச் சாரணை, அழிஞ்கிழங்கு, காட்டாமணக்கு, இலைக்கள்ளி, காக்கணம், அச்சிரவல்லி ஆகியவற்றின் வேர், தழுதாழை, , திருகுக்கள்ளி, கொன்றையிலை ஆகியவற்றை வகைக்கு 350 கி எடுத்து இடித்து 42.8 லி, தண்ணீரில் போட்டு காய்ச்சி எட்டிலொன்றாய்க் குறுக்கிக் கொள்ளவும்.

இதனுடன் 3.9 லி விளக்கெண்ணெய், 1.3 லி தேங்காய்ப்பால் 675 மி.லி திருகுக் கள்ளியின் பால் , மிளகுக் குடிநீர் ஆகியவற்றைக் கலந்து கொள்ளவும்.

௨ கர்ப்ப

137. அ. ~~கர்ப்பகால~~ நோய்க்கு உளத்தியாமணக் கெண்ணெய்

வெள்ளுள்ளி பல்நூறி ரட்டியொரு தூளிநீர்
விருதொளி காயிந்த போது
மிக்க தெட்டொன்றாயக் குறுக்கிப் ~~புளிந்து~~ பிழிந்துடன்
விளாங்கமது தாளி விட்டு
தெள்ளரிய உளிநை யுத்தாமணி சமூலம்
வெண்சாரணை யமுங்கி பூங்கு
தக்க கட்டாமணக் கிலைக்கள்ளி காக்கணம்
தவெச்சிர வல்லி வேரும்
கொள்ளரிய தாழை விழுதோடு திருகுகள்ளியும்
கொன்றையிலை பலமொரு பத்து
குறையாமல் வகைவீத மொருநாழி நீரதனில்
குறுகியெட் டொன்றா தானால்
மென்னமுகை கஷாயமதில் வரவிளக் கெண்ணெய்படி
மூன்று தேங்காயிப் பால்படி
வெண்திருகு கள்ளியின் பாலரைப் படிமிளகு
கிஷாயத்தின் கூட வாரே.

272/

273.. நேர்வாளம், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சவுக்காரம், சுக்கு, மிளகு, திப்பிலி, செவ்வள்ளி, கடுகுரோகணி, கற்கடகசிங்கி, சவ்வியம், வெட்பாலை, பொரிகாரம், இந்துப்பு, கச்சோலம், வெண்காரம், வெடியுப்பு, கல்லுப்பு, திப்பிலிமூலம், ஆனைத் திப்பிலி, நிலவேம்பு, ஆகியவற்றை வகைக்கு 15கி எடுத்து சுத்தி செய்து இடித்து அரைத்து மேற் சொன்ன குடிநீரில் கலந்து கொள்ளவும்.

அக்கலவையுடன் தேவையான அளவு எண்ணெயைச் சேர்த்து அனலில் வைத்து எரித்துக் கொள்ளவும். பக்குவத ~~[illegible]~~ இறக்கி ஆறியபின் ~~[illegible]~~ ஒரு கரண்டி (4 மி.லி) அளவு கொடுக்க வாய்வு, சுரோணித வாய்வு, கெர்ப்ப விப்புருதி, சூலை, வயிற்றிலுண்டாகும் பல நோய்கள் தீரும்.

நாளாத கிரகை நேர்வாளமொரு நாற்முளை
தவிர்த்து முப்பாலை யுடனே
சவுக்கார முக்கடுகு செவ்வள்ளி ரோகணி
திருணக கடுக சிங்கி
காணாறு செவ்வியம் வெப்பாலி விளாலரி
காரமிந் துப்பு பச்சை
கச்சோல வெண்கார மடியுப்பு வெடியுப்புடன்
கல்லுப்பு தெசா புரம்
மாளாத ஆனையின் திப்பிலி நிலவேம்புடன்
வகையொன்று முக்க பஞ்சு
மங்கா திடித்தரைத் தெண்ணெயதனில்
விட்டெரி வடித்தக் கொண்டி
கீழ்நின் றெழும்புதர் வாய்வொரு அரோணிதம்
கெர்ப்ப விப்புருதி சூலை
கெறுவாம் வயிற்றினில் பலவியாதி களை
கேடி புகுந்திடு நிசமிதே.

273

மலடிக்கு எண்ணெய்

274.

சிற்றாமணக்கெண்ணெய் 1.3லி

நைவேளை, தும்பையிலை, வீழி, ஆவாரை சிற்றாமணக்கிலை, மஞ்சள், கிளாவிந்தம் எனும் கஸ்தூரிமஞ்சள், கடுகு, வெண்காரம், இந்துப்பு, வெள்ளைப்பூண்டு ஆகியவற்றை வகைக்குச் சம அளவெடுத்து இடித்து அரைத்து அவ்விழுதை எண்ணெயில் கலந்து கொள்ளவும்.

அனலில் எண்ணெயை வைத்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக்கும்பத்திலேற்றி வேடு கட்டி வைக்கவும். பெண்களுக்கு மாதவிடாய் ஆன நான்காம் நாளிலிருந்து தினமும் ஒரு கரண்டி வீதம் மூன்று முறை குடிக்கக் கொடுக்கவும். உப்பு, புளியைப் பத்தியம் கருதி நீக்க வேண்டும்.

சூதகவாய்வு, பக்கசூலை போன்ற நோய்கள் நீங்கும். இவ்வெண்ணெயைத் தொடர்ந்து குடிப்பவர்க்குக் குழந்தைப் பேறுண்டாகும். வெகு சூட்சமான மருந்திது.

5

220

வெடிக்கு எண்ணெய்

138. அ.

சிறியமுத்தெண்ணெய்ப்படி தைவேளை தும்பையிலை
செகவீரி ஆவரையுடன்
சிற்றாமணக்கு மணக்கிலை நெருசர் குளவிந்தமும்
சேர்கடுகு வெண்காரமும்
குறியான இந்துப்பு வெள்ளுள்ளி வகைசமன
கூண்டரைத்து தெண்ணெய் தனிலே
குன்றாமலே கரைத்தெரி மெழுகு பதம்வடி
கும்பமதில் வெடுகட்டு
அறிவாக விலகி நாலாந்தின் முதற்கெண்ணெய்
அசையாமை லோர்க ரண்டி
அள்சென்று விசையெண்ணெய் புண்ணாகாது
உப்புளி
சொறிகின்ற ஆதகவாய்வு குத்து பக்க
ஆனைமுதி வங்கு றாது
சுகமான பிள்ளை வர்த்திக்கு மேடில்லை
குட்ச
வெகு ~~குச்ச~~ மிது தப்பாதுமே.

274

275. கர்ப்பிணிக்குச் சூலெண்ணெய்

வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய் ஆகிய மூன்றையும் முறையே 1 : $\frac{3}{4}$: $\frac{1}{2}$ என்ற அளவில் எடுத்துக் கொள்ளவும். வெண்ணொச்சி கரிசலை, தழுதாழை, எட்டி ஆகியவற்றின் சாறுகளை வகைக்குச் சம அளவெடுத்து மேற்சொன்ன எண்ணெய்களையும், சாறு -களையும் சம அளவெடுத்து கலந்து கொள்ளவும். திப்பிலி, சன்னிநாயகம், வசம்பு பெருங்காயம், வெள்ளைப்பிசின், பூலாவிருட்சம், கார்கோலரிசி, சீரகம்,

மானின் கொம்பு, பன்றி, குதிரை இவற்றின் குளம்புகள் ஆகியவற்றையும் சேர்க்க. 15கி அளவு கோழியின் குடலை எடுத்து இரத் -தத்தைச் சேர்க்கும் பதத்தில் எண்ணெயை வடித்துக் கொள்ளவும். சோரை கட்டுதல் வயிறு உத்தரிப்பு, உப்பிசம், கெர்ப்பசன்னி குளம்பிள்ளை வாதம், சூலைநோகம் ஆகிய நோய்கள் இச்சூலெண்ணெயால் தீரும்.

ஆ.

கர்ப்

கெர்ப்பிணிக்கு சூலெண்ணெய்

ஒங்காத நின்மெமொடு திலகமே றெண்டெண்ணெய்
வகையொன்று முக்கா லரை
வரிசை வெண்ணொச்சி கரிசாலை தழுதாழையும்
வருமெட்டிச் சார்வகை சமன்
தங்காம வெண்ணெயம் சாறொப்பம் விடு
திப்பிலி சன்னிநாயகம் வசம்பு
தருகாயம் வெண்பிசின் பூலா விருஷமும்
தகுணி கார்கோ லரியசீரம்
பங்கா மயிலிறை முயல்காட்டான் கணக்கோடு
பன்றி புரவிக் குளம்பு
பகர்முக் கழுங்கு கோழிக்குடலி ரத்தம்
விடுபதம் வடித்திடு வடிகாடு
உங்கான சோறைகட்டி வயிறுத் தரிபி
புப்பிசம் கெர்ப்ப சன்னி
உறுவாய் விளம்பிள்ளை வாதங் கிபம்
சூலிரோக மெல்லாந் தீருமே.

௨75

276. பிள்ளைப் பேற்றிற்கு எண்ணெய்

ஆமணக்கெண்ணெய் 162 மி.லி, பாகல்,
மணித்தக்காளி இவையிரண்டின்
சாறுகளையும் வகைக்கு 162 மி.லி. எடுக்கவும்.
காராம்பசும் பாலையும் இவ்வளவைக்
காட்டிலும் அதிகமாகக் கலந்து விடவும்.
பொரிகாரத்தை 5 கி அளவெடுத்துத்
தூளாக்கி இக்கலவையில் தூவிவிடவும்.

அடுப்பேற்றி அவ்வனலில்
எண்ணெயைக் காய்ச்சி பதத்தில் கலசத்
-தில் அடைத்துக் கொண்டு, தினமும்
ஒரு கரண்டியளவு உள்ளுக்குக்
கொடுக்கவும். அவ்வெண்ணெயை
அடி வயிற்றின் மேல் தடவவும்.
குழந்தையில்லாதவர்க்கும் உறுதியாக
மகப்பேறுண்டாகும். தவறாது.

139. அ. பிள்ளைப்பேற்றுக்கு எண்ணெய்

சீராரு முத்தெண்ணெய் படியரைக்கால் பாகல்
சிறுகுட்டித் தக்கா ளியும்
செயலாற் கழுஞ்சிமுதை விடிபுளிந் தெருசாறு
சேர்வகைக் கோர்கா லதாய்
காறாறா மாவின்பா லவ்வித மிகவாக
கலந்துவிடு சட்டி யதனில்
கழுஞ்சொன்று பொரிகாரி பொடிதூளு மதிலிடு
கனலடுப் பேற்றி யெரிநீ
பேராகக் காச்சியோர் கலசமதிலே வடி
பிசகாம லோர்க ரண்டி
பிரமாண முடனுங்கொடு நிரந்தரம்புசிக்கத்
பிறமடி வயிற்றாளவிடு
வுருவாகப் பிள்ளை பிரசபமாகு நிச்சயம்
நிமிசமிது தருகி டாது.
நெறியாக அறுமுகன் திருமுனிக் கருள்செய்த
நீதிகுரு வுபதேச சமே.

276

277. சிறு பிள்ளைகள் குடலேற்றத்துக்கு எண்ணெய்

காராம்பசுவின் நெய் 675 மி.லி, நத்தையின் சதையையும் அரிந்து எடுக்கவும். செழிப்பாக உள்ள பிரண்டையின் பூக்களையும் வேண்டிய அளவெடுத்து சேர்த்து அனலில் வைத்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கொள்ளவும். இதனைக் குழந்தைகட்கு காசளவு (4.88 கி) இருநேரமும் கொடுக்க குடலேற்றமும் அதனால் ஏற்படும் கழிச்சலும் இல்லையாகும்.

குப்பைமேனி, சிறுபுள்ளடி ஆகியவற்றின் வேரைச் சமமாக எடுத்து இடித்தரைத்து தேவையான தேங்காயெண்ணெயில் ஊற வைத்து அனலில் வைத்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்திறக்கவும். இதனை அளவறிந்து குழந்தையின் வன்மை, நோயின் தன்மையை அறிந்து ஏழு வேளை கொடுக்கவும். பாலூட்டும் தாய் குழந்தைக்காக பத்தியம் காக்க வேண்டும். இவ்வாறு மேற்கொள்ள குழந்தையின் குடல் பிரட்டல் நீங்கும்.

ஆ. சிறுபிள்ளைகள் குடலேற்றத்துக்கு எண்ணெய்

நீதிசேர் காராவினெய் யறைப்படி நீத்தை
நிணமுறி யரிந்தத னுடன்
நீள்புன் முருங்கையின் லேருமேல் வீதமிடு
நிசமை நித்தே பதம்படி
காதலுறு தேலைகட் கிருபொழுது காசிடை
கற்பா யளிக்க லதனால்
கந்தைகுடலேற்றமும் அதில்வரும் கடுப்புசளும்
கடிதேகு மின்னு மொன்று
மேதினி வரும்குப்பை மேனிசிறு புள்ளடி
வேர்சம னிடித்த ரைத்து
மிக்க உதேங்கெண்ணெய்தனி லேயூறக் காய்ச்சியபடி
மெய்குப்பத மான போது
சாதுரிய மாகவே பாலகர்க் கேழுபொழுது
தான் கொடு மாது பத்தியம்
தையபுரிந்திடச் சிசுகுடல்ப் பிரட்டகன் நீடுறும்
தப்பாது உண்மை யிதுவே.

278. சிறு பிள்ளைகள் தோஷம் சகலதுக்கும் எண்ணெய்

வெங்காயம், செங்கீரை, இம்பழங்காய் என்னும் குடத்தைப் போன்ற பூசணிக்காய், புளி, ~~[illegible]~~ ஆகியவற்றின் சாறுகளை 325 மி.லி தேங்காயெண்ணெய் 675 மி.லி சேர்க்கவும். நற்சீரகம், அதிமதுரம், சிறுநாகப்பூ இவற்றை வகைக்கு 2½ கி எடுத்தரைத்து கலவையில் சேர்த்துக் கொள்ளவும்.

வெண்மையான இரண்டு தேரைகளை உயிருடன் பிடித்து அறுத்து அவ்வெண்ணெயிலே இடவும். அதன் சதை முதிர்ந்த போது அவ்வெண்ணெயை இரண்டு கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். குழந்தைகட்கு காலை, மாலை இருவேளையும் 488 மி.கி அளவு தவறாமல் கொடுக்க, அவர்கட்கு வந்து சேரும் அனைத்து தோடங்களும் ஒழியும். இது உண்மையும் உறுதிக்கு முறிய எண்ணெய்.

140.அ. திருபிள்ளை தோஷம் சகலதுக்கும்

எண்ணெய்

உ திருமுறு நீர்வெங்காயஞ் செங்கீ றையும்
உருதி கும்பழம் காயுடன்
ஒப்பமிடி புளிச்சாறு படிகால தானபின்
உருக்கு தேங்கெண்ணெய் உரியாம்
திசைமருவு கற்கநற் சீரக மதுரமொடு
சிறுநா கப்பூ வகைக்கு
இறந்திடு கழஞ்சறை மெனமது போதுடன்
சேர்த்துவா றை... [illegible] க்கங் தனிலே
அசிதமுறு வெண்தேறை ரண்டுமெ ருடன்பிழிந்து
தறுத்திடு காச்சு பதமாம்
அதுதசை முதிர்ந்திடு கலசமதி லேயடை
அளவாக அர்ந்தி சர்ந்தி
தசைசை பாலகர்க் கெண்ணெய்யொரு காசிடை
தவறா மலேபு கட்டு
தனையர்க்கு வருசகல தோஷமு மொழிந்திடு
தப்பாது நிச்சய மிதே.

278

14/5/91

279. பிரளி (வலிப்பு) துடிக்கு எண்ணெய்

(கொப்பரை)
முற்றிய தேங்காயை உடைத்துப் பிழிந்து பால் எடுத்துக் கொள்ளவும். சிறுசின்னி பொடுதலை, பெருந்தும்பை, வெங்காயம், வேலிப் பருத்தி ஆகியவற்றின் சாறுகளைப் பிழிந்து வகைக்கு 325 மி.லி எடுக்கவும். இந்துப்பு, வெள்ளுள்ளி, காந்தம், இம்மூன்றையும் வகைக்கு 10 கி எடுத்து மேற்குறிப்பிட்ட சாறூற்றி அரைத்து அவ்விழுதைத் தேங்காய்ப் பாலுடன் கலந்து அளவுள்ள அடுப்பில் வைத்து காய்ச்சவும்.

நன்கு கொதித்து மெழுகு பதமாகும் போது பக்குவத்துடன் வடித்துக் கொள்ளவும். ஆறின பிறகெடுத்து குழந்தைக்கு 4-8 மி.லி எண்ணையை உள்ளுக்குக் கொடுத்துப் பின் வெந்நீரைக் குடிக்கக் கொடுக்கவும். பாலூட்டும்தாய் பத்தியம் காக்க வேண்டும். இம்மருந்தைக் கொள்ளும் குழந்தைக்கு பிரளிதுடி, மாந்தம், பொருமல், ஆகிய நோய்கள் தீரும்.

ஆ. பிறளி துடிக்கு எண்ணெய்.

புதிய தென்னங் காயுடைத்துப் பிழிந்து பால்
மின்மலடி யான போது
முகனை சிறுசின்னி பொருதலை பெருந்தும்பையும்
முகருநீ நின்னி தானும்
பதினாறு வேலிப் பருத்தியின் சாறுவகை
படிகா அறக்க வந்து
பாங்கான இந்துப்பு வெள்ளுள்ளி காந்தமும்
பகர்வகைக் கிருக மூஞ்சு
கதிர்மேவு சார்விட் டரைத்துக் கலக்கியே
காச்சிவடி மெழுகு பருவம்
காசிடை கொடுத்து வெண்ணிறத்தைப் புகட்டிடு
கண்டதைக் காய்ப்பத் தியம்.
மதலையெனு மைந்தர்க்கு வரும்பிறளி துடியுடன்
மாந்தமும் பொருமல் தானும்
மறுகியங் கொடுமிது குழமுனிக் குறுமுகன்
வகுத்தருளும் உபதேசமே.

279

பிரளிக்கு (வலிப்பு) எண்ணெய்

280. முருங்கை, உத்தமதாளி, ஆரிதழ்த் தாமரை, கொழுஞ்சி, கையாந்தகரை, சிறுதும்பை, ஆவரை, மஞ்சணாத்தி ஆகியவற்றின் இலைகளினாலான சாறுகளை இடித்துப் பிழிந்து 162 மி.லி எடுக்க. 675 மி.லி சிற்றாமணக்கெண்ணெய், பெருங்காயம், மஞ்சள், வசம்பு காட்டுக் கொழுஞ்சி, வெள்ளறியின் வேர், வெங்காயம், சுக்கு வெள்ளைப் பூண்டு, ஆகியவற்றை வகைக்கு 5 கி எடுத்து மேற்குறிப்பிட்ட சாற்றால் அரைத்து அவ்விழுதை எண்ணெயில் கலந்து கொள்ளவும்.

அடுப்பெரித்து கரைத்த எண்ணெயை வைத்து காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். குழந்தைகட்கு 488 மி.கி அளவு எண்ணெயைக் கொடுக்க வலிப்பு அதன் பிறகேற்படும் கழிச்சல் பேர்மாந்தம், பொருமல் பல்மாந்தம் (நோய்) ஆகிய நோய்கள் தீரும்.

141.அ. பிரளிக்கு எண்ணெய்

தினைவா முருங்கை யுத்தமதாளி யொரிதழ்த்
தாமரை கொடிஞ்சி கையான்
தெகரை சிறுதும்பை யாவரைமஞ்சு ணாத்தியிலை
சாறுவகைப் படியரைக்கஃகால்
இளையான முத்தெண்ணெய் படிபாதி விட்டதில்
காய மரிசனம் வசம்பு -
காணக்கொடிஞ்சி வெள்ளரியின் வேரை
வெங்காயம் வேர்க்கொம்பு லசுணம்
முளையாமல் கைக்கு நிறையோர் கழஞ்சாகவே
முன்சாறு விட்ட ரைத்து
முசுதும்பு கரைத்தெண்ணெய் தனியுறக் காச்சிவடி -
மெழுகுபத மாகவே தான்

பிளையாது காசிடை கொடுத்திடப் பலர்க்கு
பிரளி துடிக்க சிச்சல்
பேர்மாந்தம் பொருமல் புல்லந்தமுறு நிச்சயம்
பேசினை கைத்தீ சனே.

௨௫௦//

281. மாந்தமது பட்டு இரத்தம் ஒழுகிற-துக்கு எண்ணெய்

பெருந்தும்பை, காயாத விளாத்தி வெங்காயம், பிரண்டையிலை, உத்தம-தாளி ஆகியவற்றை வகைக்கு 168மி.லி எடுத்துப் பாத்திரத்தி லூற்றி, அடுப்பேற்றி காட்டமில்லாமல் தீயை மூட்டி கொதிக்க வைக்க. 672மி.லி தேங்காயெண்ணெ-யையும் உடன் கலந்து கொள்ளவும். வசம்பு, வெள்ளைப்பூண்டு, மிளகு, மஞ்சள் அக்கு ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து வெங்காயச் சாறூற்றி அரைத்துத் தேங்-காயெண்ணெயில் கலக்கவும்.

அடுப்பேற்றி எண்ணெயைக் காய்ச்சி மெழுகு பதமாக வரும் போது கலசத்தில் வடித்து, 48மி.கி எண்ணெயை குழந்தைகட்குத் இருவேளை குடிக்க வைக்கவும். புளியை நீக்கவும். மாந்தம், பிரளி, சிறுநீரில் இரத்தம் ஒழுகுதல், நீர்த்தாகம் ஆகியவை தீரும்.

227

அ. மாந்தமது பட்டு ரெத்தம் விழுகிறதுக்கு எண்ணெய்

பெருந்தும்பை காயா விளாத்தி யீருள்ளியொடு
பிரண்டையவை யுத்தம தாளி
பிசகாமல் வகையொன்றுக்கு சாறரைக் காபடி
பேணியோர் காலம் தனில்
வருந்தா துருக்கு தேங்கெண்ணெய் யரிவிட்டா டுடன்
~~டுடன்~~வசம்பு வெள்ளுள்ளி மிளகு
மஞ்சள் வேர்க்கொம்பு வகைநேர் கழஞ்சிருள்ளி
வருசாறு விட்டரைத்து
பொருந்தக் கரைத்தெண்ணெய் சாகப கலங்கெரி
புகழுபத மெழுக தாக
புனிதநற் கலசமதிலே வடித்திரு பொழுதும்
புத்திரர்க் கோர் காசிடை ~~[illegible]~~
மருந்தைப் புகட்டுப் புளிமாது பத்தியம்
மாந்தமொடு பிரளி தடி
வருசல மிரத்த மோங்கார நீர்த்தாக
முதல்வராது நிச்சயமே.

251

282. இணைப் பிறுமலுக்கு அணிலெண்ணெய்

நாதனை, இசங்கு, ஆடாதோடை, கண்டங்காரி, செந்தொட்டி ஆகிய மூலிகைகளை இடித்துச் ~~இடித்த கஷாயம்~~ சாற்றினைப் பிழிந்து கொள்ளவும். சுக்கு, திப்பிலி, மிளகு, அரத்தை, அதிமதுரம் வெண் குந்திருக்கம், கற்கடகசிங்கி ஏலம், அக்கிரா, வால்மிளகு ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து சாறூற்றி அரைத்து அவ்விழுதை வழித்து 672மி.லி தேங்காய் எண்ணெயில் கலந்து கொள்ளவும்.

அடுப்பேற்றி அவ்வனலில் எண்ணெயை வைத்து காய்ச்சவும். அகொதிக்கும் போது அணிலினை அறுத்து அவ்விரத்தத்தை அதில் விடவும். தசையை அரிந்து எண்ணெயில் போட்டு முதிர்ந்த பதத்தில் மறு பாத்திரத்தில் பக்குவமாக வடித்துக் கொள்ளவும். 488மி.கி எண்ணெயைக் குழந்தைக்குக் கொடுக்க இணைப் பிறுமல், கோழை அழிக்கணம் தீரும். தாய் கசப்பானவற்றையும் புளிப்பானவற்றையும் நீக்க வேண்டும்.

142.அ. இளைப்பிருமலுக்கு அணில் எண்ணெய்

தூதளை யிசங்கு கடைக்காரி தோடை
சீந்தொட்டி யட்டு பிழிசாறு
நேர்சுக்கு திப்பிலி மிளகரத்தை யதிமதுரமும்
தூய்யவெண் குந்து ருக்கம்.

வாதுசேர் கற்கடக சிங்கி தூடியக்கிரா
வால்மிளகு வகைக்குக் கழஞ்சி
மாட்டியரை சாகமது வாத்துக் கரைத்துடன்
வரிசை தேங்கெண்ணெய் தானும்

ஓதிடு முறைப்படி தனில் விட்டெரித்ததனில்
உமையமறு வதிரம் விருசி
உறுதசை யரிந்திடு அதிர்பதந் தனில்வடி
ஒருகா சிடைப்பு கட்டு

ஏதமிகு தாயர் கைப்பு புளிப்பக
லிளைப் பிருமலுட னினைகோளை
எழுசுளி கபங்கண மோடிகாது நிச்சயம்
மியம்பி னெண்ணெய்த் தீசனே.

284. பிள்ளைகள் இளைப்புக்கு எண்ணெய்

முற்றிய தேங்காயினை உடைத்து அதனின்
துருக்கிய எண்ணெயையும் ஆடாதோடைச்
சாற்றையும் வகைக்கு 1.3லி எடுத்து, 70கி
நஞ்சறுத்தான் பூண்டின் வேரை சாறூற்றி
அரைத்து அவ்விழுதைத் தேங்காயெண்ணெ
-யில் கலந்து கொள்ளவும். கலந்த
எண்ணெயை அடுப்பேற்றித்து காய்ச்சி கொதிக்
கும்போது 70கி நிலவேர், 675மி.லி ~~இஞ்சு~~
முசுறு முட்டையையும் சேர்க்க

எண்ணெயின் முதிர்ந்த
பருவத்தில் வடித்து கலசத்தில் அடைத்துப்
பின் மறுகலசத்தில் துணியினால் வடிகட்
-டிக் கொள்ளவும். குழந்தைகட்குத்
தினமும் காலை, ~~[illegible]~~ மாலை இரண்டு
வேளையும் 4-8மி.லி எண்ணெய் கொடுக்க
ஆறு நாட்களில் இளைப்பிருமல், ஈளை,
கண்வலி, சுழி கணம், முட்டுகளில் இடைவெளி, ஆகிய நோய்கள்
குணமாகும்.

142 ஆ - அவைச்சுவடியின் ஒரு பக்கம் இல்லை. எனவே [உஅ௩] - எண்ணுள்ள பாடல் விடுபட்டுள்ளது

143. அ. பிள்ளைகள் இளைப்புக்கு எண்ணெய்

பழுத்துவிழுந் தெங்காயுடைத் துருக்கெண்ணெ
யோர்படி
நேரணை ரசமது சமன்
பார்மிது நஞ்சறுத்தான் மூல மிருபலம்
பகர்சீரகமது விட்டரை
இழைத்துடன் மெழுமதுபோல் கரைத்தெண்ணெயின்
கூடக் கலந்தெரித்து
கொட்டிய நிலக்கோர் பலம்றெண்டு மசிறண்டம்
இணைமுறைப் படியதி லிடு
செவித்திடா முதிர்பதம் வடிகலச மதிலடை
சீலையது வேடு கட்டு
சிறியவர்க் கிதுகொடு காசளவு தாக
வேதின மொன்று ரண்டுவேளை
வருத்துநோ யாகிய விளைப்பிருமலையும்
வலிகண் சளிதுரப்பு மாறாது
கும்பமுனி பண்டிதர்க் கருள்செய்த வுண்மை
திரும வுவகை கமே.

உஅ௪

285. இளைப்பிருமலுக்கு எண்ணெய்

பூக்கள் மலிந்துள்ள நொச்சி, குப்பைமேனி, தைவேளை, புளி ஆகிய மூலிகைகளின் சாறுகளை வகைக்கு 1.3லி எடுத்து அதனுடன் வேப்பெண்ணெயையும் சேர்த்துக் கொள்ளவும். சிற்றரத்தை, அதிமதுரம், வெள்ளைப்பூண்டு, திப்பிலி, கிராம்பு வசம்பு ஆகியவற்றை வகைக்கு 20 கி. எடுத்துப் பொடித்து மேற்கூறப்பட்ட சாற்றினைப் போல் அரைக்கவும்.

எண்ணெய், சாறுகள், விழுது அனைத்தையும் ஒன்றாய்க் கலந்து அனலில் காய்ச்சி சரியான பக்குவத்தில் வடித்து கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். 4-8மி.கி காலை, மாலை இருவேளையும் கொடுக்க இளைப்பிருமல், ஈளை வலி, சிலேற்பனம், கபம், விலாச்சந்து நெப்பு கபம் மிகுதியால் கக்கல் ஆகிய நோய்கள் ஒழியும். இவ்வெண்ணெயால் இனி வராது.

ஆ. இளைப்பிருமலுக்கு எண்ணெய்.

பூமேவு நொச்சி திருமேனி தைவேளை
யிடிபுளி சாறுவகை யோர்படி ல் கலக்கி
புகலும் தனவாட்டி நிவெண்ணெய்தனி ~~எக்கிறு~~
புகழ்சிற் றரத்தை மதுரம்
மாமேவு வெள்ளுள்ளி திப்பிலி கிராம்புடன்
வசம்புவகை நாற்க ழஞ்சு
மங்கா மலையிடி பொடிசாறு விட்டரை
மயனுமது போல தாக
நாமேவு எண்ணெய் சாறைக் கலந்துடன்
தயவாக் காச்சி வடிநீ
தருகலச மதிலடை யிருபொழுது காசிடை
தவறா மலே புகட்டு
காமேவிளைப் பிருமல் விளைவலி செர்பனம்
கெவம் விலாச்சளி திரமேபு.
கக்கல்முதல் வண்டாது சத்திய மிரைத்தனன்
கனக உபொற் றும்ப முனியே.

285

286. கணைக்கு எண்ணெய்

மூக்கம்பாலை எனும் மூலிகையின் சாற்றினை 1.3 லிட்டரும், தேங்காய்ப் பாலையும் ~~தனித்தனியே எடுத்துக்~~ கொள்ளவும்.

வெங்காயம், அதிமதுரம், நற்சீரகம், கோரோசனையும், இலவங்கம், இலவங்கப்பட்டை, ஏலம், மாசிக்காய், அதிவிடையம் ஆகியவற்றை வகைக்கு 5 கி எடுக்கவும்.

இச்சரக்குகளை மேற்கூறிய சாறூற்றி அரைத்துத் தேங்காய்ப்பாலில் கலந்து அனலிலிட்டு காய்ச்சி தக்க பருவத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். காலை, மாலை இரண்டுவேளையும் 4-8 மி.கி அளவு குழந்தைக்குக் கொடுத்து வர பதினெட்டு வகைக்கணைங்கள், காய்ச்சல், எலும்புசுரம், வறட்சி நீங்கும். உடல் உறுதியாகும் என்பர்.

144.அ. கணைக்கு எண்ணெய்

இலகொழுக்கம் பாலையிலை யிடித்துப் பிழிந்தெடு
சாறு படிய தொன்று
இனிமை யுறு தேங்கா யுடைத்துப் பிழிந்து பால்
வாட்டி யதுடன் கலந்து

சிலையான கற்க நீருள்ளி யதிமதுர
நற்சீர கொரசாணி யோமம்
திரிசாதி மாயக்கா யேலம் திப்பிலி விடையமும்
சேர்வைக் கோர்க மஞ்சி

பலமான சார்விட் டரைத்துக் கலக்கி
முன்பாலு தனிலே கலந்து
பதமுடன் காச்சிவடி யிருபொழுது காசிடை
பாங்கா யளித்து வருகில்

அலையான கணைகள் பதினெட்டுடன் காச்சலும்
அத்தியிற் சுரம் வரட்சை
அகலு முடன் தெளிவாக நிச்சய முரைத்தனை
அருந்தமிழ் கும்ப முனியே.

286

287. பிள்ளைகளுக்கு உள்ளுரோகம் முதலான வகைக்கு எண்ணெய்

பழம்பாசி, நுகளை, சிறுபுள்ளடி, வலிமை மிக்க மருதின் கொழுந்து, சுரையிலை பிரமி, பொன்னாங்கண்ணி, செம்பொன் நெருஞ்சில், கீழாநெல்லி, சித்திரப்பாலை, தென்னம்பூ, கொடுப்பை, வல்லரை, வில்வக் கொழுந்து, பருத்திக் கொழுந்து, சிறுகீரை, தண்ணீர் விட்டான் கிழங்கு, அத்திக் கொழுந்து, நறுவிலியிலை, மாதுளம் பிஞ்சு, ஆடாதொடை, அமுலா வரை, துளசி, கொடியத்தி, அகத்திக் கொழுந்து கண்டங்கத்திரி முருக்கன் கொழுந்து, ஊசிலைத்தாமரை கிழங்கு, பூண்டு, கிச்சிலிக்காளி, தாதுவளை ஆகிய மூலிகைகளினை இடித்துப் பிழிந்து சாறு வகைக்கு 3256.லி எடுத்துக் கொள்ளவும்,

ஆ. பிள்ளைகளுக்கு உள்ளுரோகம் முதலான வகைக்கு எண்ணெய்

உற்றிடு பழம்பாசி தெகரை சிறுபுள்ளடி
உரத்த மருதின் கொழுந்து
உருச்சுரை யிலைபிரமி சீதேவி செம்பொன்
நெருஞ்சி கீழ்க்கா நெல்லியும்
கொத்துற்ற சித்திரப்பாலை தென்னம்பூ
கொடும்பை வல்லாரை வில்லைக்
கொழுந்து பருத்திக் கொழுந்து சிறுகீரை
குழிமீண்டான் பத்திரி யுடன்
அத்திக் கொழுந்து விரிசிலை மாதளம்பிஞ்சு
ஆடாதோடை — அமலாவரை
அரியணி யலரிகளும் அவனிறம்பூ
விளையுபட குடமுனிக் கொழுந்து
ஒத்த கண்டன்கத்திரி முருக்கன் கொழுங்
கொழுந்தோரிலைத்தாமரை
உறுகண்ப்பூடு 2சிறு தக்காளி தூதளை
யுழக்கு தென்சாறு கொள்ளே.

287//

288. வெங்காயச்சாறு 1.3லிட்டரும், விட்டுணு
கரந்தை, சாத்திரபேதி, வசம்பு, துகை
நீறு, சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்,
நெல்லிக்காய், தான்றிக்காய், அதிமதுரம்,
செண்பகமொட்டு, கோட்டம், கடுப்
பச்சை, கடுகுரோகணி இலவங்கம், சிறு
நாகப்பூ, நெல்லிப்பருப்பு, கொத்துமல்லி,
சந்தனம், மாயக்காய், குரோசாணிஅமம்
ஆகிய மருந்து சரக்குகளை வகைக்கு
4கிராம் எடுக்க. மேற்கூறிய சாறாற்றி
மருந்துப் பொருட்களை அரைத்து ச்
சாற்றில் கலந்து 2.6லி ஆமணக்கெண்
-ணையையும் சேர்க்க, அனலேற்றிய
அடுப்பில் வைத்துக் கலவையைக் காய்ச்சி
மெழுகு பதமாகும் போது கலத்தில்
வடித்துக் கொள்ளவும். வெளுப்பு,
உள்ளுரோகம், குழந்தைகளின் பல
பிணிகள் குணமாகும்.

145. அ. சாரநீர் வெண்காய நீர்நாபி திரிவேககிரி
சாத்திர பேதி வசம்பு
பருசு —கைநாறு திரிகடுகு மூப்பவை
மதுரதந்த செண்பக மொட்டுடன்
ஏறுகோட்டம் கருடப்பச்சை கடுரோகணி
இலவங்க நாக புஷ்பம்
ஏல நெல்லிச பருப்பு கொத்தமல்லியு
மியல் = சாத்திர பேதி சந்தம்
சா—று மாய்க்காய் கோராசாணி யோமமொன்று
கொண்டிடு வராகன் ரெண்டு
இலவணங்க கெண்ணெய் யிருநாழியிற் காய்ந்து
குறிமைகுடு பதம்வடித்துண்
மாறு/பிணி உதிவன் மயக்கம் வெளுப்புடன்
மசணகளை யுள்ள ரோகம்
மற்றுமிது பிள்ளைகட் குள்ள பிணி தீருமென
வடிவேலர் படிதமி ழிதே.

288

289. மேகத்துக்கு எண்ணெய்

கரிசாலை, பூவரசங்காய், வெங்காயம், செம்பொன்னெருஞ்சில், கற்பூரவல்லி, சங்கங்குப்பி, எலுமிச்சங்காய் ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 325 மிலி, 1.3லி ஆமணக்கெண்ணெயையும் சேர்த்துப் பாத்திரத்தை அனலுள்ள அடுப்பில் வைத்துக் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து மற்றொரு கலசத்தில் ஊற்றிப் பாதுகாக்கவும். இவ்வெண்ணெயை காலை, மாலை இரண்டு வேளையிலும் உட்கொண்டு உப்பு, புளியை நீக்கவும்.

மேகநோய், வெப்பம் உண்டாக்கி உடலையும் இளைக்கும் நோய், அரையாப்புக் கிரந்தி, வெட்டைநோய், மேக வாய்வு, பெண்குறியிலுண்டாகும் புண் ஆகியவை இவ்வெண்ணெயால் நீங்கும்.

மேகத்துக்கு எண்ணெய்

கரிசாலை பூவரசன் காய்நீ ருள்ளியொடு
கனத்தை செம்பொன் நெருஞ்சி
கற்பூர வல்லி சங்கங் குப்பி யெருபிசங்
கனிசாறு படிய ரைக்கால்
திரசான ஏரண்டயெண்ணெய் படியொன்று
றதிற்சேர்க் கலந்த போது
சிதைவுறக் காச்சிக் குழக்கி பதமெடுக்கவும்
தீர்கம்வடி கலச மதனில்
உறமாக வெயலை யெண்ணெய் யிருவேளை
யுப்புளி தவிர்த்த ருந்து
உண்டாகி வந்தபிணி யண்டாது மேகநோய்
உட்டிணம் உறாறு நீக்கி
விரைவாற யெரும்பு மறையாப்புக் கிரந்தியும்
வெடிசூலை மேக வாய்வு
விதனமுறு யோனிப்புண் ணகலுமிது நிச்சயம்
விளம்பி னேன்னகத் தீசனே.

உ89

210. வாதத்துக்கு கடுகெண்ணெய்

முற்றிய தேங்காயை ஐந்தெடுத்து துருவிப் பால் பிழிந்து கலசத்தில் ஊற்றி, அதனுடன் 1.3லி கடுகை அரைத்துச் சேர்த்து அனலுள்ள அடுப்பில் வைத்துக் காய்ச்சிக் கொள்ளவும். மறுநாள் மெழுகான எண்ணெயிலுள்ள கசடினை, வேடின் மேலம் வடிகட்டி. அதில் ஒரு கரண்டி அள-வெண்ணெயை (4மி.லி) காலை மாலை இரு வேளையும் கொடுக்கவும்.

இரண்டு நாட்கள் புளி, உப்பை நீக்கிய பத்தியத்துடன் இடைவெளி-யின்றி எண்ணெயை உட்கொண்டால் வாதம், கைகால் முடங்குதல், உடலுறுப்-புகளில் இத்தல், சீதளத்தால் காணும் உடம்புக் குடைச்சல் வேதனையைக் கொடுக்கும் குடைச்சல்வலி, காலில் வாதம் கொடுக்கும் வலி ஆகிய நோய்கள் குணமாகும்.

20 235

146-அ.

வாதத்துக்கு கடுகெண்ணெய்

நல்ல தேங்காயஞ்சு திருகிப் பிழிந்து பால்
நாட்டி உவிடு கலச மதனில்
நற்கடுகு படியொன் றரைத்துக் கலக்கியெரி
நாளொன்று காய்ந்த போது
துல்லிப மதாகவே மருதினந் தனில்வடி
சொல்பத மெழுகு தாக
தூளத்தனிலே யடைவெடு கட்டிரு பொழுது
சுகமாக ஓர்க ரெண்டி
அல்ல லில்லாமலே யொரிருடகாள் பத்தியம்
அசையா திருந்தி வருகில்
ஆடளன் வாதமும் கைகால் முடக்கமும்
அங்கத்தில் குத்து ளைச்சல்
தொல்லைப் படுத்தும் பொருதுளைவு காலவலி
துடிக்கும் குடைச்சல் முதலாய்
தான்போல் பறக்குமிது தப்பாது நிச்சயம்
தொகுத்தனை கத்தி சனே.

210

291. கைகால் முடங்கின வாதத்துக் கெண்ணெய்

நல்லெண்ணெய் 1.3லி எடுத்துக் கொண்டு,
சட்டியிலூற்றவும். நற்சீரகம், கருஞ்சீரகம்
ஏலம் இவற்றை வகைக்கு 20கி,
கொடிவேலி, சீனப்பாகு இவற்றை வகைக்கு
35கி எடுத்து இடித்துத் தூளாய்ச் செய்து
எண்ணெயிலூற்றிக் கலந்து காய்ச்சவும்.
மெழுகு பதத்தில் 17½ கி சர்க்கரையைப்
பொடித்துத் தூவியிடவும்.

சிறிது நேரங் கழித்து அவ்
வெண்ணெயைக் கலசத்தில் வடித்துக்
கொண்டு, அதில் ஒரு கரண்டி (4 மி.லி)
அளவு ஏழு வேளைக்கு உப்புப் புளி நீக்கிய
பத்தியத்துடன் முருங்கையைச் சேர்த்துக் கொடுக்கவும். கைகால்
முடங்கிப் போதல், கண்டூலை
இத்தல் வலி, சீதளத்தால் உடல்நைதல்
மேகத்தால் வரும் வாதநோய் ஆகியவை
இவ் வெண்ணெயால் நெருப்பில்
பட்ட பஞ்சு போல் அழியும்.

ஆ. கைகால் முடங்கின வாதத்துக்கு எண்ணெய்

எள்ளெண்ணெய் படியொன் றளந்து இவிடு
சட்டியில் இருகற்கம் பிருசீரகம்

ஏலம் வகை ஒன்று காற்கழஞ்சு கொடிவேலியும்
இயல்சீனப் பாவு முதலாய்

துன்றும் வகை யோர்பலம் இடித்துப் பொடித்
துடன் தாவி கலந்து காய்ச்சு

தூயதாக வருபதம் மெழுகான போதினில்
துய்ய சர்க்கரை பலமரை

மெள்ளப் பொடித்திடு கலசமதி லேவடி
விதமாக ஓர்கரண்டி வீத

மேருபொழுது நுகர் பத்தியம் வந்ததலி
மிக்கா அருங்கைப் பற்றின்

கள்ளமில்லாமல் முன்வீதம் வெந்நீர் விடு
கைகால் முடக்கம் வாதம்

கண்சூலை ஒத்துளைவு மேகமாந்திர வாதம்
கனல்விடும் பஞ்சா குமே.

௨91 //

292. கழல்வாதம், அண்ட நோவுக்கு எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய் 675 மி.லியைச் சட்டியில் ஊற்றி அதனுடன் 325 மி.லி பாவட்டை, நொச்சி இவற்றின் சாறு -களையும் சேர்க்க. குங்கிலியம், பெருங் காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுகு, சவுக்காரம், கடுகுரோகணி, ஆகியவற் -றை வகைக்கு 5கி, கொட்டை, கொடிவேலி வகைக்கு 15கி, வெள்ளைப் பூண்டு 17½கி எடுத்து மேற்கூறிய சாற் -றுடன் அரைத்து அதைப் ஊற்றிக் காய்ச் -சவும்.

பதத்துடன் வடித்து நாளொன்றுக்கு காலை, மாலை இரண்டுவேளையும் வேளைக்கு 976 மி.லி வீதம் கொடுக்க கழல் வாதம், ஆனந்த வாய்வு, அண்ட வாதம், அண்ட நோவு, ஆண்குறியில் வலி, குத்தல், உளைச்சல் குத்துதல், ஆகிய நோய்கள் அழலில் அகப்பட்ட பஞ்சு போல் பறக்கும்.

147.அ. கழல்வாதம் அண்ட சூலைக்கு எண்ணெய்

ஏரண்ட எண்ணெய்படி பாதிவிரு சட்டியில்
இனிது பாவட்டை நொச்சி
இடி பிழி புளிந் தெருசாறு படிகால் சமன்
குங்கிலியங் திரிகடுகு, நாவும்
வாருண்ட கடுகுடன் சவுக்காரம் ரோகணி
வகைவகைக் கோர்க மூஞ்சி
வருமுலக் கொட்டை கொடுவேல் முக்கழஞ்ச
வகைலசுண மிருகொல்பு பலமதாய்
சீர்கொண்ட ரைத்துக் கரைத்துற்க காச்சிவடி
தினமொன்றில் இரண்டு வேளை
தீர்க்கமா மெண்ணெயிரு காசிடை யருந்த
நோய்தரு கழல்வாத மூடனே
பேர்கொண்ட அனந்த வாய்வண்ட வாதமும்
பிரமான அண்ட சூலை
பீசத்தில் வலிதெறிப்புக் குத்து ளைச்சலும்
பெருஞ்சுழல்ப் பஞ்சா இமே.

௨௯௮//

293. கழல்வாதம், அண்டகூலைக்கு எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், வேப்பெண்ணெய் இவையிரண்டையும் வகைக்கு 325 மி.லி எடுக்க. மாவிலிங்கு, எருக்கு பழுத்த (இலைகளையுடைய) கழற்சி, சுழலாவரை விரா, முக்கரைச்சாரணை, சங்கு ஆகியவற்றின் இலைகளைப் பிழிந்த சாறு 325 மி.லி, முருங்கைப்பிசின் 325 மி.லி எடுக்க.

திப்பிலி, கடுகு, சுக்கு, வெள்ளைப்பூண்டு, வசம்பு, இவற்றை வகைக்கு 10கி எடுத்து முன் கூறிய சாற்றால் அரைத்து, அவ்விழுதை எண்ணெயில் கலந்து காய்ச்சி, மெழுகு பதத்தில் பக்குவத்துடன் ஒரு கலசத்தில் நிரப்பி வேடு கட்டி வைக்கவும்.

பாதத்தில் தோன்றும் வாதவலிக்கும் அண்டகூலை, குத்தல்வலி உளைச்சல் வலிக்கும் இவ்வெண்ணெயை வேளைக்கு ஒரு கரண்டி (4மி.லி)யாக இருவேளை கொடுக்க குணமாகும்.

ஆ. கழல்வாதம், அண்ட சூலைக்கு எண்ணெய்

பருவ முத்தெண்ணெய் படிகால் நிம்பநெய்சம
பகிர்டோ விலிங்கு கெருக்கு
பழுத்ததை கழற்சி சமூலாவறை விளாவிலை
பசுமை நொக்கற சாரணை

முருகான சங்கனது சாறுவகை காலிபடி
முருங்கைப் பிசின் காற்படி
முகனை திப்பிலி கடுகுசுக்கு வெள்ளுள்ளியும்
முசுவாடம் வசம்பு முதலாய்

கருதும்வகை ஒன்றிரு கழஞ்சாகவேயரை
கரைத்து வாரெண்ணெய் தனிலே
காச்சுவத மெழுகாக வடிகலச மதிலடை
கருமமுற வேடு கட்டு

தருண மிருவேளை யோர்பொழு தொருகரண்டி நேர்
கொள்தப்பா தருந்தி வருகில்
தவிரண்ட சூலைகுத்து துளைவுவலி போமெஞ்ச
சாற்றினன் ~~[illegible]~~கத்தி சனே.

212 //

294. ஆனந்த வாய்வுக்கு எண்ணெய்

நல்லெண்ணெயை 325 மி.லி எடுக்க.
கழற்சி விதைப்பருப்பு, வெண்காரம்
இவற்றை வகைக்கு 15 கி.மும் சித்திர
மூலவேரினை 10 கிராமாகச் சேர்த்துப்
பொடி செய்து நல்லெண்ணெயில் கலக்கவும்.
அடுப்பேற்றி எண்ணெயைக் காய்ச்சி
மாசிக்காயையும் போட்டு மெழுகு பதத்தில்
பதமாக கலசத்தில் வடிக்கவும்.

மூன்றரை நாட்களுக்கு, தினம்
இரு வேளையாக (ஏடு) ஒரு கரண்டி
(4 மி.லி) அளவு கொடுக்கவும். உப்பு,
புளியை நீக்கி முருங்கை இலையுடன்
நெத்திலிக் கருவாடு சேர்த்து சாதத்தை
உண்ண வேண்டும். புண்கள் உண்
-டாயுள்ள அரையாப்புக்கிரந்தி, குலை
வாதம் ஆகிய நோய்கள் மேற்
-கூறியவாறு கையாள நீங்கும்.

148.அ. ஆனந்த வாயுவுக்கு எண்ணெய்

நலமான எள்ளெண்ணெய் படிகா வளந்ததில்
நாற்கழஞ் சிறைப்ப ருப்பு
ஞானிவெண் காரமோர் வகைமுக் கழஞ்சுடன்
நல்ல சித்திர மூலிவேர்

தவறாமல் இருகழஞ்சி பொடித்தெண்ணெயில்
தானுற அரைக்க வந்து
சார்ந்த மாய்க்கா யந்துடன் மெருகுபதமாகவே
தருகலச மதில்வடித்து

கவிழாமல் மூன்றரைத் தினமேரு பொருந்தோர்க்
கரண்டி யளவாகி யருந்து
பிரியமுறு பத்தியம் உப்புப் புளிதவிர்
பிணயா முருங்கை பத்திரி

பெரிதான நெத்தலிக் கருவாடு கூட்டியே
பிசகாம லயன முண்ணு
புரைகளா ணுகாத் தரையாப்புக் கிரந்திபுண்
பொடிசூலை வாத முதலாய்

போகுமென் றனுமுகன் குறுமுனிக் கருள்செய்த
புனித திரு வுபதே சமே.

295. அரையாப்புக்கு எண்ணெய்

நல்லெண்ணெயை 1.3லி அளவெடுத்து அதில் 70கி சித்திரமூலிவேரையும் பரங்கிப் பட்டையையும் தண்ணீரூற்றி அரைத்து அவ்விழுதைச் சேர்க்கவும். அடுப்பேற்றி எண்ணெயுள்ள கலசத்தை வைத்து கொதிக்கச் செய்து மெழுகு பதமாகும் போது பக்குவத்துடன் வேறொரு கலசத்தில் வடித்திறக்கி பாதுகாப்பாக துணியினால் வேடு கட்டிக் கொள்ளவும்.

இவ்வெண்ணெயை 4மி.லி அளவெடுத்து காலை, மாலை இருவேளை மூன்றரை நாட்களுக்குக் கொடுக்கவும். உப்பு, புளியை நீக்கி முருங்கைக்கீரை -யுடன் நெத்திலிக்கருவாடு சேர்த்து செய்த குழம்புடனான சோற்றைக் கூட்டவும்.

புண்கள் உள்ள அரையாப்புக் கிரந்தி, சூலை, வாதம் ஆகிய நோய்கள் மேற்கூறப்பட்ட சிகிச்சையால் குணமாகும்.

ஆ. அரையாப்புக்கு எண்ணெய்

பருவமா மெள்ளெண்ணெய் படியொன் றளந்ததில்
பசுமை சித்திர மூலிவேர்
பலம் ரெண்டு சீனப்பா சமனிடை நிறுத்திட்டு
பாங்கரைத்த தெண்ணெய் தனிலே
கருணையிற வேகரைத்த தெரிமெருகு பதம்வடி
கலசமதில் வேடு கட்டு
கனமாக மூன்றரைத் தினமேமு பொருக்கோர
காரண்டி யளவே யருந்து
பிரியமுறு பத்தியம் உப்புளித் தவிர்
பிணையா முருங்கை பத்திரி
பெரிதான நெத்தலிக் கருவாடு கூட்டியே
பிசகாமல் லயண முண்ணு

புரைக ளாறுகாத் தரையாப்புக் கிரந்திப்புண்
பொடிதூளை வாத முதலாய்
போகுமென்ற ஆறுமுகன் திருமுனிக்
கருள் செய்த
புனித குரு வுபதேச சமே.

௨95

296. தலைமுடி வளர

வெற்றிலைக்கொடி, கொடியார்கூந்தல், கமுகுக்குலை, தாழை விழுது, கையாந்தகரை ஆகிய மூலிகைகளை இடித்துப் பிழிந்த சாற்றை வகைக்கு 675 மி.லி அளவெடுத்து மண்சட்டியில் ஊற்றிக் கொள்ளவும். அதனுடன் 2.6லி தேங்காயெண்ணெயை ஊற்றி அடுப்பேற்றி காய்ச்சும் போது, சாறுகளிலுள்ள தண்ணீர் முழுதும் வற்றும் வரை பொறுத்திருந்து, பின் வேறொரு கலயத்தில் துணியினாலான வேடு கட்டிக் ~~கொள்ளவும்~~. எண்ணெயை வடித்திறுத்து பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

பக்குவப்பட்ட இவ்வெண்ணெயை பெண்கள் தலையில் தேய்த்துக் கொள்ள குட்டையாக உள்ள தலைமுடி நீளமாக வளரும். புழு, கிருமி இவற்றால் பாதிக்கப்பட்டு முடி வளராமல் இருப்பது போய் முடி அவ்விடத்தில் வளரும். வெளுத்துப் போன முடி இனி வெளுக்காது. சிவந்த தலைமயிரானது மாற்றம் பெற்று கருமை நிறமடையும்.

149.அ. # தலைமுடி வளர

தாம்பூல வல்லி பிரதீராணி கசகன் இலை
தாழையின் விழுது கையான்
தகரை யிடிஞ்சி சார்வகைக் குரியளந்து
மெஞ்சட்டி யொன்றதனி னலாக

காம்பாத யெண்ணையியது படிரெண்டு விட்டுக்
கலக்கிக் கடுங்க திரெணி
காயிந்துடன் சாறெலாம் வற்றுபத மெண்ணெயில்
கருணையெது நீரி லாமல்

வேம்பான கலசமதிலே யிறுத்ததை சீலை
வேடுகட்டிப் பதனம் வை
மெல்லி நல்லார் சிரந்தேய்த்திடு வழக்கமாய்
மேவிடு லிதன் பெருமை கேள்

வீம்பாங் இரும்கேசம் வளரும் புழுக்கிருமி
வெட்டுமுடி சுருளல் தீரும்
விளாறல்போகும் செம்பட்டை மாறும் கருப்பாகும்
விபரமிது தப்பா தமே.

௨௯௬

297. காது வளர எண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், தேங்காயெண்ணெய் இவையிரண்டையும் வகைக்குச் சம அளவெடுக்க. கருஞ்சீரகம், சிறிய களிப்பாக்கு, காசுக்கட்டி, அதிமதுரம், அபினி, கஞ்சா, நாவல்பட்டை, ஆவாரை, துத்திவேர், மகிழம்வேர்ப் பட்டை ஆகியவற்றை வகைக்குச் சமமாய் எடுக்கவும்.

அனைத்து மருந்துச் சரக்குகளையுமரைத்து எண்ணெயில் விழுதைக் கலந்து காய்ச்சி கொதிக்க வைத்து மெழுகு பதமாகும் வரை பொறுத்துப் பின் வேறொரு கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். ஆறின பிறகு காதில் துளிகள் விட்டு தக்கையைக் கொண்டு அடைக்கவும்.

காது மிகுந்த வன்மையுடன் வள்ளிக்கொடி போல பலத்துடனும் வளர்ந்துவிடும். அணிகலன்களையும் அணியலாம். [illegible]களிற்கு முக அழகை அதிகமாக்கும்.

ஆ.

காதுவளர எண்ணெய்

திலக மேரண்டமொடு தேங்கெண்ணெய் ஒன்று
வகைசேர் சமன் கரிய சீரம்
சிறுகளிர் பாக்கு காசுக்கட்டி மதுரமும்
செயலட்டி மதுர முடனே
கிலகமுறு அவினி கஞ்சா நவ்வல்பட்டையும்
கனக ஆவரை துடரிவேர்
கருணையர் மென்முகிழ் வேர்ப்பட்டை யானதும்
கருது சமனிறைய தாக
நிலமையுற மெனமது போலரைத் தெண்ணெய்சேர்
நீகாய்ச்சு மெழுகு பதம்
நேர்கலச மதிலடை காதுதனி லேயிடு
நிறையான தக்கை போடு
பலமதிக வன்னியின் கொடிபோல வளர்ந்திடும்
பலபணி கனும்பூ ணளாம்
பாவையர்க்கு கதிகமாக வழுத்தருநிச்சயம்
பகர்ந்தனன் கத்தி சனே.

உ97

298. செவி மந்தத்துக்கு எண்ணெய்

இரைச்சல் கொடுக்கின்ற காதின் கேட்கும் தன்மைக்குரிய நன்மையும் உறுதியையும் கொடுக்கக் கூடிய எண்ணெயைக் காண்போம். நல்லெண்ணெய் 325 மி.லி எடுத்து, 17½ கி நிலப் பனை வேரை நன்றாகப் பொடித்துக் கலந்து பதத்துடன் வடித்து வைக்கவும். இவ்வெண்ணெயை நாற்பத்தெட்டு நாட்கள் பாதம் இரண்டிலும் நன்கு தேய்த்துவிடவும்.

17½ கி சித்திரமூலிவேரைத் தாய்ப்பாலூற்றி அரைத்து 325 மி.லி நல்லெண்ணெயில் கலந்து காய்ச்சி கலசத்தில் பக்குவமான பதத்தில் வடித்துக்கொள்ளவும். தினந்தோறும் இவ்வெண்ணெயைத் தலையிலும் பாதத்திலும் சிறிதளவு தேய்த்து விடவும். நாற்பத்தெட்டு நாட்கள் இவ்வாறு தொடர்ந்து செய்ய காதில் ஏற்படும் இத்து, இரைச்சல் மந்தம் நீங்கி நலமாகும்.

௨௧ 243

150.அ. செவிமந்தத்துக்கு எண்ணெய்

ஓசைதரு காது கேளாது செவிடான
பேர்க்குறுதி யெள்ளெண்ணெய் படிகால்
லயரு நிலதால் உவேர் கால்ப்பலம் மொழிதாரும்
கலந்தெரி பதம்வடி

தேசவெற மண்டலம் பாதமது ரண்டிரும்
தேய்த்திடு கால்ப்பலம் சித்திர
மூலிவேர் முலைப்பால் விட்டரைத் தெண்ணெய்
சேரு கான்படி யதனிலே

நேசமுறவே கரைத்தெரி பதந்தனில் வடி
நிதிகலச மதனி லடைநீ
நிதம்நிதம் சிரசினில் கொஞ்சமிது தேய்த்திடு
நிசமாக ஒருமண் டலம்.

வாசமுறு பாதகேசந் தனக்கெண்ணெய் யிவ்வகை
செய்து தேய்த்து வருகில்
வரிசை செவி மந்த மொழிந்துடன் காதினில்
வருகுத் திரச்ச லசமே.

௨௧

௨௭௭. செவி நோய்க்கு எண்ணெய்

3.325 மி.லி நல்லெண்ணெயில், 5கி நற்சொறிஞ்சி வேர்ப்பட்டையைத் தாய்ப்பாலாற்றி அரைத்து விழுதைக் கலந்து காய்ச்சி பக்குவத்தில் வடித்து வைக்கவும். ஆறின பிறகு ஐந்து துளிகள் காதில் விட்டு வழியாதவாறு அதன் மீது பஞ்சினை வைக்க காதிரைச்சல், செவிக்குத்து போன்ற செவி நோய்கள் பலவும் நீங்கும்.

பல்வலிக்கு, சுணவேரினையும் நொச்சிவேரினையும் சிதைத்துக் கசக்கிப் பிழிந்து சாறெடுத்து அச்சாற்றினை, மேலே எண்ணெய் ஊற்றிய காதினை நீக்கி, மற்றொரு காதில் மூன்று துளிகள் விட வருத்தம் தரும் நோய்கள் பலவும் வாதம், தந்தநோய், நீங்காத தலைவலி தீரும்.

ஆ. செவி நோய்க்கு எண்ணெய்

இரைத்தசெவி நோய்தனைக் கெண்ணெய் படிகா
வளர்ந்தியல் நற்கொழிஞ்சி வேர்த்தோல்
இதுகழுந்தி சிளமுலைப்பால்: விட்டரைத்துடன்
எண்ணெய் தனிலே கலக்கி
விரைந்துடன் காச்சிறுத்த தஞ்சுதுளி காதினுள்
விட்டுமேல் பஞ்சு வைக்க
விரிட்ட காதிரைச்சல் செவிக்குத்து முதல்
மிக்க செவிநோயெலாம் போம்.
தரித்திட பல்லதுக்குழ் மறுபிறந் தன்னிலே
தாறாறு கனவேர் தைவேளை
சதைத்துக் கசக்கி மறுபக்கத்தில் மூன்றுதுளி
சரசர வெனவே ஒழுக்க
வருத்தமுறு தரணத்தில் நோயெலாந் தீருமக
வாதமொடு ஏதந்த ரோகம்
மாறாதவிரு தலைவலி யகலு நிசமிது
வகுத்திடினை கும்ப முனியே.

299

300. சீக்காதுக்கு எண்ணெய்

~~ஏட்டைப் பார்க்க வேண்டும்~~

தேங்காயெண்ணெய், வேப்பெண்ணெய் சாறு இவையிரண்டையும் 1:3லி எடுக்க. கருஞ்சீரகம், அதிமதுரம், வசம்பு, கார்கோவரிசி, குங்கிலியம், அபினி, காசுக்கட்டி, களிப்பாக்கு, வேம்பாடம் பட்டை, பாம்புச்சட்டை, மான்தோல், பூநாகம், நண்டுக்கொழுப்பு ஆகிய பதின்மூன்றையும் இடித்துச் சுத்தி செய்து அரைத்து அவ்வருந்தை மேற்கூறிய எண்ணெயில் கலந்து கொள்ளவும்.

அப்பேற்றி எண்ணெயைக் காய்ச்சி பக்குவத்தில் வடித்து கலசத்தில் அடைத்து துணியினால் வேடு கட்டிக் கொள்ளவும். பக்குவமடைந்த எண்ணெயைத் தலை உச்சியில் வைத்துவிட சீழ் வடியும் காதில் ஏற்படும் ^ வலி, குத்துதல் போன்றவை குணமாகும். சீழும் காதினின்று வடியாது.

245 →

151. அ. காதில் வருகிற சீக்காதுக்கு எண்ணெய்

பெரிய தேங்காயெண்ணெய் படியொன் றளந்து
பேய்ப்பீர்க்கிலைச் சாறுசம னோர்
பெருகவிடு காரியச் நதிமதுர மானதும்
பேர்தரு வசம்பு கார்கோல்
கரியகுங் கிலியமொடு அபினி காசுகட்டி
களிப்பாக்கு வெம்பாடமும்
கடியபாம்புச் சட்டை மான்றோல் பூநாகமும்
கனதை நண்டுக் கொழுப்பு
வரிசைபதி மூன்றிடத் தரைத்துக் கரைத்துடன்
வார்த்துவிடு எண்ணெய் தனிலே
மங்காம லெரிபதம் வடிகலச மதிலடை
வழுவாமல் வேடு கட்டு
ஒருபத நினைந்துச்சி நீதிவிடு சீக்காது
குருகுர்க்க கொண்டு வலிகள்
ஒடுமியக நின்று குத்துதல் எவுந் தகையுமிதம்
கூறினான் கத்தி சனே.

300

30. காதில் வருகிற நோய்களுக்கெல்லாம்

~~எண்ணெய்~~ தைலம்

காதில் ஏற்படும் நோய்கள் தீருவதற்கான தைலத்திற்கு கோழி முட்டை, நிலவேர், முசுறுமுட்டை, வலிமையுடைய வெள்ளுள்ளி, குக்கில், நண்டின் சதை, வசம்பு, ஆகியவற்றை வகைக்கு 5 கி எடுத்து சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தித்து இடித்துப் பொடி செய்ய வேண்டுவதைப் பொடித்து அனைத்தையும் சேர்த்துக் காய்ச்சி பக்குவத்தில் வடித்து கலசத்திற்குத்துணியினாலான வேடினைக்கட்டிக் கொள்ளவும்.

இத்தைலத்தை காதில் குறிப்பிட்ட துளிகள் விட்டு பத்து நாட்கள் பஞ்சினால் அடைக்கவும். காதடைப்பு, சீதளத்தினால் வலித்தல் குத்தல் வலி, சீழ் வடிதல், காதிரைச்சல் காது மந்தம், தோஷங்கள் ஆகியவை தீரும். கிருமிகள் அழியும்.

நோய்

அ. காதில் வருகிற ~~வியாதி~~களுக் கெல்லாம் 1

~~எண்ணெய்~~ தைலம்

கர்ணத்தில் வருகிற நோய்கள் யாவும்
பறந்திடக் கைகண்ட தயிலமதுகேள்
கனகோசி யண்டநிலவேர் முசிறு முட்டையும்
கனதை வெள்ளுள்ளி ருக்கில்
சொர்ண மது போல நண்டுநிணம் வசம்பானதும்
தாக்குவகை யோர் கழஞ்சு
துப்பரவு தாகக் கலந்துரக் காச்சிவடி
தாளைதனில் வேடு கட்டு
திண்ணமது காதினில் தைசநா ளடைத்திடு
செவியடைப் புனைவ குத்தல்
தீப்பாய்ச்சல் மாறும் விலகி கிருமிசதை ளொழுகும்
பறந்திடும் காதிரச்சல்
வண்ணமுறு செவிடு செவிமந்தமு மகன்றிடும்
செவி பனிச்சைனத் திறக்கும்
மற்றுமொரு தோஷங்கள் சாராது கர்ணநோய்
வகைதீரு மென்மை யிதுவே.

301

302. வாயில் வருகிற வியாதிகளுக்குக் கொப்பளிக்க எண்ணெய்

பெருங்குமிழ், மருது, எருக்கு, பலா, இண்டலைப்பாலை, வன்னி, மருக்காரை வெள்வேலம்பட்டை ஆகியவற்றைச் சம அளவு எடுத்து மேலிலைகளின் இலைகளை அரிந்து 4 உ. 8 வி தண்ணீர் உள்ள பெரிய பாத்திரத்தில் போட்டு ~~[illegible]~~ அடுப்பேற்றி வைத்து காய்ச்சி பக்குவத்தில் இறுத்துக் கொள்க.

எலுமிச்சம் பழச்சாறு, தேங்காய் எண்ணெயைச் சம அளவாக 1.3 வி சேர்க்க. வெண்குந்திரிக்கம், துரிசு இவை யிரண்டையும் வகைக்கு 2 கி எடுத்து இக்கலவையிலிட்டு எரித்து பிறிதொரு கலசத்தில் இறுத்து வைக்கவும். இவ் வெண்ணெயில் கோழியின் இரத்தத்தை விட்டுப் பின் எடுத்து கொப்பளிக்க வாய் நோய் அனைத்தும் தீரும். பல்லீற் றிற்றில் ஒழுகும் இரத்தம், வீக்கம், பல்லரணை, பல்குத்து, சீதளத்தினால் வரும் பல்வலி ஆகியவை இவ்வெண்ணெ -யால் தீரும். பல் பலம் பெறும்.

[signature] 15/9/04

152அ. வாயில் வருகிற வியாதிகளுக்குக் கொப்பளிக்க எண்ணெய்

ஓதுவென் வாயில்வரு ரோகங்களுக் கெல்லாம்
உறுதி குமிழ்மரு தெருக்கு
உயர்பலா கொகுடைவேம் பாலை வன்னியும்
உறுமருக் காரை தானும்
காதல்வென் வேலப்பட்டை வகைசமனாளீந்திடு
கைப்பாண்ட மிருதுவி னீர்
காய்ந்திருந்தே பசுச்சா றெண்ணெய் படிசமன்
கருதும் வெண்குங் கிருக்கம்
ஈதுடன் துரிசு 2 ங்குசம் நாற்கழஞ்சு சாறவீத
திருத்துவை கலச மதனில்
இதிலங்கொளி கிரந்தம் விட்டுக் கொப்பளித்திடு
ஏகிவிடு நோய்கள் தானும்
பாதுசேர் குவடு பல்நெறில் வருவீக்கம்
பல்லறணை பல்குத் தினைச்சல்
பல்சுவலி சீசலம் பல்லசை வகன்றிடும்
பகர்ந்த வழுவா குமே.

302

303. பல்வலி, கிடைச்சலுக்குக் கொப்பளிக்க எண்ணெய்

வெள்வேலம்பட்டை 280 கி எடுத்து அதனுடன் ஆல், அரசு, அத்தி, இத்தி மருதம்பட்டை ஆகியவற்றை வகைக்கு 105 கி எடுத்து அரிந்து, 5.3 லி தண்ணீரில் போட்டு அடுப்பேற்றி காய்ச்சி நான்கிலொரு பாகமாய்ச் சுருக்கிக் கொள்ளவும். நல்லெண்ணெய் 2.6 லி, அமுக்கரா, பொன்னிறமான உயர்ந்த வாழை, குமிழ், கோரைக்கிழங்கு, சிறுவழுதலை கருங்காலி வேர், இருவகை மெழுகு, தோகைப்புல் கத்தரி, அதிமதுரம், சடாமாஞ்சில், விரலி மஞ்சள், பூசு மஞ்சள், கறிமஞ்சள், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், செம்பருத்தி, இரசகற்பூரம், மஞ்சிட்டி, திருநீற்றுப்பச்சை, இலவங்கப்பூ மதனப்பூ, சாதிக்காய், கல்மதம் ஆகிய மருந்துப் பொருட்களைச் சம அளவெடுத்துப் பொடித்துப் போட்டு காய்ச்சி பதத்தில் வடித்திறக்கிக் கொள்ளவும். இவ்வெண்ணெயை அளவறிந்து கொடுக்க பல்வலி, கிடைச்சல் குணமாகும்.

ஆ. பல்வலி, இடைச்சதுக்கு கொப்பளிக்க எண்ணெய்

அருளான வெள்வேலம் பட்டைபல மெட்டதில்
ஆலரசு அத்தி இத்தி
அழகு மருதம்பட்டை முப்பல மரிந்திட்டுத்
தூறல் குறுணி தனில் விட்டெரி
பரிசுட நாலிலொன் றாயிறுத் தெண்ணெய்
படிரெண்டு முன்பட்டை யசுவம்
மலர்சுவற்ண சுண்டிகண்டன் தாதி இலிங்க
பகர்முத் தஞ்சிறு வகுதலை
பொருகரும்பு காலிவேர் பொன்மெழுகு சோகைப்புல்
இங்க மதுர மாஞ்சி
புகுமும் மஞ்சளிருந்த முப்பலை துட்டு
பூரஞ் சுரதார் கைப்பு
மறைவளைய மஞ்சட்டி பச்சை இலுங்கு மலர்
மதனப்பூ சாதிக்காய் கல்மத
நேரெரித்து துவட்டி கொப்பளித்திடு நைந்த
பல்வலி இடைச்சல் தீருமே.

303

304. பல்லரணை, தொண்டையூறல் மண்டைக்கரப்பான், பீனசத்துக்கு எண்ணெய்

அரளிப்பூவின் மொட்டு, சித்திரமூலிவேர், பூவரசங்காய், மருள்கிழங்கு, ஆரைக்கீரை, வெள்வேலம்பட்டை, கோட்டம், கருஞ்சீரகம், அதிமதுரம், வசம்பு, ஆகியவற்றை வகைக்கு 10 கி எடுத்தரைத்து வேண்டிய அளவு எண்ணெயில் கலந்து கொள்ளவும். அடுப்பேற்றி எண்ணெயைக் காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்திறக்கி வேறொரு கலசத்தில் ஊற்றி துணியினால் வேடு கட்டிக் கொள்ளவும்.

அளவுடன் எண்ணெயைக் காதில் விட்டுத் தலையிலும் தேய்த்து வெந்நீரில் குளிக்க வேண்டும். பல்லரணை, பல் நோய்கள், தொண்டையூறல், மூக்கில் நீர் பாய்தல், பீனசம், மண்டைக் கரப்பான், அரிப்பெடுத்தல் ஆகிய நோய்கள் இவ்வெண்ணெயால் தீரும்.

153. அ. பல்லரணை தொண்டை யூறல் மண்டை கரப்பன் பீனிசத்துக்கு எண்ணெய்

அரலி மொட்டுச் சித்திர மூலிவேர்
மூவரசங்கொம்புகாய் முல்க் கிழங்கு
ஆறை வெள்ளிலைப்பட்டை கோட்டமொடு கரிய
சீரகி மதுரமும் வசம்பு
கருதோடமே வகைக்கிரு கழஞ்சாக வரை
கரைத்துவிடு எண்ணெய் தனிலே
காய்ச்சுபதம் மெழுகதாம் வடிகலச மதிலுடன்
கலங்காமல் வேடு கட்டு
இருமடிக்கு மெண்ணெயுடு காதிலடை சிரசின்று
தேய்த்து வெந்நீரில் மெழுகு
திருநோய் பல்லரணை தெந்தத்தில் நோய்களும்
சேர்தொண்டை யூர்தல் செம்மல்
வரிசையாம் நாசிநீர் பாச்சலொடு பீனிசம்
மண்டைக் கரப்பா னூர்தல்
மாறுமென் றறுமுகன் குறுமுனிக் கருள்செய்த
மகிமை ஒருவுப தேசமே.

304

305. மண்டைக் குத்துக்கு எண்ணெய்

வெள்ளைமிளகு, தான்றி, கருடக்கொடி-யின் வேர், இருப்பைக்கட்டை, அதிமதுரம், சுக்கு, அரத்தை, வால்மிளகு, இசங்கு வேர், பூனைக்காலி, திப்பிலி, ஆகிய பத்து மூலிகைகளை வகைக்குச் சம அளவாக எடுக்க. 1.3லி தேங்காயெண்ணெயில் மேற்கூறிய சரக்குகளைப் பொடித்துப் போட்டு எரித்து காய்ச்சி மெழுகு பதமாகும் போதிறக்கி கலசத்தில் வடித்துக் கொள்ளவும்.

ஆறிய எண்ணெயைப் பதமாக எடுத்துத் தலையில் தேய்த்துப் பின் வெந்நீரில் குளிக்க வேண்டும். புளிப்பு, கசப்பான பொருட்களையும் நீக்க வேண்டும்.

தலைக்குத்து, உச்சி இடித்து வலித்தல், மண்டைவலி, நரம்புவலி, ஆகியவை இவ்வெண்ணெயால் தீரும்.

250

ஆ. மண்டைக்குத்துக்கு எண்ணெய்

வெண்மிளகு நாணி கருடக் கொடியின்
வேரிருப்பைக் கட்டியதி மதுரமும்
வேர்க்கொம் பரத்தை வால்மிளகு கார்சீருடன்
கிரசு திப்பிலிகள் தானும்
எண்ணரிய பத்துவகை யொரிடைய தாகவே
இனிய தேங்கெண்ணெய் படியொன்
றிதனிலிடி யொடியது கலந்தெரித்தே விட்டு
இன்பமாம் மெழுகு பருவம்
திண்ணமுறு கலசமதிலே பதன மாகவை
சிரசினிற் றேய்த்து முழுகு
திரமான பத்தியம் புரிகைப் பிணிப்புகேள்
இட்டமுற தின்று தின்று
நண்ணிய தலைகுத்து உச்சியிடி மண்டைநோய்
நரம்புவலி தீரு மென்ன
நானிலம் புகழ்பொதிகை முனிவனுக் கருமுருகன்
நவின்றருளு வெஷை கமே.

305

306. ஓயாத மண்டைக் குத்துக்கும் ஒருதலை வலிக்கும் எண்ணெய்

1.3 லி நல்லெண்ணெய் எடுக்கவும். கஞ்சாவை நண்டுடன் இடித்துப் பிழிந்த சாற்றையும் 1.3 லி எடுத்துச் சேர்க்கவும். இலுப்பைக்காய் 15 கி, எடுத்தரைத்து எண்ணெயில் கலக்கவும். அடுப்பேற்றி எண்ணெயைக் காய்ச்சும் போது 5 கி அபினைப் பொடித்துப் போட்டு மெழுகு பத அளவில் இறக்கி வேறொரு கலசத்தில் வடித்துக் கொள்ளவும்.

இவ்வெண்ணெயை ஒன்று விட்டு ஒரு நாள் தலையில் தேய்த்து வெந்நீரில் குளிக்கச் செய்யவும். உப்பு, புளியை நீக்கவும். இவ்வாறு கடைப்பிடிக்க ஓயாத மண்டை குத்து ஒருதலைவலி, சீதளவலி நரம்புவலி மண்டைக் கொதிப்பு ஆகிய நோய்கள் குணமாகும்.

154. அ. ஓயாத மண்டை குத்துக்கும், ஒருதலை வலிக்கும் எண்ணெய்

நலமான எண்ணெய்படி கொல்லாங்கோவ் காவ
நன்கு கோரக்கர் மூலி
நண்டுட னிடித்துப் புளிந்துவரும் சாரமதன்
நலமாக விண்ண மதிலே
அயரா திருப்பை தருகாய் முக்கழுஞ்
சரைத்துக் கரைத்ததில் விடு
அனதுறக் காய்ந்து வருபோ திருகெழஞ்சலின்
அழகான மெழுகு பருவம்
உயர்வான கலசமதில் வடிபதன மாவை
ஒன்றைவிட் டொன்று முறையாய்
உ ஆதிதனை தேய்த்து வெந்நீர் மெழுகுப்ததியம்
உப்பொடு புளிப்ப கற்று
துயரறத் திருமோயாத மண்டை நாத
தொருத்தலை வலியுளச்சல்
சூதரம் நரம்புவலி மண்டைக் கொதிப்பினை
அருவிக்கும் பஞ்சா குமே.

306

307. பீனசத்துக்கு நாசியில் நிறுத்த எண்ணெய்

தேங்காயைத் துருவி எடுக்கவும். முருங்கைப்பூ, கஞ்சா இலை, புளிவிதைத் தோல் (புளியங்கொட்டைத்தோல்) ஆகியவற்றை வகைக்கு அரைப்பிடி, கருடப்பச்சை, துருசு வகைக்கு 4 கி எடுத்தரைத்து தேங்காய்த் துருவலில் கலந்து வெயிலில் வைத்து கிளறி வைக்கவும். நேரம் கழித்துப் பார்க்க தேங்காய்ப்பாலானது காய்ந்து நெய் ஆகும் போது எடுத்துப் பிழிந்து கண்ணாடிக் குப்பியில் அடைத்து வைக்கவும்.

அவ்வெண்ணெயிலிருந்து ஆறு துளி மூக்கில் விட்டு அடைத்து வைக்கவும். இவ்வாறு ஏழு வேளை செய்ய பீனசங்கள், பருவத்தில் குத்து, ஒருத்தலைவலி ஆகிய நோய்கள் குணமாகும்.

ஆ. பீனிசத்துக்கு நாசியில் விடுத்த எண்ணெய்

நற்பழந் தேங்கா யுடைத்தரைத் திருகி
நன்கலத்தில் முருங்கை வேரும்
நன்னுக கோரக்கரிலை புளிவிரைத் தொடன்
நவில்வகைக் கறைப்பிழி யதாய்
கற்பிணைய தோக்கரு பச்சை தனிலேயெடு
அய கறைக்கண்ட திருகழ்க்கச
கலந்தரைத்தே விரவி ரவிதனில் கிண்டிவை
கந்ததபால் சுவறி நல்ல
சொற்ப நெய்பருவ மதுதனி லெடுத்தேபிழி
சொல்லரிய எண்ணெ யதனை
தூய்மையுறு சீசாவிலே பதன மாகவை
துளியாறு நாசி தனிலே
அற்புதம் போலடை யெகு உபொகுது பத்தியம்
அகன்றிடும் பீனி சங்கள்
அரிதான புருவத்தில் குத்தொருத் தலைவலி
யகன்றிட அரைத்தன் னிதே

307

308. பீனசத்துக்கு நாசியில் நிறுத்த எண்ணெய்

குப்பைமேனி, கையாந்தகரை, அகத்தி, தும்பை, தைவேளை, ஆடுதீண்டாப் பாளை, ஆகிய மூலிகைகளின் சாறு களை வகைக்கு 162.5 மி.லி எடுக்க, சாராயம், தேங்காயெண்ணெய் இவை யிரண்டையும் வகைக்கு 325 மி.லி எடுத்து ஒன்று கலந்து கொள்ளவும். பண்ணைக்கீரையையும் கருஞ்சீரகத் தையும் வகைக்கு 5கி எடுத்து பொடித்து எண்ணெயில் கலந்து காய்ச்சி மெழுகு பதமாகும் போது கற்பூரத்தை நன்கிடித்து தூவி விட [illegible]த்தில் வரும் நோய்கள் தீரும்.

மூக்கில் வரும் பீனசம், [illegible], அண்டநோவை, மூக்கில் இரத்தம் வடிதல் ஆகிய நோய்களை இவ்வெண்ணெயால் நீங்கும்.

155. அ. பீனிசத்துக்கு நாசியில் நிறுத்த எண்ணெய்

தினகுப்ப மேனி கையயாந் தகரையும்
நறுகரி கூரகத்தி தும்பை
கடலாடி தைவேளை யாடுதீண்டாப் பாளை
கருஞ்சார் வகையரைக் கால்
பனியொத்த சாறாயந் தேங்குருக் கெண்ணெய்
காற்படி வீதம் விட்டபோது
பண்ணையொடு கரிய சீரவகை கடுகுசாதி
பசுந்தா ளாதக வேதான்
மனமெய்க்கவே பொடிதூவி நீகாச்சியே
வடிபத மெழுக தாக
வளமான கண்டத்தின் மூதுவரு பண்ணைநூடன்
நோய்க்கெல்லாம் வரிசை நாலஞ்சுதுள்ளி
இனமிக்க நாசில்விடு பீனிசம் சிறிவரு
ரத்தமொடு மண்ட சூலை
இனிதிலா நோய்திரு முத்திதரு பத்திய
மியற்றினை கும்ப முனியே.

308

309. பீனசத்துக்கு எண்ணெய்

நல்லெண்ணெய், பசும்பால், கரிசலைச் சாறு
நெல்லிக்காய்ச்சாறு ஆகியவற்றை
வகைக்கு 1.3லி எடுக்க. அதிமதுரம்,
மிளகாய் சேர்த்தரைத்து அவ்விழுதை
எண்ணெய்க் கலவையில் கலக்கவும்.
அனலுள்ள அடுப்பில் வைத்துக் காய்ச்சி
மெழுகு பதத்தில் வடித்து வேறொரு
கலசத்தில் துணியினாலான வேடு
கட்டி பத்திரப்படுத்தி வைக்கவும்.

அவ்வெண்ணெயை ஒரு
நாள் விட்டொரு நாள் தலையில்
வார்த்துத் தேய்த்துப் பின், எலுமிச்சை
இலை, ஆவாரையிலை, சீயக்காய்,
அரைப்பு இவற்றைச் சேர்த்து தேய்த்து
வெந்நீரில் தலை முழுகச் செய்யவும்.

இவ்வாறு செய்ய அறுவகைப்
பீனசமும் செவிமந்தம், ~~[illegible]~~, மூக்கடைப்பு,
காதடைப்பு, கண்புகைச்சல், பித்தக
மயக்கம் ஆகிய நோய்கள் தீரும்.

ஆ. பீனிசத்துக்கு எண்ணெய்

செயலான எண்ணெய் படியொன்று பால்விடு
சட்டியில் சேர்பசும் பால்படி
சமன்திரண்டு கரிசாலை நெல்லிக்காயின் சாறுமே
சேர்த்திடு அந்த விதம்

அயரா தரைப்பல மதுர மான்விட்
டரைத்துக் கரைத்ததில் விடு
அருப்பெற்றுக் காச்சிவடி மெழுகுபத மாகவே
அதுகலசம் வேடு கட்டு

மேலாக ஒன்றைவிட் டோர்திநஞ் சிரசினில்
வார்த்து உயிலிலை யாவரை
வரிசை சீயக்கா யரைப்பிட்டு வெந்நீரில்
வளமாக முழுகி வருகில்

சீயலாக வருகின்ற பீனிசமிரு மூன்றுடன்
செவிமந்தம் நாசியடைப்பு
செவியடைப்புக் கண்புகைச்சல் லோடு பித்தக்
கிறுக்கமுதல் லண்டா தமே.

309

310. பீனசத்துக்கு எண்ணெய்

எலுமிச்சை, இஞ்சி, துளசிக் கொழுந்து, பொன்னாங்காணி, கரிசாலை, ஆகியவற்றின் சாறுகளையும் செவ்விளநீரையும் வகைக்கு 1·3லி, நல்லெண்ணெயையும் 1·3லி அளவெடுத்து ஒரு சட்டியில் ஊற்றிக் கொள்ளவும்.

அடுப்பெரித்து இரண்டு விரல் கனமுள்ள விறகினால் எரித்து எண்ணெயைக் காய்ச்சி பதமறிந்து கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். ஒருநாள் விட்டொரு நாள் அவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்து சில நேரங் கழித்து அரைப்பு தேய்த்து வெந்நீரில் தலை முழுகவும்.

பீனசங்கள், ஒருத்தலைக் குத்து ஆகிய நோய்கள் இவ்வெண்ணெயால் நெருப்பிலிட்ட பஞ்சு போல் இன்மாகும்.

156.அ. பீனிசத்துக்கு எண்ணெய்

சம்பீர மிஞ்சி பசுமஞ்சிளம் துளசியும்
நருசிதை கிரிசா லையும்
கரிசாறு வகைகள் செவ்விள நீருநாழி
நாழியாக தக்கபடி ஒன்றாயெள்ளெண்ணெய்

வம்பான மூன்றுமொரு சட்டிதனி லேவிடு
வலிதடுப் பேற்றி கமல

மங்காம லேயெரி வயதுமுறை கண்டுடன்
வருபத மறிந்து வடிநீ

சிம்பாத கஸ்சமதி லேயடைத் தொன்றரைத்
தினமுறை யதாக வேதான்
சிரசினிற் றேய்த்து தறைப்பிட்டு வென்னீர் முழுகு
தீர்க்கமாம் பீனி சங்கள்

வெம்பாத சீசிரிய ஒருத்தலைக் கித்துடன்
வெங்கனல் பஞ்சா மென
வேலாயுத கடவுள் தெட்சண முனிக்கருள்
விந்தையுப தேச மிதுவே.

311. <u>மீனசத்துக்கு எண்ணெய்</u>

துளசி, பொன்னாங்காணி, நாகவல்லி
கைதோன்றி, கழுகு, சுண்டை, முதியார்
கூந்தல் புளியிலை ஆகியவற்றின்
சாறுகளை வகைக்கு 1·3லி எடுத்து
அதனுடன் எலுமிச்சம்பழச்சாறு, காடி
நல்லெண்ணெய் இவற்றையும் வகைக்கு
1·3லி எடுத்துக் கலந்து கொள்ளவும்.
அகில், கிராம்பு, வங்கபத்திர நாகம்
(வெற்றிலை) கடுக்காய், நெல்லிக்காய்,
தான்றிக்காய், ஏலம், மஞ்சிட்டி, கடா
மாஞ்சில், தக்கோலம், அரிசம் விதை
வங்கம் (சிறுகத்தரி) சுக்கு, மிளகு, திப்பிலி,
வெட்பாலை, பூலாவிருட்சம்,
கச்சோலம், சாதிப்பச்சை, நற்சீரகம்,
கருஞ்சீரகம், குங்குமப்பூ, ஆகிய மருந்துப்
பொருட்களையும் மூலிகைகளையும்
வகைக்கு 5கி எடுத்து சங்கம்பழச்
சாறூற்றி அரைத்து மேற்சொன்ன
கலவையில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும்.
பக்குவத்தில் வடித்திறக்கி தலையில்
தேய்த்து குளிக்க மீனசம், தினவு,
கண்டக்கரப்பன் குணமாகும்.
(தொண்டை)

ஆ. பிணிசத்துக்கு எண்ணெய்

துளசி பொன்னாங்காணி மகிழ்நாக வல்லிகை
தோன்றி கருகவரி தாறும்
சண்டை முதியார்கூந்தல் புளியிலைச் சாறுடன்
துலங்கரை படிய தாக

வளர்பழச் சாறுபால் கொடிநல் வெண்ணெயும்
வகைநாழி யகில்கி ராம்பு
வங்க = பத்திரி நாககுப் பச்சை யேலமும்
மஞ்சட்டி மாஞ்சி தக்கோல்

அளிசம்விரை வங்க முக்கடுகு வெப்பாலையும்
அதிக பூலா விருசுடம்
ஆனைக்சோலம் சாதிப்பச்சை யாருசோரகம்
அழகான குங்கு மப்பூ

களஞ்சொன்ன ரோபிசம் கம்பழச் சாற்றனை
கரைத்ததுடன் காச்சி வடிநீ
கருணையாய் முருகு பிணிசந்தினைவு கண்டம்
கரப்பன்மற் றகலு மிதுவே.

311

312. ஏழுவகை பீனசத்துக்கு எண்ணெய்

தொண்டையைத் தாக்கும் நோய்களுக்கு நல்லெண்ணெய் 1.3லி, கீரிசாலை, அருகு, பொன்னாங்காணி, வெற்றிலை, முசு முசுக்கை, கஞ்சா, மூக்கிரட்டை, ஊழலாற்றி, அத்திப்பட்டை ஆகிய மூலிகைகளின் சாறுகள், எலுமிச்சம்பழச் சாறு, பசும்பால் ஆகியவற்றை வகைக்கு 1.3லி, இஞ்சிச்சாறு, தண்டைச்சாறு ஆகியவற்றை வகைக்கு 2.6லி எடுக்க.

கடுகுரோகணி, குரோசாணி, திப்பிலி, கருஞ்சீரகம், சிறுநாகப்பூ, திப்பிலி வேர், பெருங்காயம், செண்பகப்பூ, அதிமதுரம், சதகுப்பை, கஸ்தூரி, தாளிசபத்திரி, அக்கரா, நெல்லி, அதிவிடையம், அழிஞ்சில், சிறுதேக்கு, கீழாநெல்லி, இஞ்சி, முள்கரணை, சித்திரமூலவேர்,

157அ ஏருவகை பீனிசத்துக்கு எண்ணெய்

கண்டத்தின் மேல்வரும் பீனிக்கு நல்லெண்ணெய்படி
குரிசாலை யவரி பொன்னாங்
காணி வெற்றிலை புசமொசக்கை
கஞ்சாவு முக்கரட்டையொடு உளவத்தி
பண்டை யத்திபேட்டைக்கு சம்பளச் சாறு
பசுவின்பால் வகைக்கோர்படி
பசுமிஞ்சி யாதண்டைச்சார் வகைக்கிரண்டுபடி
பாலெண்ணெய்ச் சாறு மதிலேர்
திண்டாடு கற்கவகை ரோகணி கோரோசனை
திப்பிலி கருஞ்சீரகம்
திருநாகமலர் திப்பிலி மூலமொடு காயமும்
செண்பகப் பூவு மதுரம்
அண்டர்ர சதகுப்பை கஸ்தூரி தாளிசபத்திரி
அக்கரா நெல்லிவிடையம்
அமிஞ்சி சிறுதேக்கு கீழ்க்கா நெல்லிவேர்
முள்கிரனை சித்திர மூலமே.

3௨

313 - வால்மிளகு, ஜீரகம் ஆகிய இருபத்து மூன்றனுள் ஒன்றை விட்டு மற்ற இருபத்திரண்டு மருந்துப்பொருட்களை மேற்சொன்ன சாறூற்றி அரைத்து எண்ணெயில் கலந்து கரைத்து அடுப்பேற்றி வைத்துக் காய்ச்சி மெழுகு பதமாக வரும் போது முருங்கை வேரினை ஒரு கைப்பிடியளவு போட்டு கலசத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும்.

அவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்து பாசிப்பயறு மாவும் சீயக்காயும் கலந்த மாவினைக் கொண்டு வெந்நீர் ஊற்றி தலை முழுகவும். கசப்பு, புளிப்பு, புகையிலை இவற்றையும் பெண்போகத்தையும் நீக்க வேண்டும். பீனசங்கள் வாட்டும் போது இவ்வெண்ணெயைப் பயன்படுத்தலாம். ஏழுவகைப் பீனசங்கள் தீரும்.

43 258

மி

ஆ. மூலமொடு வால்மிளகு ஓமகஞ் சிறுபத்து
மூன்றிலொன் றின சிறவே
சிற்றுமுன் சரக்குவகை யருபத்தி ரண்டுமிட்டு
முதுபழச் சாற்றிவிட் டரை
வேலைமுன் னெண்ணெயதினிற் கரைத்து காய்ச்சி
மெழுகுபத மதனில்
சுருங்கை வேர்ப்பிடியதொன்றிடு வடிகலசமதி லடை
மிக்கமுறை நாலிலோர் நாள்

காலமுந்த வெண்ணெய் தேய்பாசியாம் பயற்
சியக்கா யிடவைத்தெற்றில் மூழ்கு
கைப்புப் புளிப்புடன் புகையிலை யகற்றிடு
காரிழை புணர்ச்சிவிட் டகன்றிடு

ஓலமுறு நாளெலாங் கூட்டலாம் மண்டைதனை
அண்டான நோய்க ளெல்லாம்
ஒழிந்துபோ மேருவகைப் பிரசமேன்றிடும்
உயர்பிரம னருள்நூ லிதே.

313

314. பொடுகுத் தொல்லைக்கும் வாய்வுக்கும் எண்ணெய்

நல்லெண்ணெய் 1.3 லி, வெற்றிலை கரிசலாங்கண்ணி, நாயுருவி, வேலிப் பருத்தி, புளி ஆகியவற்றினை இடித்துச் சாறாக்கி வகைக்கு 300 மி.லி எடுக்க.

நஞ்சறுத்தான் எனும் நாய்ப்பாலை மிளகு, தான்றி, தலைச்சுருளி, காத் தொட்டி வேர், துரிசு, அகத்தி, வேம் பாடல், கார்கோல், எலிப்புகுக்கை கருஞ்சீரகம் ஆகியவற்றை வகைக்குச் சம அளவெடுத்து மேற்கூறிய சாறாற்றி அரைத்துக் கலவையில் கலந்து காய்ச்சி கொதிக்கவிட்டு மெழுகுபத அளவில் வடித்துக் கலசத்தில் நிரப்புக.

எண்ணெயைத் தலையில் தேய்த்து வெந்நீர், கொண்டு தலை முழுக பொடுகுத் தொல்லை, வாய்வு, காதிரைச்சல், உச்சிக்குத்து, பீனசம் ஆகியவை குணமாகும்.

158. அ. மண்டைச் சூலைக்கும் வாய்வுக்கும் எண்ணெய்

நல்லெண்ணெய் படி நாக வல்லி கரிசாலையும்
நகரை வேலிப் பருத்தி
நண்டுப்பிடித்தே புளிச்சாறு வகைக்கா லதாப
நற்காவ மதனில் விட்டு

தொல்லையறு நஞ்சறுத்தான் மிளகு தாணி
தலைச்சூடி காத்தொட்டி வேரும்
துரிசு புகழ்புற்று வெம்பாடல் காருகோல்
துவங்கிடு மெலிப்பு சுக்கை

கல்லான கரியபோக வகைக்கோர் நிறை
கனதையுறு சாற்விட்டரை
கரைத்துறக் காச்சிவடி மெருகுபத மானபின்
கலச மதிலே புகட்டு

சல்லாப மாமெண்ணெய் தேய்த்து வெந்நீர்
சுழுகுதலை மண்டை சூலை
வாய்வுத கொதிரைச்ச அச்சிக்கத்து பேனிசம்
தருகாது நிச்சயமிதே.

315. மண்டைச் சூலைக்கு எண்ணெய்

1.3லி நல்லெண்ணெய், மாதுளம் பழச்சாறு எடுத்து ஒன்று சேர்த்து, அடுப்பேற்றிய அனலின் மீது கலவையை வைத்தெரிக்கவும். சாறு கலவையினின்று வற்றும் போது 35கி பழங் கிட்டத்தை அரைத்து வடிகட்டி கலவையில் கலக்கவும். எண்ணெயைக் காய்ச்சி தேர்ந்த பக்குவத்தில் வடித்துக் கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். துணியினாலாகிய வேடினைக் கட்டவும்.

குறிப்பிட்ட (லு சிறு துளிகள்) அளவுள்ள எண்ணெயைக் காதினுள் விட்டு அடைத்துத் தலையில் தேய்த்துப் பின் வெந்நீர் உதவியால் தலை குளிக்கவும். சிரசூலை பீனசம் ஒருதலைக்குத்து, கபவாய்வு, மூக்கு நீர்ப்பாய்ச்சல், இவை நெருப்பிலிட்ட பஞ்சு போன்று அழிந்து விடும்.

ஆ. வெண்டைச் சூலைக்கு எண்ணெய்

தந்திர மிலாத நல்லெண்ணெய்படி மாதளந்
தருபழச் சாறுசம னோர்
தானே நிர்மல்விடு அனல்மீது வைத்தெரி
சார்கொஞ்ச மதுவற் றினால்
வந்திடு பழங்கிட்டம் ஓர்பல மரைத்து
வடிகட்டி யதிலே கலக்கு
வாவறக் காச்சுபதம் வடிகலச மதிலடை
வழுவாக வேடு கட்டு
சிந்தனை யடார்திரு செவியா லடைத்துச்
சியில் தேய்த்து வெந்நீரில் முழுகு
சிரதுவை பீனிசம் ஒருதலைக் குத்துடன்
செறிந்திடு சூலை வாயுவு
பந்தமுறு மூக்குநீர்ப் பாச்சலிவை வெங்கனலில்
பஞ்சுபோ லாகு மென்ன
பன்னிரு புயக்குகன் குறுமுனிக் கருள்செய்த
பரமகுரு வுபதே சமே.

315

316. சிரசு நோய்க்கு எண்ணெய்

நல்லெண்ணெய், பால் இவையிரண்டையும் வகைக்கு 1.3லி, முசுமுசுக்கை இலைச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இவற்றைச் சம அளவாயும் எடுக்க. கொத்துமல்லி, மரமஞ்சள், சுமம், ஆண்பனையின் பாளைப்பூ, அதிமதுரம், ஆலம்விழுது, இலாமிச்சம்வேர், வெட்டிவேர், வெட்பாலை, இருவேலி, அனாவரிசி, இங்குமப்பூ, அகில், சீரகம், ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துப் பால் ஊற்றி அரைத்து விழுதைக் கலவையில் கரைத்துக் காய்ச்சி மெழுகுப் பதமாகும் போது வடித்துக் கலசத்தில் அடைக்கவும். மூன்று நாட்கள் கழித்து சிரசில் எண்ணெயை வைத்து பின் சீயக்காய் தேய்த்து வெந்நீரினால் முழுகவும். தலை நோய், மூக்கடைப்பு தலைவலி, கபாலவாய்வு, கண் நோய்கள் ஆகியன தீரும்.

159.அ. சிரசு நோய்க்கு எண்ணெய்

பரிசுகல் வெண்ணெய்படி பால்படி மொசுக்கை
சம்பழநீர் சமவகைக் குரியதாய்
மகாடகொத்த மல்லியொடு மரமஞ்ச ளோமமும்
பணம்பூ கிசிற்றா.. மதுரம்
விரைவில்லவ ரால்விகுந்து ராமிச்சம் வெட்டிவேர்
வெப்பாலை யிருவேலியும்
விளாவரிசி குங்குமப்பூ பூவுருபடி சிறகம்
விலாம்வகை ஓர்கழஞ்சி
கிரிசையாம் பால்விட் டரைத்துக் கரைத்தூக்
காச்சிவடி மெழுகு பருவம்
கலச மதிலேயடை முன்னை நாளடவிற்
கருதி வெந்நீரில் மூழ்கு
வரிசை சிரநோய் நாசடைப்பொடு த்தலைவலி
வருந்திய கபால வாய்வு
மாறும்விழி நோய்களும் மற்றிடுமெனச்
செந்தில்
வடிவேலர் படித்தமி ழிதே.

316

317. சிரதோஷம் 1008 க்கும் எண்ணெய்

அழிஞ்சியின் வடக்கே செல்லும் வேருடன்
1.3 லி தண்ணீரூற்றி அவிவிட்டு நான்கி லொன்றாய்க் குடிநீராய்க் காய்ச்சிக் கொள்ளவும்,
வெற்றிலை, துளசி, குப்பைமேனி, வெங்காயம், ஆடுதீண்டாப்பாளை, ஆகிய மூலிகைகளின் சாற்றினை வகைக்கு 325 மி.லி, நல்லெண்ணெய் 1.3லி, மலையில் இருக்கும் இரிசு 35 கி எடுத்துக் குடிநீர் ஊற்றி அரைத்து அவ்விழுதைச் சாற்றில் கரைத்துக் காய்ச்சிக் கொள்ளவும்,

மெழுகு பதமாகும் போது பக்குவமாக வடித்திறக்கிக் கலசத்தில் நிரப்பவும். ஆலாத்தி கற்பூரம், சாம்பிராணி இவற்றைச் சம அளவு எடுத்துப் பொடித்து எண்ணெயில் வைக்கவும்.

இத் தைலத்தைத் தலையில் தேய்த்துப் பின் சீயக்காயிட்டு வெந்நீரினால் தலை குளிக்கவும். அவ்வாறு செய்ய ஆயிரத்தெட்டு வகை தலைதோடங்கள் நீங்கும்.

[illegible]

47

262

உ

ஆ. சிரதோஷம் அடக்கும் எண்ணெய்

அளிஞ்சி வடவேர் முறித்தரிய வாண்டிடித் தப்பு
படியோர் நாலதாய்
அனலிலிரு நாலிலொன்றாக வெற்றிலை துளசி
அடர்குப்பை மேனி தானும்
வளஞ்செறியு வேள்ளி யாடுதீண்டாப் பாளை
வகைசாறு படியு மக்கு
வரிசை நல்லெண்ணெய் படிஒன்றாக வேவிடு
மலைமேவு மிரிசு பலம்நீ
தளஞ்சேர் கிழாயமது விட்டரைத்தே தேகரை
தப்பாமல் மெழுகு பதமும்
தருகலசமிடு தீபதாபம் வகையோர் நிறை
தங்கவிடு பொங்கு தயிலம்
தொளுஞ்சிரசு தேய்த்தரைப்பிட்டு வெந்நீர் முழுகு
துலையுமாயிரத்தெண் சிரதோஷம்
திருமிது குருமுனிக் கருமுகன் தொகுத்த
தருண மருந்தை தமே. ?

317

318. பித்தத்துக்கு எண்ணெய்

நல்லெண்ணெய் 325மி.லி, வெற்றிலை, முசுமுசுக்கை, கையாந்தகரைச்சாறு, கொன்றை, கொடுப்பை, எலுமிச்சம்பழம் ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 325மிலி எடுக்க. அதிமதுரம், சிற்றரத்தை, செண்பகப்பூ, மரோடு, கோட்டம், இலாமிச்சு, நன்னாரி, கச்சோலம், சதகுப்பை, திருநீற்றுப்பச்சிலை, கிராம்பு, ஏலம், ஊமத்தம் கஸ்தூரி மஞ்சள், சந்தனம் ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து இடித்து மேற் கூறிய சாறு ஊற்றி அரைத்து மீதமுள்ள எண்ணெய் கலந்த சாற்றுக் கலவையில் கலந்து கொதிக்க மெழுகு பக்குவத்தில் பதமாக வடித்து கலசத்தில் ஊற்றிக் கொள்ளவும். துணியினாலான வேடு கட்டி பத்திரப்படுத்தவும்.

அவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்து சீயக்காய் போட்டு வெந்நீர் விட்டு தலை குளிக்க பித்தம், உட்டிணம் நீங்கி உடல் நலம் பெறும்.

48

263

160. அ. பித்தத்துக்கு எண்ணெய்

எள்ளெண்ணெய் ~~பதம்~~ யுழக்கதனில்
வெற்றிலை மொசுமொசுக்கை கையான்
இருளி கொடிவேலை சம்பழச்சாறுவகைக் ~~குழக்கில்~~
குழக்கிதில்
மதுர தார முடனே.

விள்ளரிய செண்பகப்பூ ஏலு கோட்டம்
ராமிச்ச நன்னாரி கச்சோல்
மிக்க சதகுப்பை பச்சிலைக் கிராம்பேலமொடு
விகட கஸ்தூரி மஞ்சள்

கிள்ளமறு சந்தனம் வகைகழஞ் சாகவே
கதிவேர யரைத்தரைத்து
கரைத்தெரித்த வடிமெழுகு பதமாக நீ
கலசத்தில் வேடு கட்டு
மெள்ளவே சிரசினில் தேய்த்தரைப் பிட்டு
வெந்நீர் முழுகிண்டுண்ணுக - பித்தம்
யித்தம் மேல்வாதுப்பட்டு மைமந்திரு முடல்களி
வாகும்
வெல்வர் முனிக்கருளினார்.

318

319. பித்த கிரக்கத்துக்கு எண்ணெய்

வெள்ளாட்டுப்பால், நல்லெண்ணெய் வகைக்குச் சம அளவெடுக்க. முசுமுசுக்கை, கையாந்தகரை, பொன்னாங்காணி, வல்லாரை, நெல்லிக்காய், எலுமிச்சங்காய் ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 3325 மி.லி எடுத்து பால் எண்ணெயுடன் கலந்து கொள்ளவும். இருவேலி, அதிமதுரம், சமுத்திராப்பழம், மிளகு, அரத்தை, கோட்டம், பச்சிலை, கிராம்பு, கச்சோலம், நன்னாரி, சுக்கு, சந்தனம், இலாமிச்சம், கஸ்தூரிமஞ்சள், சதகுப்பை, கருஞ்சீரகம், சிற்றரத்தை, செண்பகம், ஏலம், திப்பிலி, ஆகிய மருந்துப் பொருட்களை வகைக்கு சம அளவெடுத்து ஒவ்வொன்றையும் தனித்தனியே எண்ணெய் ஊற்றி அரைத்துக் கலந்து கலசத்தில் வடித்து வைத்துக் கொள்ளவும். தலையில் எண்ணெயைத் தேய்த்து வெந்நீரூற்றி குளிக்கவும். தலைசுற்றல், பித்தம், உட்டிணம் தீரும்.

49 264

ஆ.

பித்த கிறுக்கத்துக்கு எண்ணெய்

கார்போகி எண்ணெய்படி பாலசமன் மொசுமொசுக்கை
கையான் சீதை வல்லாரையும்
கணநெல்லிக்காய் சம்பழச் சாறு மக்கு
நேர்வாக மதில் விட்டபோது
பாரிலிரு வெளியதிமதுரஞ் சமுத்திராப்
பழமிளா கரத்தை கோட்டம்
பச்சிலை கிராம்பு கச்சோல நன்னாரியும்
பசுமை வேர்க்கொம்பு சந்தம்
தார்வேவ ராமிச்சம் கஸ்தூரி மஞ்சளும்
சதகுப்பை கரிய சீரம்
தாரமொடு செண்பகம் ஏலம் திப்பிலி லவங்கை
சமனிவை ஒவ்வொன்றதாக
சீர்பெற எண்ணெயி லரைத்துக் கலக்கிவடி
வழிசிரசி லொன்றரை வாடாக
தேய்த்து வெந்நீர்விடு தலைசுற்றல்
பித்தமுட்டிணம்
மகலு நிச்சய மிதே.

319

320. பித்தத்துக்கு எண்ணெய்

இருவேலி, கையாந்தகரை இவை இரண்டையும் 105 கி, முசுமுசுக்கை இலாமிச்சம் வேர் இவற்றை வகைக்கு 175 கி எடுத்து இடித்து 10.4 லி இளநீரூற்றிய பாத்திரத்தில் போட்டு ஐந்து நாட்கள் ஊற வைக்கவும். பின்னர் ஐந்தாம் நாள் நான்கிலொரு பங்கான பிறகு வடிகட்டிக் கொள்ளவும்.

35 கி சந்தனத்தைப் பசும் பாலூற்றி அரைத்து மேற்குறிப்பிட்ட சாற்றிலூற்றி பாதியாகச் சுருங்கும் அளவுக்கு., அதில், நறுந்தின்றி, கோரைக் கிழங்கு, செங்கழுநீர்க் கிழங்கு, அம்பு இருவேலி, சிறுகத்தரி, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சிறுநாகப்பூ, ஏலக்காய், கண்டி வெண்ணெய், கச்சோலம் ஆகியவற்றையும்

50 ✓ ௨65

161. அ.

பித்தத்துக்கு எண்ணெய்

திலைகொண்ட பித்தம் ... வாந்திர வெற்றிபெறு
தயில மிருவேலி கையான்

தகரைவகை முப்பலம் மொசக்கை தாமிச்சம்வேர்
சமன்வகைக் கஞ்சு பலமாய்

நிலைகொண்டு டாங்கிடு பாண்டமெண் ணாமூயிலா
விளாதிக் காயிந்தஞ்சு நாள்

நின்று நாலேர் கூறாதாக வடிகொண்டதில்
நேர்மை சந்தன மொருபலம்

விலைகொண் டிடித்தாவின் பாலரைப் படியது
விட்டரைத்தே கரைத்து மிக்க

நேர்பாதி யாக்கு கிறுகும் வேளையில்
வெண்மை நறுந்நிறி முத்தம்

மலைகொண்ட செங்கழுநீர்க் கிழங்கம்பு
சவளாய மிருவேலி மிச்சம்

வங்கமுப்பளை நாகமலர் பச்சை யேலமும்
வளர்கண்டி வெண்ணை கச்சோலம்

3௨0

341. குங்குமப்பூ, கடுகுரோகணி

ஆலாத்தி கற்பூரம், தக்கோலம், ஆகிய இவற்றை வகைக்கு 10கி, வெண்கோட்டம் அதிமதுரம் வகைக்கு 5கி எடுத்து 25கி இளநீர் ஊற்றி அரைத்துச் சேர்த்துக் கொள்ளவும். உ.6லி எண்ணெயையும் கலவையுடன் சேர்க்கவும். நான்கு நாட்கள் தொடர்ந்து எரிக்கவும். காய்ந்து கொதித்து மெழுகு பதமாகும் போது பக்குவத்தில் வடித்திறக்கிக் கொள்ளவும்.

இவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்து சீயக்காய் போட்டு வெந்நீரில் தலை முழுக்க ~~இருந்து~~ பித்தமயக்கம், உச்சித்தலைவலி, சீதவலி, போல வாய்வு, உச்சி வாதம், மண்டையில் சேர்ந்த சளி, மண்டை ஊர்தல், தொண்டையில் கரகரப்பு உண்டாதல் உட்டிணம் ஆகிய நோய்கள் குணமாகும்.

ஆ. கச்சோலம் குங்குமப்பூ கடுகு ரோகணி
கற்பூரமொடு தக்கோல் கார்கில்
வகைக்கிரு கழஞ்சு கழஞ்சுவெண் கோட்டமும்
கனைதை அதிமதுர மொன்று
இச்சையா னைங்கழஞ் சிளநீர் கவிழ்த்தரை
எண்ணெய்படி றெண்டு மிதிலே
இசைந்தெரித் தம்மானைக் கொர்த்தியிடும்
ஒற்றிவுக்
கிந்தவித நாது தினம்நீ

உச்சாக மாகவே காய்ந்துவிடு
உறுதியா மெழுகு பருவம்
உறவாக மெழுகுவெறி பித்தக் கிறுக்கமொடு
உச்சி தலைநோ வளைச்சல்
பச்சுறு கபால வாய்வச்சி வாதத்தோடு
கபாலசனி மண்டை யூர்தல்
பகரு தெண்டைக் கரக்கரப் புட்டிணம்
பறந்திடுமெனப் படிதமி ழிதே

[illegible]

322. பயித்தியத்துக்கு எண்ணெய்

பதினெட்டுவகை இணைப்புநோய் நீடுவதற்கான பொன்னாங்கண்ணித் தைலம் செய்முறை கீழ்வருமாறு.

செங்கழுநீர் முற்றிய வள்ளி இவையிரண்டையும் சமமாகவும் குன்றி, வெண்கொடி கற்றாழை வேர் ஆகியவற்றை வகைக்கு 840 கி எடுக்கவும். 280கி சிற்றாமுட்டி வேரை, 21.4 லி தண்ணீரில் இடித்துப் போட்டு இரண்டு நாட்கள் தொடர்ந்து காய்ச்சி முறைப்படி எட்டிலொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி வடித்து அதே அளவு நல்லெண்ணெயையும் சேர்த்துக் கொள்ளவும்.

வெண்சந்தனம், செஞ்சந்தனம் இரண்டையும் வகைக்கு 35கி, சிறுநாகப்பூ செங்கழுநீர்க் கோட்டம், கருஞ்சீரகம், கிராம்பு, கடுக்காய், தான்றி, புடல், உத்தமதாளி, ஆகியவற்றை வகைக்கு 5கி எடுக்கவும்.

162.அ. பயித்தியத்துக்கு எண்ணெய்

மூவாறு கிரிசமது மோவா நடாங்க
வளர்முகன் சிதேவித் தயிலம்
முதென்மை சிறார் செங்கழுநீர் பலமெண்
முன்றதில்
முந்த முதுவள்ளி சமனும்
பாவான குன்றி(வண்) கொடிகமரி வேர்வகை
பலமி ரெட்டான போது
பகர்சித்த முட்டிவேர் பலமெட் டரிந்திடி
பாண்டமிரு தாணி நீரில்
நாவாமல் நண்டுதின ஆதிக்காயிந் தெட்டொன்று
தாயிவடித்ததை யாருந்து
நகமை நல்லெண்ணெய் சமனதில் விருவ்க்கர
மிருசந்தனம் பலம தொன்று
காவான நாகமலர் செங்கழுநீர்க் கொட்டமும்
கரிய சீரகஞ் சிராம்பு
கனகக்காய் தான்றி புடோதுத்தம தான்வேர்
கழுஞ்சொன்று சமனா கிமே.

322

323. அனைத்தையும் இடித்து அம்மியில் விட்டரைத்து எண்ணெயில் கலந்து நாள்தோறும் மூன்று முறை சிறு தீ கொண்டு எரித்துக் கொள்ளவும். பக்குவபதத்தில் வடித்துக் கலசத்தில் நிரப்பிக் கொள்ளவும். இவ்வெண்ணெயைத் தினமும் தலையில் தேய்த்து சீயக்காய் தேய்த்து குளிர்ந்த தண்ணீரினால் தலை முழுகவும்.

இலுப்பைப்பூ, புடலங்காய், முசுமுசுக்கை பத்தியமாகச் சேர்க்கவும். பயற்றம் பருப்பையும் பசும்பாலையும் சேர்த்து கஞ்சியாகக் காய்ச்சி குடிக்கவும். பூநாகக் குடிநீர், முசுமுட்டைக் குடிநீர் இவ்விரண்டையும் மூன்று நாள் குடிக்கக் கொடுக்கவும். இத்தைலத்தைத் தலையில் தேய்த்து தலை குளிக்க பித்தம் (பயித்தியம்) தீரும்.

ஆ. ஒன்ப தாகயடி யம்மிதனி லேயுறை
யுறைவிவிடு எண்ணெய் தனிலே
உதவு தினமூன்று சிறுதீ யெரித்தே
பதத்துடன் வடிகலச மதனில்
அன்றன்று தேய்த்துநீ குளிர்சல மூழ்கு
நற்பான பத்திய மிருப்பை
யதனமலர் புடோல் மொசுமொசுக்கை
பசும்பயற்றும் பருப்பாவின் பாலும்
வென்றிசேர்க் காச்சு கஞ்சியில் துரும்பொன்று
மில்லாத தரித்ததை நீந்து
விட்டருந்த தெவைதம் கத்தகப் பாலுடன்
மிக்க பூணாக நீரும்
மென்றில்முசி நண்டுநீர் மூன்றுநாள் முன்கொடு
மெருகவிது மூழ்கு தயிலம்
மாறாத பித்தபயித்தியம் கென்றிடும்
வரிசையாது தப்பா துமே.

323

3ஆ4. பயித்தியத்துக்கு முக்கூட்டெண்ணெய்

சிற்றாமணக்கெண்ணெய், பசுநெய், நல்லெண்ணெய் இவற்றை வகைக்கு 325 மி.லி. இலா-மிச்சம், அதிமதுரம் இவற்றை வகைக்கு 15கி எடுத்துத் தாய்மையான அன்றைய தண்ணீரூற்றி அரைத்து அவ்விழுதை எண்ணெயில் கலந்து அடுப்பேற்றி காய்ச்சி, பதத்தில் நெல்லினை அதனுள் விட்டு தெறிக்கும் வேளையில் கல்வத்-தில் வடித்துக் கொள்ளவும்.

காலையில் இவ்வெண்ணெய்த் தலையில் வைத்து மாலைப்பொழுதில் வெந்நீரூற்றி தலை குளிக்கவும். தொடர்ந்து ஏழெட்டு நாட்கள் பத்தியத்தைக் கடைபிடிக்கவும்; சோற்றுடன் வெந்நீர், பசும்பால், நெய் இவற்றைச் சேர்த்து சாப்பிடவும். புளிப்பு, கசப்புப் பொருட்கள், உப்பு, மீன், கருவாடு ஆகியவற்றை நீக்கவும்.

சி/4/1

163.அ. பயித்தியத்துக்கு முக்கூட்டெண்ணெய்

நார்மேவு மேரண்ட மென்னெண்ணெய் கமலாவு
தருகிருதம் வகைகா லதாய்
சட்டிதனி லேவிடு கற்கம் லாமிச்சமொடு
தருவெண்ணிகள் மதுர மான
ஏர்மேவு மோரைரண்டு முக்களஞ் சாகவேயிடு
யழுபுதுப்புனல் விட்டரை யெண்ணெய்
எண்ணெய் நெய்யானதிற் சேர்த்துக் காய்ச்சி
யினிய நெல்லிட் டதிற்பதம்

சார்வின் கலசம்வடி உதயர் சிரசிடு
சாய்மையாகுத வெந்நீர் விடு
தருணமிது போலவே யெட்டுநாட் பத்தியம்
சொற்றிடக் கேளு நீயும்

ஓர்மை வெந்நீர் பசும்பால் நெய்யிலன்ன
மிட்டுண்ணு புளிகைப் பிணிப்பு
உப்புமீன் கருவாடு போக மாகா
தொழிந்திடு பயித்திய மிதே.

324

கிரிசத்துக்கு (இணைப்பு) குளிக்க எண்ணெய்

3௮5. பொன்னாங்காணி, விஷ்ணுகிராந்தி, தொட்டாற்சுருங்கி, சிறுபீளை, அறுகம்புல், தழுதாழை, உழிஞ்ஞை, நிலப்பனை, கையாந்தகரை, முயற்செவி, பசும்மஞ்சள், துளசி, நன்னாரி, இருந்தொட்டி, வில்வவேர், சிவப்பு கீழாநெல்லிப்பட்டை ஆகிய மருந்துப் பொருட்களைச் சமஅளவெடுத்து 21.2 லி தண்ணீரூற்றி நான்கிலொன்றாய் 5.3 லி அளவாய்ச் சுருக்கிக் காய்ச்சவும். 1.3 லி நல்லெண்ணெயைச் சேர்க்கவும்.

சதகுப்பை, கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், மிளகு, இலவங்கம், ஏலம், கஸ்தூரிமஞ்சள், கார்போகரிசி, வாலுளுவையரிசி, திப்பிலியரிசி, வெட்பாலையரிசி அல்லது விளாவரிசி, மூல்கிலரிசி, ஏலரிசி, அக்கிரா, ஆகிய மருந்துப் பொருட்களை வகைக்கு 5 கி எடுத்து சாற்றிலரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கலசத்தில் இறக்கிக் கொள்ளவும். இவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்து குளிக்கவும்.

அ. கிரிச்சத்துக்கு குளிக்க எண்ணெய்

ஸ்ரீதேவி விஷ்ணுக் கிராந்தி தொட்டால்
வாடி சிறுபீளை யறுகு
சுட்டித் திருத்தாளி யுழிஞ்சை நிலதாலங்கை யான்
முயின்செவி பச்சைமஞ்சள் துளசி

தீதில்லா நின்னார் குறுந்தொட்டி வில்வவேர்
செம்மரப் பட்டை பலநோர்
சேர்த்ததிங் திருசலம் நார்குறுணி விட்டெரி
திருந்து படியோர் நாலதாய்

கோதில்லா நல்லெண்ணெய் படியொன்று விருசத
குப்பை முப்பாலை மிளகு
குளவிந்தம் மரிசவகை யாறுசக்கி நாசீர
இலங்கமுஞ் சொன்னறை யதாய்

பேதக மில்லாதரை கரைத்தெரி வருபதம்
பிசகாமல் வடிகல சமே
பேணியடை முழுகு வெறிகிரிசம தகன்றுடும்
பெரியகுரு வுபதே சமே.

385

346. பலவாதத்துக்கு எண்ணெய்

தழுதாழை, கொம்மட்டி, நொச்சி
எருக்கு, திருகுக்கள்ளி, உத்தமத்தாளி
ஆகியவற்றின் சாறு வகைக்கு
675 மி.லி, எள்ளெண்ணெய், வேப்பெண்
ணெய், ஆமணக்கெண்ணெய் வகைக்கு
1.975 மி.லி எடுத்துச்சட்டியில் ஊற்றிக்
கொள்ளவும். அதனுடன் வெள்ளாட்டுப்
பாலையும் கலக்க. வெண்சாரணைக்
கிழங்கை 35கி எடுத்து மேற்கூறிய
சாறூற்றி அரைத்து மேற்சொன்ன கலவை
-யில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும்.

கொதிப்படங்கி மெழுகு
பதமான போது வடித்திறக்கிக்
கலசத்தில் அடைத்துக் கொள்ளவும்.
இவ்வெண்ணெயை இலேசாக சூட்டில்
சூடாக்கி பக்க வாதம் பாதித்த
இடத்தில் தடவி விடவும். பின்
தழுதாழை, எருக்கு, வெண்ணொச்சி
ஆகியவற்றின் இலைகளை இலேசாக
வெதுப்பி அவ்வெண்ணெயுள்ள இடத்
-தின் மீது வைத்துக் கட்டவும். எண்பது
வகை வாதம், கைகால் முடக்கம்,
சூலை தீரும்.

164. அ. பலவாதத்துக்கு எண்ணெய்

உம்மத்து தழுதாளை கொம்மட்டி நொச்சியொடு
உற்பன மெருக்கு திருபு
உத்தமத் தின்றாளி சார்வகைக் குரியதனுடன்
திலக நிம்ப மூத்து
தனம்முறை மூவகை யெண்ணெய்படி யொன்றரை
சட்டிதனில் விட்டு போது
தன்னளவு சாகினிப் பால்கலந் ததனில்
வெண் சாறை யதன்கி மூங்கு
கனம்முறை வோர்பலம் மைத்துக் கரைத்துறக்
காச்சிவடி மெழுகு பருவம்
கலசமதி லேயடை யிதையாதி நோவினில்
கனமாய் வைதுபிபி யிருநீ
விம்மு தழுதாளை யோடெருக்கு வெண்ணொச்சி
~~யிலை~~ வெதுசா யந்தாம் விடுமேல்
வாத மெண்பது கைகால் முடக்கந்தனை
விட்டோடு முண்மை யிதுவே.

326

327. முகவாதத்துக்கு எண்ணெய்

கமுகிலைச் சாறு 1.3லி, புளியிலைச்சாறு 675 மி.லி, எள்ளெண்ணெய் 1.3லி சேர்க்கவும். சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப் பூண்டு, கல்மதம், வெண் பிசின், வசம்பு, நிலவேர், கடுகு ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து மேற்கூறிய சாறு விட்டரைத்து அவ்விழுதை நல்லெண்ணெயில் கலந்து கொள்ளவும்.

எண்ணெயை அடுப்பில் வைத்து எரித்துக் காய்ச்சி முதிர்ந்த பருவத்தில் வடித்து ~~[illegible]~~ கலசத்தில் இறக்கி பத்திரப் படுத்திக் கொள்ளவும். இவ்வெண்ணெயை நாக்கு, கழுத்து, தலை உச்சி, கை, கால் ஆகிய இடங்களில் தடவி, செவியில் துளிகளை விட்டு அடைத்துக் கொள்ளவும்.

உடல் முழுதும் இவ்வெண்ணெயைப் பூச முகவாதம் குணமாகும்.

ஆ. ## முகவாதத்துக்கு எண்ணெய்

குமரிகிளைச் சாறுபடி பாதியத னோர்புளி
கனதை யினைதரு சாறுமோர்
காறுமதில் விருதிலக ரசநாசி கூட்டிநாவ்
கற்க நற்சுக்கு மிளகு
விமலமுறு திற்பிலி வெள்ளுள்ளி கல்மதம்
வெண்பிசின் வசம்பு நிலவேர்
மிக்க கடுகு கொண்டது வகைக்கொரு கழஞ்சதாய்
மேவ முன்சாற்றி விட்டரை
அமைவாக எண்ணெய்தனிலே கரைத்துர வெரித்
தழகு முதிர்பதம் வடித்து
அதனை நாவட்டி பிடரியுச்சி கைகாலிடு
அஞ்சாது செவிவிட் டவை
நமதுசறு வாங்கமுகதும் பூசமுக வாதந்
திட்டமிந் தொடு மைனவே
சண்முகக் கடவுள் திருமுனிவனுக் கருள்செய்த
சத்திய வுபதேச மிதுவே.

327

328. வாதசூலை, நீர்ச்சூலை முகவாத சன்னிக்கு எண்ணெய்

தழுதாழை, சிறுசெருப்பஞ்சூட்டி, பிரமி ஆடாதோடை, குப்பைமேனி, கையாந்தகரை, துளசி, பொடுதலை, பொன்னாங்காணி நொச்சி, பெருந்தும்பை, ஊமத்தை, எருக்கு, நீர்மேல்நெருப்பு எனும் கல்லுருவி, சங்கங்குப்பி, பெருஞ்செருப்படை, அகத்தி, தைவேளை, உத்தமதாளி, புளி ஆகிய மூலிகைகளின் சாறுகளை வகைக்கு 675 மி.லி எடுத்து வாயகன்ற சட்டியிலூற்றி நான்கிலொரு பாகமாய்ச் சுருக்கிக் கொள்ளவும்.

அதனுடன் வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், ஆமணக்கெண்ணெய் இவை வகைக்கு 672 மி.லி. கலக்கவும். கியாழம் எனும் கஸ்தூரிமஞ்சள், அதிமதுரம், கர்கடகசிங்கி, மரமஞ்சள், இந்து, சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம் நற்சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி வசம்பு, தேவதாரம்.

165. அ. வாத சூலை நீர்ச்சூலை, முகவாத சன்னிக்கு
எண்ணெய்

துங்கமிகு தழுதாளை சிறுசெருப்படி பிரமி
தோடை திருமேனி கையான்
துளசி பொடுதலை சீதைநொச்சி கொற்றாக பெரிய
தும்பை யூமத்தை நக்கு
சங்கையுறு நீர்மேனெரிப்பு சங்கன் குப்பிதுகை
நாள் செருப்ப படைய கத்தி
தக்க தைவேளை யுத்தமதாளி யடிப்புளி
தென்சார் வகைக்குறி யதாய்
அங்கதோர் நாழிதனில் நாலொன்றதாய் வற்றும்
அப்போது சின்பு திலகம்
ஆமணக்கெண்ணெய் வகைபடியறை கலந்ததில்
அழகுள விந்த மதுரம்
எங்குமுயர் கற்கடக சிங்கி மரமஞ்சளும்
இந்து இறிகடுகு கோட்டம்
இருசீரகங் கடுகு ரோகணி வசம்புடன்
இயல்தேவ தாற மென்னே.

348//

329. வெண்சந்தனம், செஞ்சந்தனம், சீந்திற்கொடி, சிறுதேக்கு, சாதிக்காய், கிராம்பு, சன்னிநாயகம் ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து இடித்து அரைத்து மேற்சொன்ன எண்ணெய், சாறு கலந்த கலவையில் கலந்து காய்ச்சி அடங்கி நுரையானது வற்றி வரும் வேளையில் நரிவிரட்டி, நன்னாரி, நிலவேர், முசுறு முட்டை ஆகியவற்றை வகைக்கு 10கி, ஆவின் கண்டம் 5கி எடுத்துப் பொடித்து அவ்வெண்ணெயில் கலக்கவும்.

காய்ச்சி பின் முதிர்ந்த பருவத்தில் கலசத்தில் அடைத்துக் கொள்ளவும். 488மி.கி அளவு உள்ளுக்-குக் கொடுத்து, உடலிலும் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். வாதத்தினால் ஏற்படும் தோடம், முகவாதம், நீர்ச் சூலை, சன்னிவாதம், பக்கவாதசன்னி ஆகியவை குணமாகும்.

ஆ. தாரமிரு சந்தனஞ் சிவந்தி சிறுதேக்கு
சாதிக்காய் கிராம்பு முடனே
சன்னிநா யகத்தும்வகை ஒன்றொன்று கழஞ்சிடை
தானரைத் தேக ரைத்து
வீரமோடு காச்சு நுரைவற்றும் வேளையில்
நரிவிரட்டி நன்னாரி நிலவேர்
மிக்கமுசி றண்டமும் வகைக்கிரு கழஞ்சு
யாவின்கண்ட மிருமொரு கழஞ்சு
காரணம தாகுமிது வகைவகை நிறுத்திடு
காச்சிவடி முதிரு பதமோ
கலசமடை காசொன்றுளே கொடுத்திட னனலிவிடு
காய்ந்த வெந்நீரில் மேற்கு
வாரமுறு வாதத்தி லுண்டான தோஷமுக
வாதநீர்ச் சூலை சன்னி
வாதமுடனே மேபக்க வாதசனி வாராது
வடிவேலர் பழநமி சிதே.

329

~~165. அ. வாதசூலை, கீர்ச்சூலை~~

330. வாதம், மேகம், சிரக்குத்துக்கு எண்ணெய்

கரிசாலை, கற்பூரவல்லி இவையிரண்டின் சாறுகளை வகைக்கு 175 மி.லி எடுத்து 175 மி.லி பாலையும் சேர்த்து வெயிலில் வைத்து சாற்றிலுள்ள நீர் வற்றுமளவுக்கு விட்டுப் பின் அக்கசடை எடுத்து அம்மியில் வைத்து மை போலரைத்துக் கொள்ளவும். 1.3லி நல்லெண்ணெயில் இதைக் கரைத்து அனலில் வைத்து சிறிய அளவில் நெருப்பிட்டெரித்து கொதித்துப் பின் மெழுகு பத அளவில் வரும்போது வடித்துக் கலசத்தில், துணியினாலான வேடுகட்டி பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

ஆறிய எண்ணெயை ஒரு நாள் விட்டொரு நாள் தலையில் தேய்த்து சீயக்காய் தேய்த்து வெந்நீரில் தலை குளிக்கவும். வாதம், மேகம், சிரங்கு, சொறி சிட்டம், சிரசூலை ஆகிய நோய்கள் குணமாகும்.

166.அ. வாதம் மேகம் சிரங்குக்கு எண்ணெய்

நாவுகரி சாளையொடு கற்பூர வல்லியிடி
நயசாறு வகையுரி யார்
நவகல மதிற்பெருகு மிளகிரி கலந்து
நாயறு முகப்பிட மதாய்
மாற்பெருகு நீர்சுவற வைத்தெடுத்த தம்மிதனில்
மயனமது போல வரைத்து
வரிசைசால் வெண்ணெய்படி யுறவுசெய் தெரிகளின்
மருவு சிறுதீ யிட்டெரி
கற்பனைய தாகவே மெருகுபத மில்வடி
கலசமதில் வேடு கட்டு
கருதுதின மொன்றுவிட் டொன்றுமுறை தேய்த்துமே
கருணை வெந்நீரில் மூழ்கு
உற்பவ மதாம் வாதமேகஞ் சிரங்கு
மொழிகொடி கிட்ட மான
துண்மை சிரங்குளை முதலண் டாது
உரைத்தனன் கத்தி சனே

330

331. நரம்பு வலிக்கும் என்பது வாதத்துக்கும் எண்ணெய் (லிங்கினத்துக்கும் ஆகும்)

கருஊமத்தை, கருநொச்சி, பாவட்டை, வெள்ளெருக்கம்பு, எட்டிக்கனி ஆகியவற்றின் சாறுகளை எடுக்கவும். நண்டுசதை, ஊர்ப்பன்றி, பசு ஆகியவற்றின் நெய், ஆமணக்கெண்ணெய், நல்லெண்ணெய் இவற்றை முறையே 1.3லி, 675 மி.லி எடுக்க. வேப்பெண்ணெய் 325 மி.லி எடுத்து கலத்தில் ஊற்றவும்.

நாரைவேர்ப்பட்டை, வசம்பு இவற்றை வகைக்கு 5கி எடுத்துப் பொடித்து எண்ணெயில் கலந்து அதிகமான நெருப்பில், அதிலுள்ள தண்ணீரைச் சுண்டச் செய்து, மிஞ்சி நிற்கும் தைலத்தைத் தூய கலசத்தில் வடித்திறுத்துக் கொள்ளவும்.

இவ்வெண்ணெயை நரம்பு பிசைவுக்கும் தசை பிறழ்வுக்கும் தேய்க்கும் தடவி பற்றிட இவை தீரும்.

௬ 276

எண்பது

ஆ. நரம்பு வசைவுக்கும் ~~ஏறும்பாட~~ வாதத்துக்கும்

எண்ணெய் (மிருகத்துக்கும் ஆகும்)

கரிய ஆமத்து கருநொச்சி பாவட்டையும்

கனக வெள்ளடம்பு எட்டிக்

கனிபுளிங் தெருசாறு நன்குகினை மானதும்

கருது மூர்ப்பன்றி பசுநெய்

அருமை யுறுமே ரண்ட வெள்ளெண்ணெய்

யொன்றரைக் கால்கின்ப நெய்

அமுகு கலம்விடு ஆறைவேர் பட்டையும்

வசம்பாக வொன்றோர் கழஞ்சு

டுரிசமொரு தான்கலக்கு துறவு செய் கிணைமுகைத் தொண்ணூறு

கனலாற் கீர்சண் டவைத்

தாறிவரு தயிலமதி ருத்ததை தூய

தீன கலச மதனில்

தெரியமுட மதிலிரு நரம்புவசை யிர்தசை

சிறந்தெழும் பாடை வாதம்

திருந்துமுட தலைமுதல் லண்டாது நிச்சயம்

செப்பினன் கத்தீ சனே

331

332. சோகை, காமாலைக்கு எண்ணெய்

எட்டி, கருடக்கொடி, சிறுதும்பை, கரிசாலை, புளி, அரசு, நகரைஇலை, நாகவல்லி, ஆகியவற்றினை வகைக்கு ஒரு பிடி எடுத்து 1.3லி காடி ஊற்றி இடித்துச் சாறு பிழிந்து ஊற்றிக் கொள்ளவும். தேங்காய்ப்பால் 625மி.லி அதில் விடவும். சுக்கு, மிளகு, திப்பிலி அதிமதுரம், கருஞ்சீரகம் கோட்டம் ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து மேற்குறிப்பிட்ட சாறு விட்டரைத்து அவ்வித்தை மீதமுள்ள சாற்றில் கலந்து அனலில் வைத்தெரித்து மெழுகு பதமானபோது குந்திருக்கத்தைப் பொடித்துப் போட்டு பக்குவத்தில் வடிகட்டி கலசத்தில் நிரப்பிக் கொள்ளவும். எண்ணெயைத் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். காமாலை, சோகை, வடநீரினால் ஏற்பட்ட வீக்கம்

17/5

167அ. சோகை காமாலைக்கு எண்ணெய்

எட்டி கருடக்கொடி சிறுதும்பை கரிசாலை
யினிது புளியரசு நகரையிலை
நாகவல்லி வகைபிடி யொன்று காடியிது
தெளிவு படிவிட் டிடி
பட்டது பிழிந்து தேங்காயதில் கரைசமரைப்படி
சீதம் விட்ட போது
பண்பு திரிகடுகு மதுரஞ் சரியசீரகம்
பகர்கோட்டம் வகைக ழஞ்சு
இட்டமுறு சாற்றிவிட் டரைத்துக் கரைத்திடப்
பெற்றியெரி மெழுகு பருவம்
எருகுழி மிஞ்சான கிந்திரிக்கம் வடிகளைப்
தெளிவிட்டு வடிகட்டு தயிலம்
துட்டமுறு கெசாதி தேய்த்து வெந்நீர் முழுகு
சேர்ந்திடும் நோய்கள் நாளும்
சோகை காமாலை விரைநீக்கிக்க மறுகாது
கொற்றமிழ்க் கும்ப முனியே.

33௨

333. சோகை, காமாலை வீக்கத்துக்கு எண்ணெய்

1.3லி நல்லெண்ணெயுடன், இஞ்சி, கையாந்தகரை, வெற்றிலை ஆகியவற்றின் சாற்றையும் வகைக்கு 1.3லி எடுத்துச் சட்டியில் ஒன்றாகக் கலந்து கொள்க. 5 வகி மிளகைப் பொடித்து கலவையில் கலந்து இலேசான அனலில் மூன்று நாள் கொதிக்கவிட்டு மெழுகு பத அளவில் வடித்திறக்கி மூன்று பிரிவினாகப் பிரித்துக் கொள்ளவும்.

முதல் பகுதி எண்ணெயை முறையே ஒரு நாள் விட்டொரு நாள் தலையில் தேய்த்து தலை குளிக்க வைக்கவும். அடுத்த பிரிவெண்ணெயை வாரத்தில் இரண்டு நாட்களுக்கொரு முறை தலையில் தேய்த்து சீயக்காய், வெந்நீரினால் குளிக்கவும். மூன்றாவது பிரிவெண்ணெயை வாரத்தில் ஒரு நாள் தலையில் தேய்த்து குளிக்கவும். வெந்நீர் உபயோகப்படுத்தவும்.

இவ்வாறு மேற்கொள்ள சோகை, காமாலை, வீக்கம் தீரும்.

ஆ. சோகை காமாலை விக்கத்துக்கு எண்ணெய்

தந்திர மிலகுறு நல்லெண்ணெய் படியொன்றுவிடு
சட்டியி லிசம்பு கையான்
தகரை சமப்பூ நாகவல்லி றைசமேர்படி
சமன்கலந் தான போது
கந்தமுறு மிளகு பலமொன்றரை காச்சு
சிறுகொதி மூன்று நாள்
கலசமதிலே மெழுகுபத மிலிவடித் தடை
கருது பிரிசாதி தயிலம்
முந்தவோர் மூன்று குளிஒன்றை விட்டோர்தின
முறையாக முழுகு பின்னை
மூன்றுகுளி வாரத்தில் றெண்டுவிசை யாமிது
முடாங்கா மலே நடத்து
சிந்தைக் கிசைந்தகுளி வாரத்தி லோறெண்ணெய்
தேய்த்து வெந்நீரில் மூழ்கு
சேர்ந்துவரு சோகை காமாலையொடுவிக்கமும்
சிறதொழி முதலக துமே.

333

334. முசித் தைலம் - சிரரோகம், சோகைக்கு எண்ணெய்.

1.3லி மிளகை எடுத்துத் தண்ணீர் விட்டரைத்து 2.6லி தண்ணீரில் கலந்து கொள்ளவும். பெருமுசுக்கை, கரிசாலை இவற்றின் சாறுகள், எலுமிச்சம்பழச்சாறு, செவ்விளநீர், நல்லெண்ணெய் ஆகிய வற்றை வகைக்கு 1.3லி சேர்த்துக் கொள்ளவும்.

செஞ்சந்தனம், தேவதாரு, கார் கோலரிசி கருஞ்சீரகம் ஆகியவற்றை வகைக்கு 14கி எடுத்துப் பால் ஊற்றி அரைத்து மேற்சொன்ன கலவையில் கலந்து மூன்று நாட்கள் காய்ச்சவும். பின் மெழுகு பதமாக இருக்கும் போது கலசத்தில் வடித்தாற்றிக் கொள்ளவும். தலையில் இவ்வெண்ணெயைத் தேய்த்து வெந்நீரில் குளிக்கவும். தலைவலி, பீனசம், ஒருத்தலைக்குத்து உளைவு, சோகை, பித்தம், குரல் கம்மல், சிலவகை தோஷங்கள் தீரும்.

64 279.

168. அ. மிரிசத்தைலம் சிரரோகம் சோகைக்கு எண்ணெய்

படியொன்று தேனகமிடு சலம்ரெண்டு படிவெட்டி
யரச்சு = தோல் பாண்ட மதனில்
புதியவர் றொருபடி மொசுக்கை கரிசாலை
சம்பழச்சார் செவ்விள நீருமே
இடிகொண்ட எண்ணெய்வகை படியொன் றிரட்டியன்
இரமிடு இற்க மிரிசம்
செஞ்சந்தனம் தேவதாரு கார்கோல் கரிய
சீரம் வகையிரு கழஞ்சு
கடிமுந்து பால்விட் டரைத்துக் கரைத்தூற்க
கார்ச்சு தினமூன்று பின்னை
கலசமிடு தாபம்வடி மெழுகு பதமாயிது
கற்புடன் தேய்த்து முழுகு
இடிகொண்ட சிரரோக பிணிசு மொருத்தலைக
இத்துவை சோகை பித்தம்
இரல்கம்மல் சிலதோஷம் மகலுமிது நிச்சயம்
கூறினன் கத்தி சனே.

334

335. கரப்பான் சிரங்குக்கு எண்ணெய்

மொட்டுகள் அதிகமாக உள்ள எருக்கு, அல்லி, கருடக்கொடி, முருங்கை, சங்கங்குப்பி ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 325 மி.லி வசம்பு, கார்போகரிசி, கருஞ்சீரகம், துருசு, வேம்பாடம்பட்டை, மிளகு, துத்தம், கஸ்தூரி மஞ்சள், பவளப்புற்று மண், தாண்றி வேர், தனைச்சூடி வேர் ஆகிய -வற்றை வகைக்கு 5கி எடுத்து இடித்து அரைத்து மேற்கூறப்பட்ட சாறுகளில் கலந்து கொள்ளவும்.

1.3 லி தேங்காயெண் -ணெயையும் அவ்வையுடன் கலந்து எரித்து பக்குவத்தில் இறக்கி கலசத் -தில் வேடுகட்டி வடித்துக் கொள்ளவும். அவ்வெண்ணெயைக் கரப்பான் மீது தொட்டு வைக்க புடைக்கரப்பான் சிரங்கு, புண் ஆகியவை தீரும்.

65 280

ஆ. கரப்பன் சிரங்குக்கு எண்ணெய்

முகின்செறி யெருக்கலை யலரி குருடக்கொடி
முருங்கை யிலையொடு வடக்கி
பேடிவர்த்தாசி சங்கன்குப்பி சேர்ப முறுக்கி
யெருசா றுவகைகால்
துகள் படு வசம்பு கார்கோல் கருஞ்சீரகம்
துரிசு வேம்பாடல் மிளகு
தத்தமொடு கஸ்தூரி மஞ்சள் பளைப்புற்று
சொல்மிளகு தான்றி வேரும்
கிடைதலைச் சூடிவேர் வகைக்கழஞ் சாகவே
வசமுற யரைத்தரைத்து
மங்கா துருக்குதேங் கெண்ணெய் படிவிட்டெரி
வடிகலச மிருத்தி பமே
ரகபாக வேடுகட் டுடல்மீது தொட்டிடு
புடை கரப்பன் சிரங்கு
புண்மொய்க ளணுகாது செந்தில்வடி வேலவன்
பொதிகை முனிவர்க் கருளினார்.

335

336. கரப்பானுக்கு எண்ணெய் :

தேங்காயைத் துருவி அத்துருவலுடன்
புளியங் கொட்டையின் தோலை
ஒரு கைப்பிடியளவு ~~[illegible]~~ இடித்து
அப்பொடியைச் சேர்க்கவும். இக்
-கலவையை வெயிலில் வைக்க கலவை
-யினின்று முதலில் வெந்நீர் கசிந்து
பின் எண்ணெயாகும். வெங்காயம்,
நெற்றிமலர், முள்முருக்கு, முருங்கை
குன்றி ஆகியவற்றின் சாறு 325மி.லி
வேம்பாடம்பட்டை, சதகுப்பை, நற்
சீரகம், கருஞ்சீரகம், கிளியூறல் பட்டை,
சந்தனம், வசம்பு, செண்பகம், கார்போ
-கரிசி, வாலுளுவையரிசி, திப்பிலியரிசி,
வெட்பாலையரிசி, மூங்கிலரிசி, ஏலரிசி,
சடாமாஞ்சில், தேவதாரு, மிளகு, கோட்டம்,
நெற்றிவேர், பொன்மெழுகு கஸ்தூரி மஞ்சள்,
துரிசு, துத்தம், ஏலம், இருவேலி, பவளப்
புற்று, பூலா, வசுவாசி, அதிமதுரம்,
மஞ்சிட்டி, ஆகியவற்றை வகைக்குச்
சம அளவெடுத்து அரைத்து அவ்விழுதை
எண்ணெயில் போட்டு வெயிலில்
வைத்து நன்கு ஊறிய பிறகு கரப்
-பானுக்குப் பயன்படுத்தவும்.

66 281

169. அ. கரப்பானுக்கு எண்ணெய்

துத்த தேங்காயை குருகு புளியம்பூ
குருந்தோல் சிறங்கை யதிடி
பசுந்தாள் தாலிவிரவு ரவிகாய்ந்து பிசிவெந்நீர்
சொரிந்துருக் கெண்ணெய் தனிலே
யுத்திதரு மீருள்ளி நெற்றிமல கிந்துசகமீர்
முதலி குன்றிரச மொன்று மூக்கு
நூழுக்குசதை வேம்பாடை சதைகுப்பை யருகீர
கிழியுறல் சந்தனம் செம்பு
சித்தமுறு செண்பகம் அரிசிவகை மஞ்சியும்
தேவதரு மிளகு கோட்டம்
தெற்றிவேர் பொன்மெழுகு கஸ்தூரி மஞ்சளும்
சேர்துரிசு துத்த மேலம்
மெத்த தூ யருகவேல் பகாப்புற்று புலி
விருஷம் வசுவாசி மதுரம்
மிக்க மஞ்சட்டி யோர்கிளை யரைத்துறவடி
வெகு கரப்பன் தீருமே.

336

337. இட்டம் சிரங்குக்கு எண்ணெய்

தேங்காயைப் பிழிந்து பாலெடுத்து அதனுடன், ஏருக்கட்டுக்கி, செம்பொன் நெருஞ்சில், புங்கம்பட்டை இவற்றை இடித்துப் பிழிந்த சாற்றை 672 மி.லி சேர்த்துப் பாதியாய்க் குறுக்கிக் கொள்ளவும், அப்தாரம், இலிங்கம், துத்தம், இரசம், கெந்தகம், துருசு, காந்தம் வேம்பாடம் பட்டை, கஸ்தூரி மஞ்சள், கருஞ்சீரகம் கார்கோலரிசி, எட்டி, முருக்கு, அமிஞ்சி முருங்கைப்பட்டை, அண்டை, தலைச்சுருளிவேர் ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து இடித்துப் பொடித்து மேற்குறிப்பிட்ட சாற்றின் கலவையில் கலந்து அடுப்பேற்றி எரித்து கொதிக்க வைத்து முதிர்ந்த பக்குவத்தில் வடித்துக் கலசத்தில் ஊற்றிக் கொள்ளவும். இவ்வெண்ணெயைச் சிரங்கு, குட்டம் குணைப்புண், கரப்பன் ஆகியவை உடை பாதிக்கப்பட்டுள்ள இடங்களில் வைக்க அவை தீரும்.

67 282

ஆ. குட்டம் சிரங்குக்கு எண்ணெய்

நெய்த்தேங் காயுந்து டைத்துப் பிழிந்துடன்
நிறையொடு வடக்கி செம்பொன்
நெருஞ்சி புங்கன் பட்டை வகைச்சாறறைப்படி
நேர்பாதி யாய்த் தூக்கி

வைத்ததில் கக்கமரி தாரமொடு விளங்கமும்
வருத்தம் விந்து கெந்தி
வன்கரைக் கண்டனொடு காந்தம் வெம்பாடமும்
வரிசை கஸ்தூரி மஞ்சள்

கைத்திருந்த உசிலை காய சீரகம் கார்கோசு
காஞ்சிரை முருக்கு மஞ்சி
கனமருங்கைப் பட்டை சண்டை உதளை/சூடிவேர்
கருவி வாஞ்சி குடமுதல்

முத்தியுற ஓர்கழஞ்சு இடிபொடி கலந்தெரி
மதிப்பதம் வடித்திடவிரு
சூடச்சிரங்கு குட்டம் இலைப்புண்
புரையுது தொலைக்கப்பண்ணுமே.

337

338. சிரங்குக்கு சூரிய (ஒளி) உத்தெண்ணெய்

ஆணைக்கற்றாழை, கொம்மட்டிக்கனி
இவையிரண்டினின்று வட்டமாக அறுத்
தெடுத்து உள்ளிருந்து சோற்றினை
எடுத்துத் தேவையான அளவு தேங்
-காயெண்ணெய், புன்னை நெய் எடுத்து
அதில் இடவும். துரிசு, துத்தம்,
வெம்பாடம்பட்டை, கெந்தகம், மிளகு
கருஞ்சீரகம், வசம்பு, கார்கோலரிசி,
பவளப்புற்று, அரிதாரம், கஸ்தூரி
மஞ்சள் கிடைக்கொடிவேர், மிளகு
தான்றி, கோட்டம், ஆகியவற்றைச்
சமஅளவெடுத்துப் பொடித்து எருமைப்
பாலிலரைத்துச் சேர்க்கவும். வெற்றிலைச்
சாறு சேர்த்து தண்ணீர் வற்றுமளவுக்கு
வெயிலில் வைத்து கொதிக்க விடவும். பின்பு எண்ணெய்
தெளிவாக இறுத்து சிரங்குக்கு
உபயோகப்படுத்த சிரங்கு தீரும்.

170. அ. சிரங்குக்கு சூரியபுடத் தைலம்

பூடமா மேகை கொம்மட்டிக்கனி யுட்டமாய்
முகடறுத்த தினிது சோறு
முற்றும் இடைந்தெய் விட்டுவிடு தேங்காய்க்கண்
மூட்டாகில் புன்னை நெய்தான்
பாடமாய் விட்டதனி விடுதூரிசு அத்தம்
வேம்பாடல் கெந்தக மிளகுடன்
பகர்கருஞ் சீரகம் வசம்பு கார்கோலரிசி
பவளப் புற்றாரி தாற்சுமம்
வேடர்சிலை கஸ்தூரி மஞ்சள் கருடக் கொடிவேர்
மிளகு தான்றி கோட்டம்
விஞ்சாது வகைசமன் பொடிகளாற் திரிலவன்
மேதியின் பாலி அடனே
நீடரிய தாம்பூல ரசம்விடுத் தின்னிலவை
நீராக் காய்ந்த போது
நெய்யது தெளித்திருத் திடுசிரங் கண்டாது
நிச்சய மருன் நூலிதே.

338

339. சிரங்குக்கும், கரப்பானுக்கும் ஏற்ற புடத்தைலம்

கஸ்தூரி மஞ்சள், அத்தி, துத்தம், கருஞ்சீரகம், மிளகு, கார்கோலரிசி வசம்பு, வேம்பாடல், பவளப்புற்று, துருசு, சித்திரமூலம், மிளகு தண்டு, கருடக் கொடி, கீரை, நன்னாரிவேர், பாஞ்சி வேர் ஆகியவற்றைச் சமமாக எடுத்துப் பொடித்து வெள்ளை ஊமத்தங்காய்ச் சாற்றில் போட்டு அனலில் காய்ச்சி பின் பாதியளவு காய்ந்தவுடன் இறக்கி முருக்கெண்ணெய், நெய் ஆகியவற்றையும் சேர்த்து வெயிலில் வைத்து நன்கு காய்ந்த பின் தெளிவாய் இறுத்துப் பாத்திரத்தில் அடைத்துக் கொள்ளவும். இவ்வெண்ணெயைச் சிரங்கின் மீது தேய்க்கவும். மாம் பட்டையைத் தேய்த்துக் குளித்திட சிரங்கு கரப்பான் தீரும்.

[illegible] 6/04

அ. சிரங்குக்குக் கரப்பனுக்கு சூரியபுடத் தெண்ணெய்

கஸ்தூரி மஞ்சள் பாசத்தியொடு சுத்தகமும்
கரிய சீரக மிளகுடன்
கார்கோல் வசம்பு வேம்பாடல் பவளப்புற்று
கறைக்கண்டர் சித்திர மூலம்

விஸ்தார மாமிளகு தான்றி கருடக்கொடிவேர்
கீரைய நுன்னி வேரும்
மிக்கான பாஞ்சிவேர் சமனிறுத் தெயிடி
வெள்ளடம் மத்தங்கா யருளவை

சொஸ்த்தமாய் மேல்க்குறித்த தோளையது சுர்ணல்
சுட்டெடுத் தறைவடி வதாய்
தூயதா முருக்கெண் ணெயிற்கலந் தறக்கனது
சேர்ந்தபால் விட்டரவிவை

வலித்துவது சுத்தமாயிக் காயிந்திருந்த தெளிவு
மங்கா சூடல்தொட் டிரு
மாம்பட்டை தேய்த்துக் குளித்திடு சிரங்குடன்
மகா கரப்பனு மகலுமே.

சிரங்கு பொடிப்புக்கு எண்ணெய்

340. நல்லெண்ணையை 1·3வி எடுத்துச் சுட்டு ஆறவைத்துக் கொள்ளவும். 1·3வி மிளகை வறுத்துப் பொடித்து எண்ணெயில் போடவும். இஞ்சிக் கொத்தை நன்கு மைபோல அரைத்து அவ் விழுதையும் அரிந்து வைத்த ஒரு பிடி வெங்காயத்தையும் எண்ணெயில் போட்டு அடுப்பில் வைத்தெரித்து கொதித்து நுரை எழும் போது பக்குவமாக இறக்கிக் கொண்டு பழைய சீலையத்தில் வடித்துக் கொள்ள வேண்டும்.

வேண்டியபோது கருமை-யான கோழியின் இறகால் எண்-ணெயைத் தொட்டெடுத்து நரம்பு பொடிப்பு, புண், சிரங்கு ஆகிய-வற்றிற்குத் தினந்தோறும் தடவி வந்தால் தீரும்.

285

171.அ. சிரங்கு பொடிப்புக்கு எண்ணெய்

சந்தமாம் வெள்ளெண்ணெயி படியளாந் துநன்
சட்டிதனில் விட்ட போது
திண்மான மிளகுபொடி மாகாணி யதுவுறு
தருமஞ் சடதேறு ரண்டு
வந்ததினையே பொடிசெய் திருசிக் குந்து
பிடமை போலவறைத் ததிலிடு
வரிசையா நீருள்ளி பிடிஒன் றரிந்திடு
வல்லபுப் பெற்றி யெரிந்து
குந்திக் கொதித்த தெனிலே நுரையெழுந்து
கொஞ்சப் போதத் சென்றிறக்கு
கொள்பழம் கலசமதிலே வடித்ததை குளுவ
கோறி யாகது தொட்டிடு
தந்தி பொடிப்பு புண்ணோடு சிரங்கதில்
நிதம் தடவியே வந்தபோது
சட்டார்த்த திருமுடல் சுத்தமாமென்றான்
தமிழ் முனிவனுக் கருளினார்.

340//

341. தேமல், படர்தாமரைக்கு எண்ணெய்

1.3 லி ~~[struck]~~ நல்லெண்ணெய் 1.3 லி கரிசிலைச் சாறு மிளகைப் பொடித்த சாறு 1.3 லி எடுத்து ஒன்று சேர்த்து அதனுடன் பூண்டுச் சாற்றையும் சேர்த்து காய்ச்சி மிளகு வெடிக்கும் பருவத்தில் வடித்துக் கலசத்தில் நிரப்பவும். தேமல், படர்தாமரையுள்ள இடத்தில் தேய்த்து வெந்நீரில் குளிக்க தேமல், தேன் உதிதல், பொரிகண்ணி, வரசாம்பல் தீரும்.

வரிபுளி, அமுக்கிராவேர், மஞ்சள், வன மேதியின் சமூலம் ஆகியவற்றைச் சம-மாய் எடுத்து நிலவக்கள்ளியின் சாறு ஊற்றி அரைத்து எண்ணெயில் கலந்து காய்ச்சி பக்குவபதத்தில் இறக்கி வடித்துக் கொள்ளவும். இவ் எண்-ணெயை மெருகுபொரி, தேமல், படர்தாமரை, சொறி, சிரங்கு, வங்கு ஆகியவற்றிற்கு இரவில் தடவி வர குணமாகும்.

ஆ. தேமல் தருதுணைக்கு

புவியி லெள்ளெண்ணெய் படியோ றொன்று
குரிசலை பூசிசாறுபடி படிவி டதனில்
புனிதமுரு மினொருபடி சாறெண்ணெய் யுள்ளிக்கு
பொரங்கிடாக் காச்சு பதமாம்.
திவியான மிரிதவெடி பருவெ மதுவேவடி
தெய்த்து வெந்நீரில் மூழ்கு
தேமல் தேறுமிதல் பொரிகண்ணிவரிசாம்பலும்
திருமேலப் பனமி தாகும்
வெனமாடம் வரிபுளியந் றமுரிவேர் மெஞ்சள்
வனமேதிக் சதேம்வகை சம
நினைக்கள்ளி நீர்விட் டரைத்ததெண்ணெய்
சேர்ந்து கலக்கி யதனில்
தவறாது காச்சிவடி மெருகுபொரி தேமல்
தருதுணை சொறிசி ரங்கு
வங்குதொன் கண்ணோடமிது தப்பா தீரத்தனை
தண்டமிழ்க் கும்ப முனியே.

341

342. புண்புரைக்கு எண்ணெய்

தேங்காய் நான்கெடுத்துத் துருவி பாலினைப் பிழிந்தெடுத்துக் கொள்ளவும். நீர்பச்சை, அருகு, ஆகாயத்தாமரை பருக்கொல்லி ஆகியவற்றை இடித்துப் பிழிந்து சாறுகளை 1.3 லி, 672 மி.லி 325 மி.லியாக எடுத்துக் கொள்ளவும். புங்கம் வேர்ச்சாற்றினை இரண்டு மடங்காக எடுக்கவும். துரிசு, பவளப் புற்று, துத்தம், வேம்பாடம்பட்டை, கார்கோலரிசி, கருஞ்சீரகம், வசம்பு, வெள்ளைக் குந்துருக்கம், ஆகியவற்றை வகைக்கு மூன்றரை— எடுத்துப் பொடி செய்து அதனைப் பாலில் தூவி அனலில் வைத்துக் காய்ச்சிக் கொள்ளவும்.

கொதித்து நெய் திரிந்த போது ஒரு புகையிலையை சிறிதாக வெட்டி அதில் போட— அம். வெற்றிலையை அதிலிட்டு பொரியும் பதம் பார்த்து வடித்து வைத்துக் கொள்ளவும். இவ் வெண்ணெயைப் புண், புரையின் மீது இட— தீரும்.

172.அ. புண்புரைக்கு எண்ணெய்

மெழுகுந் தெங்கா யுடைத்து நாலது
ஏ திருகியவூறு புளிந்தெடு பாலதாய்
இந்ததில் நாபச்சை யரி துருதலையொடு
இடக்கி யோரிதழின் இணசம்
தேவஞ்சு பருக்கொல்லி யாழ புளிந் தெடுசாறு
சமனொன்று படிய றைக்கால்
நெருபுங்கன் வேர்ச்சாறிரட்டி க்கக்க
துரிசு பீளைப் புற்றுடன்
தேவுந் தருந்துத்தம் வேம்படல் கார்கோணிசி
இனகருஞ் சீர மனை
இசம்பு வெள்ளக்குந் துருக்கனை யேன்றதாய்
இந்தமொடி தாலி யெரிந்
புணாக நெய்திரி பருவம் இடகாடனோர்
புகையிலை யரிந்தத்தி திலிடு
புகைபின் வெற்றிலை பொரிபதம் வடித்திடு
புண்புரை யகற்று மிதுவே.

342

343. அக்கிதார புண்பட்டால் எண்ணெய்

முற்றிய தேங்காயை எடுத்துத்துருவி பால் பிழிந்து அதில் பச்சை முருங்கை சித்திரப்பாலை, அழிஞ்சி ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 325 மி.லி எடுத்துச் சேர்க்கவும். சீரகம், கார்கோலரிசி வேம்பாடம்பட்டை, அசமதாகம் ஆகியவற்றை வகைக்கு 5 கி, வெண் காயம் 35 கி எடுத்து மேற்சொன்ன சாறாற்றி அரைத்து மேற்கண்ட கலவை-யில் கலந்து அடுப்பில் வைத்தெரித்து மெழுகு பக்குவத்தில் வந்த போது வடித்துக்கலசத்தில் நிரப்பிக் கொள்-ளவும். கோழியிறகினால் எண்ணெ-யைத் தொட்டு அக்கிப் புண்ணின் மேல் போட உலரும். இவ்வாறே எட்டு நாட்கள் தொடர்ந்து செய்ய காய்ந்த இலை போல் புண் உலர்ந்து விடும்.

ஆ. அக்கி இதர ~~விஷ~~ புண்பட்டால் எண்ணெய்

பால்தருந் தெங்காய் யுடைத்து றண்டது
தனிப்பா லாகப் பிழிந்து
பயிலியுர் முதலியார் சித்திரப் பாலையும்
பண்பா மெஞ்சி முதலாய்
காலையும் வகைக்குழக் கதனிலிரு சீரகம்
கார்கொள் வெம்பாடல் தாறும்
கார்வண்ணிக ளோர்வகைக் கிருகழஞ் சீர்
வெண்காயம் பலமே
சீல்முறு சார்விட் டரைத்துக் கலக்கியெரி
சிதையாமல் மெழுகு பதவும்
சேர்வடி கஷமை குக்கொடலி தாவல்
தொகுதியன்பி விதா புண்ணிலிடு
போது மிது எட்டுநாள் தொட்டிடு சருகுபோல்
புண்ணுணர்ந் தாறு மென்ன
பொதிகைவள்ள முனிகட ~~...~~ வுளருளின் ~~புத்தி~~
~~புத்தியபதேசமிது~~ வே.
புத்தியுப தேச மிதுவே.

343

344. கண்ணுக்கு அலன் வில்வாதி எண்ணெய்

வேங்கை மரத்து வயிரபாகம், சிற்றா முட்டி, நன்னாரி, வில்வவேர், சீந்தில் ஆகியவற்றை வகைக்கு ௰௫ கி எடுத்துப் பாத்திரத்தில் போட்டு ௰. ௬லி தண்ணீர் ஊற்றி கொதிக்க வைத்து 5.3 லி ஆகும் வரை சுருக்கிக் கொள்ளவும். 1.3 லி நல்லெண்ணெயையும் பாலையும் கரிசலாங்கண்ணி சாற்றையும் வகைக்கு ௭௰௰.லி எடுத்துச் சேர்க்கவும். நாகப்பூ, மிளகு, வெந்தயம், பச்சை இலவங்கம், அதிமதுரம், ஏலக்காய், செவ்வள்ளி, சதகுப்பை, நற்சீரகம், கொத்துமல்லி, கோட்டம், கச்சோலம், சாதிக்காய், சாதிபத்திரி, ஆகியவற்றை வகைக்கு 5 கி எடுத்து, மிளகை வறுத்துப் பொடித்தது போல அனைத்தையும் பொடித்து எண்ணெயில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்துக் கலசத்தில் நிரப்பவும். எண்ணெயைத் தலையில் தேய்த்து தலை முழுகவும். தலைநோய், கண்ணோய் தீரும்.

74 289

173.அ. கண்ணுக்கு அயன்வில்வாதி எண்ணெய்

வேங்கை வயிரஞ் சித்தமுட்டி தென்னாவிலையொடு
வில்லவேர் ரமுதவள்ளி
மேவும்வகை முப்பலம் பாண்டமிரு குறுணிநீர்
வெந்துபடி ரண்டதாகும்
வாங்கிவடி கட்டுநல்லெண்ணெய் யொருநாழியும்
பால் ~~கா~~ கறிபோ ன்றுசேமே
படிவகைக்குறிநாகமேலர் மிளகு வெந்தயம்
பச்சை யிலவங்கமு மதுரம்
தூங்கிலா தேவஞ் செவ்வள்ளி சதகுப்பை
நற்சீர கொத்தமல்லி
கோட்டம் செய்ய கச்சோல் சாதிவகை
கடுங்காரவ
செய்தெரி மிளகுவகை தூளதாய்
தாங்கியதி உவேயாட்டமைந்த பதமேவடி கலாது
தைப்பாது முழுகு விழிநோய்
தலை உச்சிநோய்தீர மயன வில்வாதியிது
~~சித்தன~~ கண்ணோயக்கி
தான்கே நோயக்கி கேமாருமே.
344

345 வது பாடலுக்கான
இன்றைய பயன்பாட்டுக்களும்

345. மிரிச வில்வாதி எண்ணெய்

வேங்கை மரத்தின் வயிரபாகம் 52 கி, இருந்தொட்டி வேர் 105 கி எடுத்துப் பொடித்துத் தண்ணீரில் போட்டு குடிநீராய்ச் சுருக்கிக் கொள்ளவும். அதனுடன் பொன்னாங்காணி, முசுமுசுக்கை, கருஞ்சாலை ஆகியவற்றின் சாறுகளையும் இளநீர், பால் இவற்றை வகைக்கு 325 மி.லி எடுத்துச் சேர்க்கவும். 1.3 லி நல்லெண்ணெயையும் உடன் கலக்கவும்.

மரமஞ்சள், தகரம், சுக்கு, மிளகு, ஏலம், அதிமதுரம், இருவேலி, கச்சோலம் இராமிச்சம், வெண்சந்தனம், செஞ்சந்தனம் சிறுசண்பகமலர், கோட்டம் இவற்றை வகைக்கு 5 கி எடுத்து அரைத்து இறுத்தைக் கலவையில் கலந்து மூன்று நாட்கள் தொடர்ந்தெரிக்கவும். தாபமிட்டு மெழுகு பதத்தில் கலசத்தில் வடித்துக் கொள்ளவும். இந் நோய்கள் வகையான காயங்களும் கண் பித்தமும் தீரும்.

290

ஆ. மரிசு வில்வாதி எண்ணெய்:-

விருத்தம் ....

.... பலமதாம்

வேங்கை வயிரம்பலம் ஒன்றரை இருங்கொட்டிவேர்
வேர்மூசு பலம்பொடி புனலி
பொருந்திடு பதக்கஷ்ட வர்க்கமொன் றானதில்
பொன்னாணி மொசமொ சக்கை
புனித கருஞ்சாரை யினங்கர் பாதுகூக்கிடன்
புதிய நல்லெண்ணெய் படியும்
றமஞ்சள் தகரமொடு சக்குமின கேலமும்
மதுரமிருவெலி கச்சோல்
வாசர மிச்சமிரு சந்தசிறு சண்பகங்கள்
மேர்கொட்ட மோர்க நூஞ்சி
கரைத்தது நாள்மூன்றெரி தாபமிரு மெய்குபத
கலசம்வர மெய்குகு விழிநோய்
கெருதுமீ ரெட்டப்டு வகையான காயமுங்
கண்பித்த நோயு மிலையே.

345

சித்த பலாதி எண்ணெய்

346. சித்த பலாவின் வேர், அடி சேர்ந்த சமூலத்தை எடுத்து இடித்து 4௨.8லி தண்ணீரூற்றிய பாத்திரத்தில் போட்டு அனலிலிட்டு எரித்து முறைப்படி குடிநீரைக் காதிக்க வைத்து 21.4லி ஆன போது இறக்கி வேறு பாத்திரத்தில் ஊற்றவும். 21.4லி நல்லெண்ணெயை உடன் சேர்க்கவும். ஏலம், சாதிக்காய், சாதிபத்திரி, அதிமதுரம், சுக்கு, நாகப்பூ திப்பிலி, அரத்தை, வால்மிளகு, வாய் விடங்கம், தான்றி, கோட்டம், குரோசாணி ஓமம், கொத்துமல்லி, சந்தனம் கடுகுரோகணி வாலுளுவை, மிளகுக் கொடி, செண்பகம், சடாமாஞ்சில், அக்கிரா, லவங்கஇலை, கடுக்காய், உகைநீறு, தாளிசம், கிராம்பு கருஞ்சீரகம், குங்குமப்பூ ஆகிய -வற்றை வகைக்கு 20கி எடுத்துப் பொடித்துக் கொள்ளவும்.

19/5/2014

291 உரை

174. அ. சித்த பலாதி எண்ணெய்

நேருலாவிய சித்த பலாவின் வேர்
நாலிவை சமூல மாக
நறுக்கிடித் திருதூணி நீர்விட் டெரித்து
வெந்தது இருதூணியான போது
மேருலாவிய பாண்டத்தி லெரித்தெண்ணெய் சமன்
மேவு முச்சாதி [illegible] மதுரம்
வேர்க்கொம்பு நாகமலர் திப்பிலி யரத்தை
வாலுமிளகிந் துழுவாய் விளங்கம்
வாருலாவிய நன்னாரி கொட்டம் இறசாணி
மல்லி சந்தனம் ரோகணி
வாலுளுவை செவ்விய செண்பக மாஞ்சி
யக்கிரா வங்கபத்திரி கடுக்காய்
ஏருலாவிய கைநறு நாரிச [illegible]
இலவங் கருஞ்சீ ரகம்
இனிதான இம்பூரல் பூவுலவை நற்கழுஞ்சி
இவைதுணி தகளவயே.

346

347. மேற்கூறிய பொடியினை முன்
கூறிய குடிநீரில் தூவிக் கலக்கவும்.
பசும்பால், எலுமிச்சம்பழச்சாறு இவற்றை
வகைக்கு 1.3லி சேர்த்து அனலிட்டு
எரித்துக் காய்ச்சி மெழுகு பதம் வந்த
பிறகு கஸ்தூரி மஞ்சள், புழுகு, அபின்
ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துப்
பொடித்துக் கலந்து கலசத்தில் அடைத்துக்
கொள்ளவும். இசம்பு, சித்தபலாதி
இவையிரண்டையும் வகைக்கு 4கி
எடுத்துப் பொடித்துப் போடவும்.

மூக்கில் இரண்டு துளிகள்
விட்டு தலையிலும் தேய்த்து அரைப்பு
வெந்நீர் உபயோகித்துத் தலை குளிக்கவும்.
மண்டைச்சூலை, கபாலவாய்வு,
மண்டைக்குத்து, மண்டை உளைச்சல், ஒற்றைத்
தலைவலி, கபாலநோய், மூக்குவளர்த்தில்
முகவாதம், கர்ணிகசூலை, நயன
வாதம் ஆகியவை தீரும். புளிப்புப் பொருட்கள், பாகல்
இவையிரண்டும் பத்தியமாகக் கருதி
சாப்பிடுவதை நிறுத்தவும்.

ஆ. வைத்திடுங் தூளது ஷாயத்திலிடு பால்பழ
மதென்சார் வகைக்கு நாசி
வர்த்தெரி மிளகு பதமானபின் கஸ்தூரி
வாச ரோசனை புகைவின்
இத்தனையு மோர்கழுஞ் சிடுகலச மேவிடு
யிசம்பு சித்த பலாதியாம்
இதிலோர் விராகனெடை தியல மூடகொடு
நாசிரண்டுமோ துள்ளி இத்து
மெத்தன மதாயுடன் தெய்த்தரைப் பிட்டு
வைத்தோர் பிசுக மண்டையங்தலை
மேவிய கபால வாயுவின் இத்துணையது
திடுமொருதலைவலியுடன்

மேற்றுள கபாலநோய் நாசிகாமிடி
முகவாதமொடு கிரணிக தலை
கோடியன வாதங்களும் பலக்கத்து மேபுளி
பாகல் பத்திய மேஜமே

(347)

348. சித்தவல் ஏலாதி எண்ணெய்

சித்தி வல்லாரைச் சமூலம் 1120 கி எடுத்து இடித்து லி. 4 லி தண்ணீரில் போட்டு 5.3 லி யாகச் சுருக்கி முறைப்படி குடிநீராய்க் காய்ச்சி அதே அளவு நல்லெண்ணெயையும் சேர்த்துக் கலக்கவும். திப்பிலி, கிராம்பு, ஏலம், மிளகுக் கொடி, நாகப்பூ, சடாமாஞ்சில், கொத்து மல்லி, கருஞ்சீரகம், வாய்விடங்கம், வாலுளுவை, லவங்கப்பட்டை, கத்தரி இலை, சுக்கு, மிளகு, அரத்தை, சந்தனம், கடுகுரோகணி, அக்கிராகாரம், கடுக்காய், செண்பகம், தான்றி, தாளிச பத்திரி, கோட்டம், சாதிக்காய், துளசிநிறை, பெருங்காயம், இலவங்கப்பூ ஆகியவற்றை வகைக்கு 30 கி எடுத்துப் பொடி செய்து கொள்ளவும்.

175.
145. அ. சித்தவல் லாதி எண்ணெய்

சித்திரு சித்திவல் லாரைச் . . . .

சமூல மெண்ணாங்கு பலமே
தானறிந் திடிதாழி திருதொணி நீரதில்
தாக்கயெரி குறுணி யாக
வற்றவைத்த தீத்துடன் சொரியா லெண்ணெய்சமன
வந்த திரிபலை கொம்பு
ஸ்ரீமரம் செவ்வியம் நாகப்பூ மாஞ்சியும்
மேலி கிச்சிற விளாங்கம்
தீத வாசுனை வங்கப்பட்டை பத்திரி
சுக்கு வால்மிளகு கர்த்தை
அகசந்தம் ரோகணி யக்கிரா காரமும்
சொல்க்கடுக்காய் செண்பகம்
தீத்திசேர் தான்றி தாளிசபத்திரி கொட்டம்
சாதிக்காய் கடுகை ரோஜு
தநிகாயம் கிம்கிமப்பூ வகைக்கோர் நான்கு
தருகழஞ்சிடி பொடிசெய் தின்.

348

349. பொடித்தவைக் குடிநீரில் தூவிக் கலக்கவும். பசும்பால் எலுமிச்சம் பழச்சாறு இவற்றை வகைக்கு 1.3லி சேர்த்து கலந்து கொள்ளவும். பின் காய்ச்சி மெழுகு பக்குவமான பதத்தில் புனுகு கஸ்தூரி, கோரோசனை இவை இரண்டையும் வகைக்கு 5கி எடுத்துப் பொடித்துக் கலவையில் கலந்து அதனுடன் சித்த வல்லாதி 4கி எடுத்துப் பொடித்துக்கலக்கவும். 4கி எண்ணெயை மூக்கில் விடவும்.

சிறிதளவு எண்ணெயை

உடல் முழுவதும் தேய்த்து சிறிது நேரம் ஊறவிட்டுப் பின் அரைப்பைத் தேய்த்து வெந்நீர் விட்டு குளிக்க முகவாதம், கபாலசூலை, வாய்வு, பிடரிதலைவலி மூக்கில் சதை வளரும் நோய், நயன (கண்) வாதம், கடுப்பு, கர்ணசூலை எனும் சிலேத்தும பண்டங்களைப் புசிப்பதனாலும், குளிர் காற்று மழை படல் ஆகியவற்றால் செவி இத்தல், பிடரி, நெற்றி, சிரசு, கண், புருவம், நாசி ஆகிய தானங்களில் வலி ஏற்படுவது தீரும்.

79

294

ஆ. தாள்கதிர யத்திடு பால்பழச் சாறுவகை
சொன்ன மேற்படி விட்டைவி
தாயபத மெழுகுதாங் கலசவகை புகுகு
கஸ்தூரி கோரோசனை யாவின்
வான்வாம் வகைக்கு கஞ்சிட்டு வழசித்த
வல்லாதி யென்னு நாமம்
வசமான மைவந்தோர் வராகனிடை கொடுநாசி
மாறாதோர் துள்ளி இத்து
கோணிலை வேயுடன் தெய்த்தரைப் பிட்டுக்
குளித்திட போகின்ற நோய்கேள்
கொடிய முகவாதம் கபால சூலையும்
வாய்வு தொறுத்தலை வலியுடன்
நாள்மேவு நாசிகா பிடைமதில் நோய்
நயன வாதம் கடுப்பு
நவில்கர்ண சூலைமுத லண்டாது
நாடாது பத்திய மிதே.

349

350. நீரழிவுக்குச் செண்பகராமன் எண்ணெய்

வெள்ளாட்டுத் தயிர் 21.4 லி,........
.... சேர்த்து அனலிலிட்டுக் காய்ச்சி எட்டிலொன்றாகச் சுருக்கி வடித்துக் கொள்ளவும். நல்லெண்ணெய், இளநீர், காராம்பசும்பால் இவற்றினை வகைக்கு 1.3லி எடுத்துக் குடிநீருடன் கலக்கவும். அதிமதுரம், மரமஞ்சள், கடவூராய்ஞ்சி எனும் ஒரு வகை கடற்கரை மரம், நற்சீரகம், கருஞ்சீரகம், சாதிபத்திரி, தகரம், கோட்டம், தேவதாரம், சிற்றரத்தை, இலாமிச்சம், பூலாவிருட்சம், சாதிக்காய், ஏலம், கிராம்பு ஆகியவற்றைச் சம அளவெடுத்துப் பொடித்துக் கலவையில் கலந்து அனலிலிட்டுக் காய்ச்சி பதமாக வடித்துக் கலசத்தில் நிரப்பவும். மறுநாள் அவ்வெண்ணெயைத் தலையில் தேய்த்து வெந்நீர், அரப்பிட்டு முழுகவும். நீரழிவு குணமாகும். கறி, நெத்திலியைச் சேர்த்து சாப்பிடவும்.

176.அ. நீராசிவுக்கு செண்பகராமன் எண்ணெய்

விந்தைசெறி கடம்... பி... பலம் தொறுக்கீர்
இவுள்ளாவின் தயிர்க்கு றுணியும்
விட்டெறித் தெட்டொன்ற தாகவடி கர்க்கம்விடு
மிக்க நல்லெண்ணெய் யினிற்
அந்தமுறு காறாவின் பால்வகைக் கோர்படி
ஆகவிடு கற்க மதுரம்
அரிய மரமஞ்சள் கடலராஞ்சி யிருசீரகம்
அழுகு வசுவாசி தகரம்
புத்திதரு கோட்டமிரு தாரம்... ளாமிச்சமும்
பூனா விருகரை மடனை
புதுசாதி யேலம் கிராம்பு சமனோர்நிறை
புகட்டுபதம் வடிகலச டாதில
து கண்டமுதி னெண்ணெயிடு
மேற்றநாள் சிரசினிற் றேய்த்து
முழுகுதிரு நீராசிவு கறிநெந்தலி யருந்து
செண்பகாராமன் எண்ணெய் யதுவே.

350

351. நீரழிவிற்கு முக்கூட்டெண்ணெய்

பசுநெய், நல்லெண்ணெய், சிற்றாமணக் கெண்ணெய் இவை மூன்றையும் வகைக்கு 1.3லி எடுக்கவும். கொடுப்பை, கரும்பு, சிற்றா முட்டி ஆகியவற்றின் சாறுகள், பசும் பால் இவை வகைக்கு 672மி.லி எடுத்து கலந்து கொள்ளவும். 672கி மிளகை அரைத்து எண்ணெயில் கலந்து அனலில் வைத்தெரித்து மெழுகு பக்குவத்தில் இறக்கி கலசத்தில் பத்திரப்படுத்தி வைக்கவும்.

இம் முக்கூட்டெண்ணெயத் தலையில் தேய்த்து குளிக்க உஷ்ண நோய்கள், நீரழிவு, தாகம், காந்துதல், கண்ணின் வெப்பம், அதனால் உடலை வந்தடையும் நோய்கள் காட்டுத் தீயில் அழிந்த பஞ்சு போல தீரும்.

296

ஆ. சிரழிவுக்கு முக்கூட்டெண்ணெய்

சீராவி நெய்திலக மேரண்ட எண்ணெய்வகை
சேர்படி கொடுப்பை யின்னால்
சித்தமா முட்டிதரு சாறுபால் வகைக்குள்
சேர்த்திடு கடைச்ச ரக்கு
பேரான மிளிசரைப் படியரைத் தேகரை
வெள்ளரின் னெண்ணெய் தனிலே
பிசகாம லெரிபதம் மெழுகாக வேவடி
பேணியடை கலச மதனில்
நேரான கவரு மே தைலத்தை தேய்த்துடன் முழுகவே
நீங்கிடு முன்னை ரோகம்
சிரசின் ரோகமுங் காந்தல் முதலானதும்
நேத்திரச் சூடு
ஓராது வந்தபிணி சாராது சார்ந்தநோய்
ஒன்று மொழிப் பஞ்சா மென
வடிவேலர் படிமேது குருமுனிக் கருள்செய்த
வண்மைமருத் துவபதே சமே.

351

8/10/91

352. மேகத்துக்குச் சந்தனாதி எண்ணெய்

சந்தனம் 350கி, வெட்டிவேர், இலா
-மிச்சவேர் வகைக்கு 35கி எடுத்து
நான்கு, இரண்டாய் அரிந்து மூன்று
தாழிகளில் போட்டு ம.7லி தண்ணீர்
ஊற்றி காய்ச்சி உ.6லி ஆகச்சுருக்கிக்
கொள்ளவும். பின் மூன்று தாழிகளில்
உள்ளதையும் ஒன்றாகச் சேர்த்து
ஒரு பாண்டத்தில் ஊற்றவும்.
15.6லி இளநீரையும் 3.9லி
நல்லெண்ணெயையும் பாலையும்
சேர்க்கவும்.

மஞ்சிட்டி, தகரம், கற்பூரம்,
இலவங்கபத்திரி, அகில், சடாமாஞ்சில்,
விரலிமஞ்சள், மரமஞ்சள், கஸ்தூரிமஞ்சள்,
அஞ்சனக்கல், சிற்றரத்தை, வங்காளப்
பச்சை, தக்கோலம், வெள்ளைச்சந்
-தனம், செஞ்சந்தனம், குங்குமப்பூ
இசங்கு, நாகப்பூ, கோட்டம், ஏலம்

82 297

177.அ. மேகத்துக்கு சந்தனாதி எண்ணெய்

நறைமேவு சந்தனம் ரஞ்சு பலம்
வெட்டிவேர் ராமிச்சம்வேர் வகைபலம்
நாலிரண்டா யரிந்திடி தாத்திரிமுன் றிடு
நலம்வகைக் கிருகுறுணி நீர்
முறையுடன் காய்ச்சிக் குறுக்குபடி ரெண்டதாய்
மூன்றுமொரு பாண்ட மதனில்
முகுதுமதி லேவிடு யிளநீர் பன்றெண்டுபடி
முகனை நல்லெண்ணெய் பாலும்
நிறையவோ தோரொன்று மூன்றுபடி விட்டதில்
கக்கஞ்சட்டி தகரம்
கற்பூர விலவங்க பத்திரியேலம் மாஞ்சியும்
கனைத முமஞ்சள் தானும்
மனைமேவு கோசனக்கல் சிற்றரத்தையும்
வலிகொளப் பச்சை திறகோல
மதுரமிரு சந்தனம் கொங்குமம் தடிநாக
மேர்கொட்ட மேல மென்னே.

352//

353. தாமரை, முசிடு, ஆம்பல், கொட்டி கற்றாழை முருங்கை, நன்னாரி, செங்கழுநீர்க்கிழங்கு, அருகம்புல் முசுமுசுக்கையிலை ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துப் பசும்பால் ஊற்றி அரைத்து அவ்விழுதைக் கல்வையில் கலந்து அடுப்பேற்றி அனலில் வைத்துச் சிறு தீயிட்டுக் காய்ச்சவும். இவ்வாறு மூன்று நாட்கள் ஆறு பொழுது காய்ச்சிப் பின், அடுத்த நாள் தாழைப்பூ செண்பகப்பூ இவற்றை எண்ணெயில் தூவி விடவும். அடுத்ததாக கஸ்தூரி குங்குமப்பூவைச் சம அளவு கலந்து கலசத்தில் அடைத்து வைத்துக் கொள்ளவும். சிறுசந்தனாதி எனும் இத் தைலத்தைத் தலையில் தேய்த்து குளிக்க மேகவகைகள் தீரும் என்பர்.

83 298

ஆ. ஏனமொடு தாமரை முகிழாம்பல் கொட்டியும்

இதினெய்தல் கமல கந்தம்

இன்ப நன்னாரி செங்கழு நீர்கிழங்கு

இடாணி... சான கப்புல்

காவைவே திரிதிர மொசுமொசுக்கையனை

ஒன்றொரு

கழஞ்சா வின்பால் விட்டரை

குறைத்துநாள் மூன்றாறு மொருத்துசிறு தியரு

கருகா தனத்து மெருநாள்

சாலமுறு தனைமலர் செண்பகப் பூவுறு

தாக்கியே காய்ச்சு பதமாய்

தருபுருகு கஸ்தூரி குங்குமப் பூவுகை...

சமன்கலச மிட்டு வடிநீ

சீலமுறு சிரசுக்கு நாதியெனும் நாமமிது

தெய்த்துடன் முழுகி விரல்

செப்பரிய மேகவுகை தருமென்று மொழிகின்

தெட்சண முனிக்கரு ளினார்.

353

354 ஆம் எண்ணுள்ள பாடலில்லை,

355.

இருபத்து நான்கு வகைச் சரக்கு-களையும் இடித்து அரைத்துக் கலவையில் கரைத்து அதனுடன் அடுப்பில் வைத்து ~~காய்ச்சி~~ இரண்டு நாட்கள் காய்ச்சிய பின்னர் தாழை மடலையும், பீச்சி மடல்களையும் கலசத்தில் கட்டிவாடவும்.

178.அ <u>மைசந்த னாகு யெண்ணெய</u>

எழுதப் படாத ஓலை   பாடல் 354

~~கொளுங். சரக்கு மூவெட்டுமை திடுத்தரை கரைத்துவிடு~~
~~நொளிரண்டு காய்ந்தபின் நாரைமலர்~~

கொளுங். சரக்கு மூவெட்டுமை திடுத்தரை
கரைத்து விடுநொளி ரண்டு
காய்ந்தபின் நாரைமலர் பிச்சிமலர் விரசுத்து
கட்டிவிடு கலச மதனில்.

355

356. சிறு சந்தனாதி எண்ணெய்

நல்ல சந்தனம், நன்னாரி, வெட்டிவேர், இருவேலி, கோரைக்கிழங்கு, பசுமை -யான இலாமிச்சம் ஆகியவற்றை வகைக்கு 350 கி எடுத்திடித்து 41.4 லி தண்ணீரூற்றிய பாத்திரத்தில் போட்டு அடுப்பேற்றி வைத்துக் காய்ச்சவும். நான்கிலொரு பாகமாகச் சுருக்கி அதனுடன் நெல்லி வடிகான் சாறு, நல்லெண்ணெய், பசு நெய் ஆகியவற் -றையும் வகைக்கு நான்கு பங்காகச் சேர்க்கவும். சந்தனம், தேவதாரம், அகில், கோட்டம், அதிமதுரம், கச்சோலம் இவற்றை வகைக்கு 17½ கி எடுத்திடித்து அரைத்துக் கலவையில் கரைத்து மூன்று நாட் -களுக்குத் தொடர்ந்து அனலில் வைத்துக் காய்ச்சி மெழுகு பதமா -கும் போது வடித்துக் கலசத்தில் ஊற்றிக் கொள்ளவும்.

மேகம், முகமெரிவு, கூந்தல் சடையடைப்பு, உடல்வறட்சி, தாகம், தொண்டையெரிச்சல், தலைவலி ஆகிய நோய் இவ்வெண்ணெயால் தீரும் -

[illegible]

84 299

179.அ. சிறுசந்தனாதி எண்ணெய்

பாருநீர் சந்தமொரு நன்னாரி வெட்டிவேர்
பகரு மிருவேலி முத்தம்
பசுமை நாமிச்சம் வகைபலமொரு பதிடிபுனல்
பாண்டமொரு தூணி பாக

தாகுறக் காய்ந்து நாலாக வடிநெல்லி
வடிதேன் சாறெள்ளெண்ணெய் நறுநெய்
தனவகைக்கோர் நாலதாக வடு. சந்தனம்
தாமகில் கோட்டம் தேரம்

ஆகமுறு கச்சோல் வகைக்கரை பலமிடத்
தறைகரைத்த தெரிகிறி தினம்
அனுசுறக் காய்ந்து வடிகலச மடைசிறுச்
சந்தனாதி யாதமெனக்கி வருகில்

சாகாத மேகமுடன் முகமெரிவு காந்தலும்
சிதையடைப்பு யுடல்வறட்சி
தாகமின்னெரிவு சிரநோய் தீரும் நிச்சயம்
சாற்றினேன் னகத்தி சனே.

356

357. ஏலாதி எண்ணெய்

கனமுற வுகைக்கிடு கமஞ்சபொடி யெகல்
கலந்திடும் எண்ணெய் தனிலே
ஆர்முறு காரட்டை தைண்டில் சந்திரி
வாரணக்குடலி ரத்த மீரல்
ஆகவிடு காய்ந்து மெலான பதமே
வடியுமக்கான தயில மதனில்
சூரிநோய்க் குடன்கொடு பிறத்திடு சன்னி
பதிமென்று வலியஞ்சு அலைமுடக்க
முடமாறாது பிறவிச் சிலை சூலை
மேவாறுவாத மெண்பதி தெளாம்
வீறமது திரு கின்னோடி வெண்ணொச்சி
யிலைவைது விடுநோய் விலகிவிடு
மென்றான் குருமுனிக் கருள் செய்த
மிக்கதொரு சத்வாமி கமே.

399. [illegible]

400. சன்னிக்கும் வலிக்கும் தைலம்

கள்ளி, குப்பைமேனி, வேளை ஆகியவற்றி-
-னைப் பிழிந்து சாறு 325 மி.லி எடுக்கவும்.
வேப்பெண்ணெய் 1.3லி எடுத்து சேர்க்கவும்.
அசமதாகம், சுக்கு, மிளகு, திப்பிலி, அரத்தை,
கார்கோலரிசி, வெள்ளைப்பூண்டு, அதிமதுரம்,
கடுகுரோகணி, வால்மிளகு, சிற்றரத்தை,
வசம்பு, சன்னிநாயகம், வெள்ளைப்பிசின்,
மிளகு, கடுகு, மயிலிறகு, வாய்விடங்கம்,
கருஞ்சீரகம், தேவதாரம், வலம்புரிக்காய்,
ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்து
மேற்கூறிய சாற்றில் அரைத்து இதைக்
கலவையில் சேர்க்கவும். பூநாகத்தில்
ஒன்றை விட்டு கலவையை அனலில்
வைத்து காய்ச்சவும். கொதித்து சதை
-யானது முதிர்ந்த பருவத்தில் இறக்கி
வடிகட்டிக் கொள்ளவும். முட்டைத்
தைலத்தையும் உள்ளித்தைலத்தையும்
குறிப்பிட்ட அளவுடன் கலந்து உள்ளுக்
-குக் கொடுக்கவும். சீதசன்னி வகைகள்
பதின்மூன்று, ஐந்துவகை வலிகள் தீரும்.

ஆ. சன்னிக்கும் வலிக்கும் திருப்புகழ்

திருடி திருமேனி வேளையிடி பிழிசாறு
செருபடி ஓர்காலதாய் சேர்த்து
நின்வெண்ணெய் படிஒன் றயம தாகமுங்
திரிகடு கரத்தை கார்கோல்
வசை வெள்ளுள்ளி யதிமதுரமொடு ரோகணி
வால்மிளகு சிற்ற ரத்தை
உசம்பு சனிநாயகம் வெண்பிசின் காரிகருக
மயிலிறகு வாய்விளங்கம்
மருவுகரு சீரகதேவ தாரமும் வலம்புரி
இடம்புரி வகைக்கொரு கழஞ்சிங்கே
வழுவான தெண்டியொன் றிட்டெரித் தெடுவ
மாங்கிசை முதிர்ந்த பருவம்
உருவான அண்ட முள்ளித் தியலுமாய்
கலந்துட் கொடு பிறந்துட விடு
உயர்ந்த சன்னி பதிமூன்று வலியஞ்சும்
விட்டோடி விடு முண்மை யிதுவே.

400

401. சன்னிக்கும் வலிக்கும் நவகண்டத் தைலம்

கெந்தி, இரசம், நாவி, நிர்விடம், சுக்கு, மிளகு திப்பிலி, வெட்பாலையரிசி, கருஞ்சீரகம், கௌரி, அரிதாரம், கார்கோலரிசி, சாதிலிங்கம், தேவதாரம், வெள்ளைப்பூண்டு துத்தம், வெள்ளைப்பாடாணம், குக்கில், வெந்தயம், வசம்பு, பெருங்காயம், வெள்ளைப் பிசின், அபின், சன்னி நாயகன், மனோசிலை, விளாவரிசி, குப்பைமேனி, சூடம், பூலா விருட்சம், நவச்சாரம், செஞ்சந்தனம், சிறுபுன்னை, ஏலம், அகில், கோரக்கர் மூலி, ஆகியவற்றை வகைக்கு ¼ கி எடுக்க. 1 மகி நேர்வாளப்பருப்பு, மதிரண்டம், சேவல், கோழிமுட்டை நான்கு, எடுத்து அதிவுள்ள சிவப்பான கரு, பச்சைப்பாம்பு ஆகியவற்றை எடுத்துக் கொள்ளவும்.

201. அ. சன்னிக்கும் வலிக்கும் நவகண்டத்தைலம்

செந்நிவிந் தொடுநாவி நெறுவிதைந் திரிகடுகு
கிளம்வைப்பால் கரியசீர
கெவுரியரி தாரமொடு காருகோ லிங்கமிரு
கிறுசார தாரம் லசுணம்
விந்தைபெறு அத்தவெண் பாசாண குக்கிலும்
வெந்தயம் லசம்பு காயம்
வெண்பிசின் விள்சன்னி நாயக லோசனை
விளாவரிசி குப்பை யோமம்
சந்தமுறு பூலா விருத்தை நவசார
செஞ்சந்த சிறுபுன்னை யேலம்
தக்க காரகிலுடன் கோரக்கர் மூலியும்
சமன்வகை யறைக்க மூஞ்சு
முந்தவரு வாண்ப பருபிறு கமுஞ்சு
முசிறுண்டு சுவடு ஞானி
முட்டை யொரு நான்கு செம்கருவ
பச்சைப்பாம்பு
முருபனொன் றதுசேருமே.

40

402. ~~[illegible]~~, காந்தாரைப்பழம், கள்ளிச்சாறு, ஆகியவற்றை வகைக்கு 672 மி.லி எடுத்து மேற்குறிப்பிட்டவற்றைச் சேர்த்தரைத்து அவ்விழுதைத் திரியாகத் திரித்து நூற்கதிரின் இடையில் பந்தம் போல் நிறுத்தி வைக்கவும். வேப்பெண்ணெய் 162 மி.லி, புனுகு, கோரோசனை, மஞ்சாடி ஆகியவற்றையும் சேர்த்து எண்ணெயாக விட்டு திரியை எரித்தபோது அது எரிந்து கரிந்திடும் பதத்தில் இறுத்து எடுத்து விடவும். 1கி அளவில் இந்தத் தைலத்தை உடலினெங்கும் தடவி விடவும். பதின்மூன்று வகைச் சன்னி, உள்குத்து, குமரகண்டன், பீமராகதன், குதிரை வலி, காக்கை வலி, சகல வலிகளும் தோடங்களும் தீரும்.

ஆ. பச்சரவு கொன்றைபெய்புனைந் திருமுடியின் சாறு
படிவகைக் குரிவிட் டறை
படியதிரு கூட்டுந் திரித்து நாக்கி ரதனில்
பர்தடித்து பேணிக் ருத்து
மெச்சுங்கின் பெண்ணையடி நெய்ய றைக்கால்
காவம்விடு புகுந்து கோரோசனை
சித்மொக மஞ்சாடி தான்கலந் தெண்ணெய்திரி
குரிவிட்டாம் கொரித்த போது
இச்சையுறு திரிகளிற் கிரும்பதக் கிறுத்தது
குருகாசினைத் தூட்டிடு எரும்பும்
வலிசன்னி பதிமூன்று பிறவிச்சடன்
எடுத்த அள்ளித்து முதலாய்
திச்சனாய் கெமரகண்டன் மேகாசத்தின் [illegible]
சன்னிவலி குதிரை காகன்
சகலவலி தோஷங்களு மாறவே கண்டு
தயவ மெண்ணே மருவினார்.

கா 40

403. சன்னிக்கும் வாதத்துக்கும் அந்தெண்-ணெய்த் தைலம்

வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய், இலுப்பையெண்-ணெய் ஏரண்டமெண்ணெய் ஆகியவற்றை வகைக்கு 325 மி.லி எடுக்கவும். இரசம், அரிதாரம், நெல்லிக்காய்க் கெந்தகம் இவை மூன்றையும் வகைக்கு மூன்றரை அளவெடுத்துப் பழங்காடி ஊற்றி அரைத்து மைபோல் விழுதானவுடன் எடுத்துப் பழைய துணி-யில் பூசி பரப்பி விடவும்.

பின் அத்துணியை வெயிலில் வைத்துலர்த்தி காய்ந்த பிறகு எடுத்து வேப்பங்குச்சியைச் சுற்றி அத்துணியைச் சுற்றி அதன் மீது வெண்மையான நூலி-னால் அழுத்தமாகக் கட்டி விட வேண்டும்.

202.அ. சன்னிக்கும் வாதத்துக்கும் அருசெண்ணெய்;
தையிலம்

ஏர்பெருகு . எருக்கெண்ணெய் சமனிண்டு
கொள்ளிவுப்பை யோரண்டம் வகைகால்
இந்தவொ ராறுமை யுழக்கி நற்காவெட்டி
மதிலின் முன்னா விந்த போது
காற்பெருகு விந்து மால்:தெவி நெல்லி
கெந்தி கனகுப்பிளை பதுன
நெருங்கக் மயலிங்கம சூதவும் மூன்றிடை
கடம்பியா ரம்மி தனிலே
வார்பெருகு பழய காடித் தெளிவினால் ரெசு
மாறு மட்டமை போல
குழித்தெடு பழுந்துணி கிறுபிறம் ஒன்றினில்
வளம்பெற பூசி யதனை
யீர்பெருகு செங்கதிர் முகத்தாவ வத்தி
நின்பாங்கு பமதிற் கெரல்கொல்
பந்தமது போல்ச் சுற்றி வெண்ணூல் கொண்டு
தைப்பாக கட்டுக் கட்டவே.

404.

சுற்றிய பந்தத்தை மேற்குறிப்பிட்ட எண்ணெயில் நனைத்து நெருப்பினால் கொளுத்தி விடவும். சுடரினால் வழியும் தைலத்தை மற்றொரு பாத்திரத்தை அதற்கு நேராகப் பிடித்துக்கொள்ளவும். இவ்வாறே மூன்று எண்ணெய்களையும் மாற்றி மாற்றி நனைத்து எரித்துக்கலசத்தில் நிரப்பிக் கொள்ளவும்.

இத்தைலத்தை அளவறிந்து உபயோகப்படுத்த சன்னிதோடம், வாதம், விரணசன்னி, கைக்குடைவு, கைக்குத்து, தனுவாதம், முகவாதம், இளம்பிள்ளை வாதம், புரிசுற்று வாதம், பிடக்கு வாதம், குதிரைவலி, முயல்வலி, காக்கை வலி, குளிர்ச்சி, வாதம் எண்பது வகை, சன்னி வகை ஆகியவை தீரும்.

ஆ. பாகமது முன்சொன்ன எண்ணெயில் நனைத்து
பஞ்சுடர் கொளுத்தி யன்பால்
பகர்கின்ற எண்ணெய் சிறுக்கக் கோரிவிட்டு
மறுபாத்திரந் தன்னில் வாங்கு

ஏகமுறை மூன்றுபொதிபே பரிசமாறி விட்டெரித்
திருத்தலை— கலசமை யிதமாக
அஞ்செண்ணெய்த் தயில மிதிடு வரம்.
அங்கடத்தில் வருநோம்

தாகமுறை வுருசன்னி தோஷம் வாதம்
விரண சன்னி கைக்குடைவு குத்து
இத்து தனுவாதம் முகவாதம் மிளம்பிள்ளை வாதம்
சரிந்து புரிசற்று வாதம்

வாகுடன் மடக்குவாதம் குதிரைவலி முயல்வலி
காகவலி குளிர்ச்சி வாத
மெண்பது சன்னி வளைக சொசிந்திட
வகுத்தனன் கந்தி சனே

404//

405. சன்னிக்கும் வலிக்கும் வாதத்துக்கும் தைலம்

பதின்மூன்று வகை சன்னி, ஐந்து வகை வலி, எண்பது வகை வாதம் ஆகியவை அணுகாத தைலம் வருமாறு. நல்லெண்ணெய், இலுப்பையெண்ணெய், வேப்பெண்ணெய், ஆகியவற்றை வகைக்கு 1.3 லி. எடுக்க. இசங்கு, கையாந்தகரை, குப்பைமேனி, ஊமத்து, தழுதாழை, வேளை, நத்தசூரி எனும் நாய்ப்பாலை, எட்டி, சீந்தில், பெருந்தும்பை, நொச்சி, முசுமுசுக்கை, ஆடாதோடை, வீழி, கருடக்கொடி, எருக்கு, அரக்கு, கள்ளி, உத்தமதாளி, ஆகியவற்றின் சாறு வகைக்கு 1.3 படி எடுக்கவும். கடுகு, சுக்கு, மிளகு, திப்பிலி, பெருங்காயம், கடுகுரோகணி, சிவதை, வெந்தயம், வசம்பு, இந்துப்பு, வாலுளுவை, ஓமம், அதிமதுரம், வங்கம், நற்சீரகம், கருஞ்சீரகம், சாதிக்காய், வெள்ளைப்பிசின், மாவிலிங்கம், ஏலம், கொத்துமல்லி

203.அ. சன்னிக்கும் வலிக்கும் வாதத்துக்கும் தைலம்

வன்னாங்க செவ்வல் சென்னி பதிமுன் றஞ்சு
வலிவாத மெண்ப தனுகா
வரிசை சருவாங்க மெள்ளிருப்பை யின்பெண்ணெ
யோர்வகை நாசி . . . ரது.

நன்னய மிசங்கு கையான் மேனி யுமத்து
நல்ல தழுதாளை வேளை
நஞ்சறுத்தா னொட்டி கொமட்டி சிந்தி
நாரை பெருந்தும்பை நொச்சி

கன்னிய மொசுக்கை யாடாதோடை விளி
கருடக்கொடி யெருக்கு குப்பி
கன்னி யுத்தமதாணி சாறுவகை யோர்படி
கடுகு திரிகடுகு காயம்

மென்றுரோகணி சிவதை வெந்தயம் வசம்பிந்து
வாறு நிலவை யோம மதுரம்
வங்க மிருசிற சாதிவெண்பிசி னரத்தையும்
மாவிலிங்க மேல நெல்லி

405/

406.
கொத்துமல்லி, சிவனிநாயகன்பூண்டு,
வெள்ளைப்பூண்டு, கார்கோலரிசி, தேவதாரு,
மான்கொம்பு, மாயக்காய் எனும் இக் கொட்டை
சிறுபுன்னை, பேரீந்து, கஸ்தூரி மஞ்சள்,
பூவரசுவிருட்சம், பவளப்புற்று, தாமரை,
தக்கோலவேர், வெட்பாலை ஆகியவற்றை
வகைக்கு பங்கு எடுத்து முற்குறிப்பிட்ட
சாறுவிற்றி அரைத்து எண்ணெயில் சேர்க்க.
நிலவேம்பு, பாம்பை வெட்டிய துண்டம்,
முயலின் புழுக்கை, குதிரையின்குளம்பு,
மயிலிறகு ஆகியவற்றையும் அவ்வெண்
-ணெயாலேயே சேர்க்க. நன்கு கொதித்து
வற்றுகின்ற வேளையில் கோழியின்
முட்டையினின்று சிவந்த கரு, குடல்,
மூஞ்சுறு ஆகியவற்றை எண்ணெயில் போட்டு
மூன்று நாட்கள் காய்ச்சி குடல் முறியும்
பக்குவத்தில் வடித்துக் கலசத்தில் நிரப்பிக்
-கொள்ளவும்.

ஆ. வெலி சனிநாயகட் வெள்ளுள்ளி காருகோல்
வெர்தேவ தாரி சிங்கி
மாயக்காய் சிறுபுன்னை பெரிந்து கலித்தாரி
வெஞ்சன் பூனா விருட்சம்

நல்ல பவளப்புற்று கட்டி சனிநாயகம்
நனின திற்கோல மூலம்
நற்பு வெப்பாலோர் வகைக்கிரு கழஞ்சதாய்
நவிசு மதுசாற் விட்டரை

வல்ல நிலவேம்பி சிறுகுனைட்ட பாம்புகண்டம்
வடக்கயற் மூயன்ப்பு மிக்கை
வாசிக்கிறைம்பு மயிலிறகு வகைமுன் வீதம்
மாட்டியெரி வற்றும் வேளை

சொல்ஞானி மூட்டையது சிவந்த கரு
சோறை குடல் தொண்டில் மூக்குரை
ஆட்டியொரு மூன்றுநாட் காய்ந்து குடல்
மிறிபதம்
தானதையால் வடித்து வையயே.

406//

407.

அத்தைலத்திலிருந்து ஒரு கிரண்டி (புமிலி)
(நோயின் தன்மை, நோயாளியின் வன்மை, மென்மை)
அளவு, உள்ளுக்குக் கொடுத்துப் பின்
உடலெங்கும் அதைத் தடவி விடவும்.
சன்னி வகைகள் பல, நெஞ்சுவலி, எண்பது
வகை வாதம், நடுக்கு சன்னி, கைகால்
முடக்கு, வாதசூலை, நரம்புவலி, நாக்கு
தெற்றுப் பேசுதல், முகவாதம், விரைவாதம்,
எரிவாதம், நடுக்கு வாதம், ஒரு பக்கவாதம்,
உள் குத்து, புறவீச்சு, இளம்பிள்ளை வாதம்,
கர்ப்பிணிக்கு வரும் சன்னி, கால் கை,
உடலில் வலி, குத்து, சிலேற்பனம்,
சீதம், கபதோடம், ஆகிய நோய்கள்
இத்தைலத்தை உள்ளுக்கும் கொடுத்து
மேலுக்கும் தடவணையாகச் செய்வதால்
நீங்கும் என்று பெரியோர் கூறியுள்ளனர்.

204. அ. வடித்தொரு கரண்டி நோய்வருவஞ்சிவடவாதிக்கல்
மற்றுமுட வெங்கு மிகுதி
வந்தபல சன்னியே நெஞ்சவலி யென்பது
வாதமுநடுக்கு சன்னி
நடக்கிவரு கைகால் முடக்கு வாதத்தை
நரம்புவலி நாக்கு தெற்றல்
நலிவரிய முகவாதம் விரைவாத மெரிவாதம்
நாத்துடி நடுக்கு வாதம்
விடைத்துவரு மொருபக்க வாத முன்குந்து
4 றவீச் சிலம்பிள்ளை வாதம்
வீண் ~~கொ~~ ஜ்ரம் பிணிக்கு வருசன்னியொடு காழுகை
மேல்தரிப்பு புனைவு குந்து
தடித்தகுடை சிலேற்பன ரோகமொடு சீதகப
தோஷம் வரு நுணுக்க தென
துங்கவடி வேலவன் பொதிகை முனிவர்க்கருள்
சுகபுத்தி யுபதேசமே.

404

408. வாதத்துக்குத் தைலம்

எடுக்கவும்:

வேப்பெண்ணெய், சுக்கு, மிளகு, திப்பிலி, பூநாகம் எனும் மண்புழு, வெள்ளை வசம்பு, இக்கில், வெள்ளைப்பூண்டு, கடுகு, பாம்பை வெட்டிய துண்டம், ஆகியவற்றைச் சமமாக எடுத்துச் சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தி செய்து இடித்துப் பொடித்து, வெண்ணொச்சியிலைச் சாறூற்றி அரைத்து அவ் வெண்ணெயில் கலந்து அனலிலிட்டுக் காய்ச்சித்தக்க பருவத்தில் வடித்துக் கலசத்தில் நிரப்பிக் கொள்ளவும்.

இத்தைலத்தை உடலில் வலியுள்ள இடங்களில் துவளையாகச் செய்யும் போது தேவையுற்ற இடத்தில் பலமுள்ள வரை தேய்த்து விட சுரசூலை, வாதம், குறுக்கு வலியுடனான சன்னிவாதம் இணைமாகும்.

4 மி.லி உள்ளுக்குக் கொடுக்க எட்டுவகைக் குன்மம், வாய்வு வகைகள், கிறண்ட வலி, மாந்தவலி, ஆகிய நோய்கள் தீரும்.

135

350-

ஆ. வாதத்துக்குத் தைலம்

அண்டமுமேழு நிலைப்பமெண்ணெய் திரிகடுகு
பூனாக வெண்வசம்பு குக்கில் (பாம்பு)
அழுகு லசுனம் கடுகுகட் செவி கண்டமும்
அளவு சம னிறையடி பொடி
கண்ட வெண் ணொச்சியிலை தன்சாரகம் விட்டரை
கரைத்து வா றெண்ணெய் தனிலே
காச்சிறு பருவம்வடி கலச மதனால்
யடை கட் டாகயித் தயிலமே.

உண்டவுடல் மீதினில் இத்தனை வரோன்பல
முற்றவிட மட்டு மிடுமே
ஓதரிய சரசுதனை வாதம் இழுக்கென
யுடனணுகு சன்னி வாதம்
திண்டாடி யோடிவிடு மென்னொரு கிரண்டி
கொண்டிடி லடக்கும் வாயுவ
தீராக் கண்டவலி மார்வலி தீர்ந்திடச்
செப்பினென் கத்தி சனே.

408

409. வாதத்திற்குத் தைலம்

பிறைச்சந்திரனைத் தலைமுடியில் சூடிய சிவபெருமான் அடியவர்களின் துயரைத் துடைப்பவன் அவனிடம் ஈடுபாடு கொண்டு அவனின் அடியினை உள்ளத்துள் நினைத்து அந்த அன்பால் மலர்ந்த எட்டியின் பழம், மரப் பட்டை, சிவப்பு சென்னெருஞ்சிலின் வேர், பாவட்டை, வேளிசம் வேர், கொடுக்காரை வேர், சுண்டை வேர், நிலப்பனையின் வேர், கார்த்திகை வேர், நன்னாரி வேர், செங்கத்தாரி வேர், சித்திரமூல வேர், பாதரெட்சை வேர், மெருக்கன் வேர், கூவிளை எனும் வில்வம், குருந்தொட்டி இவற்றின் வேர், பொன்னான் பிரிய வேர், குருவாந்சி, மிக்கா வேளை ஆகிய மூலிகைகளின் வேர்களையும் எடுக்க.

205. அ. வாதத்துக்குத் தைலம்

இலைக்கொழுந் திளம்தி முடிக்கணிந் தடியார்கள்
கொடுவினைத் துயர்நீங் கிடும்
கோடொன்று முடையானை நிருசே ரடியினை
குறித்துன் மெதி யன்பால்
பலப்படுங் காஞ்சரம் பழம் மரப்பட்டை
படர்ந்திடும் சென்னை வேரும்
பாவட்டை வேளிசம் வேர் கொடிக்காவேர்
பாகான சண்டை வேரும்
நிலப்பனையின் வேருடன் கார்த்திகையின் கிழங்கும்
நீடு நன்னாரி வேரும்
நீர்சேர் தாரியொடு சித்திர மூலமும்
நீர்நிறை பாத ரச்சை
தலைப்படு மெருக்கின் வேர் கடலை கிழங்கோட
துடங்கு பொன்னான் பிரியவேர்
சுகமான கூவாங்கி முப்பூர மெரித்தான்
துடர்ந்தன சொல்லுவேனே.

410. ஆல், அரசு, அத்தி, இத்தி ஆகியவற்றின் மரப்பட்டை, கைதோன்றி, செம்முள்ளி வேர், தாதுவளை, நறும்பாஞ்சி எனும் நறும்பிசின், கொற்றான், கொழுஞ்சி, ஆவரை, சவரிக்கொத்து, கள்ளிவேர், நிலவாகை, வாதமடக்கி, புங்கு, வட்டத் தாமரைக் கிழங்கு, பூரவள்ளி, சிவனார் வேம்பு வேர், காத்தொட்டி, நிம்பம் பட்டை, (வேம்பம் பட்டை), செந்நகரம் எனும் ஒரு வகைச் சிவப்புப் பழம், செங்குன்றி, மாவிலிங்கு, கருங்குருவை நெல், சாறடை, அமுக்கிரா வேர், முல்லை, வல்லாரை, சீந்தில் தண்டு, கருநொச்சி, மிளகு, தான்றி, முக்கரைச்சி, கையாந்தகரை, நெற்றி வேர், விஷ்ணு கிராந்தி, ஆகிய பதினெட்டு மருந்துப் பொருட்களை 630 கி எடுத்துக் கொள்ளவும், மொத்தமாக →

ஆ. சொல்லுவே னாற்பா ரேமபட்டை கைதொண்ணி
சுகமான செம்முள்ளி வேர்
தூதளை நெரும்பாஞ்சி கொற்றான் கொடிஞ்சி
நற்சூரை சவரி கொத்துடன்
வில்லபத்துடனே சொல்திரைவேர் நிலவாகை
விதமடக்கி புங்கு
வளரும் வட்டத்தாமரைக் கிழங்கு கொடுபூவள்ளி
சிவனார் வேம்பு வேர்
தில்லை காத்தோட்டி நிலம்பட்டை செங்கனை
செங்கண்ணி மாவி லங்கு
சேரு பூமத்துக் கடல்வழி சாறணை
சிறுகுடமுக்கிரா வேர்
முல்லை வில்லாறை சிற்றித்தண்டு கருநொச்சி
முன்வெட்டு மிளகு தண்ணி
மூக்கணா கையான் தெற்றி வேர் வெல்க்கிராந்தி
யாவை மூன்று ~~நாலு~~ பலம தாமே.

~~409~~ / 410.

411. ~~ஒரு பாத்திரத்தில் உ.லி தண்ணீரூற்றி~~

35கி மருந்துப்பொருளுக்கு உ.லி வீதம் 630கிமுக்கு 1638 லி தண்ணீரை ஊற்றி மருந்துப் பொருட்களைப் போட்டு 205லி ஆக சுருக்கிக் காய்ச்சவும். அத்துடன் நல்லெண்ணெய், வேப்பெண்ணெய் அளவறிந்து சேர்ப்பாயாக! சுக்கு, வெள்ளைப்பூண்டு, கஸ்தூரி மஞ்சள், மரமஞ்சள், வெட்பாலை, வாய்விடங்கம், தேவதாரம், அகில்பூ, சதகுப்பை, நிலவேர், கார்கோலரி, நற்சீரகம், கருஞ்சீரகம், சிற்றரத்தை, முருசு, வெள்ளைப் பிசின், செண்பகப்பூ, சடாமாஞ்சில், சன்னிநாயகன் பூடு, ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்தரைத்துக் குடிநீரில் கலந்து வைத்துக் கொள்வாயாக! மேற்சொன்ன அனைத்தையும் நன்றாய்க் கலக்கி அனலிலிட்டு காய்ச்சுவாயாக!

[illegible]

206. அ. பலத்துக்கு இரண்டுபடி நீர்விட்டு எட்டிலொன்று
பங்காய்வேகு நாக்கி
பாங்கான நல்லெண்ணெய் ஒப்பெண்ணெய்
விட்டுடன்
பக்கரை மருந்து கேளாய்
வெக்கமில்லாச் சுக்கு வெள்ளுள்ளி கஸ்தூரி
மஞ்சள் மரமஞ்சள் வெப்பாள்
வாய்விளங்கம் தேவதாரம் மகில்நாரம் தினம்
மகில்ப்பூ சதகுப்பையும்
நிலத்தின்வேர் கார்கோலி நாரிசியாரு சீரகம்
நிகர்சிற் றரத்தை மிளகு
நிலமைபெற வெண்பிசின் செண்பகப்பூ மாஞ்சி
நிகழ்சன்னி நயறுடனே
இலக்கண மொதகவே யிவைமுக் கழஞ்சதை
இயல்பாக வேயரைத்து
இயல்பான கஷாயத்திலே கலக்கிக்கிண்டி
இனிதுபெற வைத்திடாயே

[illegible]// 411/

418. கொதித்து வரும் சூரியகாந்த லேகா

வாதத் தைலத்தை மெழுகு பதத்தில்

வடித்துப் பத்திரப் படுத்திக் கொள்ளவும்.

இவ்வெண்ணெயை உடலெங்கும் நன்

-றாகத் தடவி தலையில் விட்டுத் தேய்த்துப்

பின் வெந்நீரில் குளித்தால் சப்பாணி,

உண்முதுகு, கோணை வாதம், விரைவாதம்,

துடி வாதம், ஆகியவை ஒழிந்து விடும்.

பதினெட்டு வகை பித்த வெறி கிறுகை,

-பக்கவாதம், உடலினின்று நீங்கும்.

இது என்னுடைய பிரம குருவின் ஆணை

-யாகும்.

[illegible]ாதிகை மலையில் வாழும்

அகத்தியர் முனிவர்க்கும் சித்தருக்கும்

உபதேசித்து அருளிச் செய்த தைலமாகும்.

ஆ. வைத்திடாய் ஏகுரிய காந்தலோக வாதத்தெண்ணெய்
வருமெழுகு பதம்வ ருத்து
வளரவே சருவாங்க முந்தவிச் சிரசினில்
வரிசைபெற விட்டு மூழ்கில்
சுத்தமாய் தீரும்நோய் சப்பாணி கூன்முதுகு
துணுக்கிடுஞ் கோறை வாதம்.
துலையாத விறைவாத ~~மொருதுடி~~ வாதமும்
துலைந்துலைந் தே யோடிடும்
பித்தவெறி கிறிகை பதினெட்டு ஊனொடு பாரிசம்போ
~~பாரிசம்போ~~ பக்க வாத முதலாய்
பிசகியே யுடல்தனி லணுகாது யென்னுடைய
பிரமகுரு வாணைப் படி
அத்தனார் தென்பொதிகை மலைவாழ் நாயகன்
கத்திய மாமுனி வருக்கு
அன்பினுட னுபதே சித்தருளும் வழிகொனா
றருள்கின்ற விதிநா விதே.

~~414~~ 412

வாதத்துக்கு அந்தெண்ணெய்த்தைலம்

413. வேப்பெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய்
இவையிரண்டையும் வகைக்கு 1.3 லி, புன்
முருங்கை, சின்னி, குப்பைமேனி, வேளை,
தழுதாழை, மிளகரணை, பேய்ப்பாலை, கொடி
வேலி, இண்டு, கண்டங்கத்தரி, புங்கு,
இசங்கு, ஊமத்து, கொத்துமல்லி, மருதோன்றி
வேம்பு, மாவிலிங்கு, குமிழ், காட்டுக்குன்றி
கருவூமத்தை, நாயுருவி, கள்ளி, கார மருக்
-காரை, தூதுவளை, அமுக்கரா, நிலக்கடம்பு,
முருங்கை, நொச்சி, காட்டாமணக்கு, வெள்
-ளைச்சாரணை, காட்டுமானின் கஸ்தூரி
மானின் உச்சந்தலை, கழற்சிக்கொடி
உத்தாமணி, கடப்பங்கொழு, இருப்பையின்
மேலுள்ள புல்லுருவி, ஆயிலியப்பட்டை
-யின்வேர், ஆகியவற்றை வகைக்கு 1.75 கி
கிலோ எடுக்கவும்.

207 அ. வாதத்துக்கு அஞ்செண்ணெய்த் தயிலம்

பாரினமேது கம்புங்கேள் நிம்ப முத்தெண்ணெய்
வகைபெபடி புன்முருங்கை சின்னி
பசுமேனி வேளைதழுதாழை மிளகரணை
பேய்ப்பாலை கொடுவேலி யிண்டு
ஓரிகண்டாங் காரிபுங்கிசங் க—மத்து
வல்லி வெருகோன்றி நின்பு
மாவிலங்க ஓரிதழின் காட்டுச்சி இன்றி
குருவாகை நாயுருவி கள்ளி
கோரைமருக்காரை தாதனை யசுவ நிலக்கடம்பு
பூர முருங்கை நொச்சி
காட்டாமணக்கு வெண்சாரணை கருந்தெருங்
கலையாரம்பொடு உச்சி
ஏர்கழற் கொட்டி யுத்தாமணி யடம்புட
னிறுப்பை மேல்புல்லுருவி யாயில்பி
யாயில்பட்டை நெலிகைவேர் தாரசமேலம்
வகையினை
பலகோரைந் தாணா ரிதமே.

41 ஆ

414. 20.8லி வேப்பெண்ணெயையும் 6.5லி
சிற்றாமணக்கெண்ணெயையும் சேர்த்துக்
கொள்ளவும். கார்கோலரிசி கோரோசாணிமுடம்,
திப்பிலிமூலம், சடாமாஞ்சில், சிறுதேக்கு,
நாகப்பூ, யானைத்திப்பிலி, கிராம்பு, அசம
-தாகம், குப்பைமேனி, கிச்சில், தாளிசபத்திரி,
கருஞ்சீரகம், ஆகியவற்றை வகைக்கு 35கி
எடுத்துத் தண்ணீருற்றி அரைத்து அவ்
விழுதை எண்ணெயில் கரைக்கவும்.
மயில் தோகையை 35கி எடுத்துத்தண்ணீ
-ரூற்றி அரைத்துக் கலவையில் கலக்கவும்.
நந்தியாவட்டைப் பூச்சாற்றை 2.6லி
அளவெடுத்து எண்ணெய்க் கலவையில்
கலந்து அடுப்பேற்றி எரித்துக் காய்ச்சி
கொதித்து மெழுகு பருவத்திலாகும்
பொழுது ஒட்டடை, இலிங்கம், கஸ்தூரி
இவை மூன்றையும் வகைக்கு 4கி ~~எடுத்துச்~~
சேர்த்து, எடுக்க.

ஆ. அதனிலிரு நால்மறைக்கால் காமஞ்சு படியாக
முன்னெண்ணெய் யதனோ டளித்திடு
வசம்பு கார்கோல் சாணி திற்பிலி
யரத்தை பெருங்காய முன்னி
மதுவான வெண்மிசி இஞ்சி திற்பிலி
மூல மஞ்சி சிறுதேக்கு
நாகமலர் கேசத்திற்பிலி கிராம்பயமதாக
பூமாச்சக் குப்பை குக்கில்
வதனமுறு தாளிச பத்திரி கிரிசிறகம்
வழுங்கு பலமோர் காலதாய்
வகைவகை சிறுத்தொட்டு நீரரைத்தே கரை
மயிற்பீலி யந்த விதம்
பதிகமதுபோல் நந்தி கேசரச் சாறிரண்டுபடி
படி சேர்த்தெரித்து மெழுகு
பருவமதி லாகாசத்தாள் லிங்கம் கஸ்தூரி
பகர்வகை கிராக னொன்றே.

414

415. மேற்சொன்ன மூன்றையும் வடிகலசத்தில்
போட்டு இறுத்துக் கொள்ளவும். முசறு
முட்டை, கோழிமுட்டை, வெள்ளைப்
பூண்டு ஆகியவற்றையும் போட்டு மூவகைத்
தைலமாக ஆக்கித் தனித்தனி பாத்திரங்களில்
வேடு (துணியினாலான) கட்டி வைக்கவும்.
488மி.கி எண்ணெயைக் குடிக்கக் கொடுத்து
உடலிலும் துவாணையாகத் தடவிவிடவும்.
ஏழுவகைத் தோடங்கள், சன்னி வலி, உள்
இத்து, புறவீச்சு, வாய்வு, வாதம், காக்கைவலி
குதிரை வலி, முயல்வலி, வருணைவலி, குமர
கண்டன் வலி, அண்ட வாதம், இளம்
பிள்ளை வாதம், பக்கவாதம் பாரிசவாதம்
எனும் ஒரு பக்க வாதம், முகவாதம், நாக்
-கிணை உலர்த்தும் சன்னி, தொந்தசன்னி,
ஒருதலைக் குத்துவலி, பிடரிவலி பீசைம்
கிறுகிறுப்பு ஆகிய நோய்கள் இந்த
ஐந்தெண்ணெயால் குணமாகும்.

357

பாடல்

208. அ.

~~அஞ்சனைம்~~

விரைவாக மூன்றும் வடிகலச தெளிவிட்டாறு
பிசாறுபட்டை யண்டம் லசுனம்
வின்றுமித்து பேவுகைத் தயிலமொன் றங்கு
வருவிதம் விடுவெடு கட்டு
இரணமுறு காசிடை உள்க்கொடுத்து தடவுமிடு
யேருதோறை சன்னி வலியும்
ஏந்தவ்கையா வள்குத்து றெவிச் சடன்
எருகின்ற வாய்வு வாதம்
மருளான காகவலி கதிரைவலி முயல்வலி
வுருணைவலி குமர கண்டன்
வலியண்ட வாதமோதளம் வெள்ளை வாதமும்
வரும்பக்க வாத முடனே
உதமான பாரிச வாதமுக வாதநா
அலர்த்து சன்னி தொர்தசன்னி
ஒருதலைக்குத்து = வலி பெடரிவலி பீனிசம்
உருபிதை கிறுகி றப்பே.

415

416. உப்பு, புளியையும் இவை சேர்ந்த ~~[struck out]~~ காய்கறிகளையும் நீக்கிக் கொள்ளவும். சிறு பயறு, தூதுளங்காய் வற்றல், வெள்ளாட்டு வற்றல், வழுதலங்காய், முருங்கைப்பிஞ்சு ஆகியவற்றைப் பத்தியமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். உலகத்திலுள்ளவர்கள் நோயின்றி சுகத்துடன் வாழ இப்பத்தியத்துடனன்றி இச்சாபத்தியத்தையும் ~~[struck out]~~ கடைப்பிடிக்க வேண்டும். இவ்வைந்தெண்ணெய்த்தயிலத்தால் நோய்கள் தீரும். இவ்வெண்ணெயின் சிறப்பைக் கூற முடியும் அளவுக்கு இல்லை. வேதங்கள் கூறிய படி இறைவன் மெய்த்தவம் புரிந்த ஞானியர்க்குக் கூறிய சாத்திரப்படி அமைந்த எண்ணெய்.

143

358

ஆ. உ.0ப புளிதன்னி நோய்வகை யறிந்தே
நயமுடட் கொண்டு பத்தியங்கள்
ஓதுவேன் சிறுபயறு தூதளங்காய் வற்றல்
உறுதி வெள்ளாட்டு வற்றல்
கைப்பற்ற வழுதலங்காய் முருங்கை பிஞ்சு
கருதிவரு பத்தி யங்கள்
கண்டுதே சலகோர்கள் தேகத்தில் நோயெலாம்
கட்டுடன் தீர வேண்டல்
ஒப்பமுடனே யகப்பத்திய மறிந்து தன்று
உறுதிபெறு நோய்களெல்லாம்
ஓடிவிடு மெஞ்சைச் நயலத்தின் வேகமது
உரைக்கமுடி யாது மென்ன
தப்பற்ற மெறைகண்டு மிணர்வுடன் மெய்க்க
மெய்த்தவம் புரிந்தருளு ஞான
சாத்திரம் பிறமனருள் சூத்திர முறைப்படி
தப்பாதுரைத்த குருநூல்.

416/

417. வாதத்துக்கும் இளம்பிள்ளை வாதத்துக்கும் தைலம்

உமரி, கருநொச்சி, எருக்கிலை செருப்படி ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 1.3லி சமுத்திர சோகி, கடல் மண்புழு, எலிப் பாடாணம், இரசம் ஆகியவற்றை வகைக்குச் 5கி எடுத்து மேற்சொன்ன சாறுகளில் அரைத்து 1.3லி நல்லெண்ணெயைச் சேர்த்துக் கலந்து அனலிலிட்டு எரித்து மெழுகு பதத்தில் பதத்துடன் கலத்தில் அடைத்துக் கொள்ளவும். இவ்வெண்ணெயை உடலெங்கும் நன்கு துவளவைவிட்டுத் தடவி விடவும். வாத வகைகள் என்பதுடன் இளம்பிள்ளை வாதம், கை எரிச்சல் உடல் காந்துதல் ஆகியவை உடனே தீராது நாளெடுக்கும் என்றாலும் உப்பு, புளிப்புச் சுவையையும் உப்பு, புளி பொருட்களையும் நீக்கிவிடவும். நோய் விரைவில் தீரும்.

144 359

209. அ. வாதத்துக்கும் இளம்பிள்ளை வாதத்துக்கும்

தைலம்

உமரி கருநொச்சியோ டெருக்கலை செருப்படி
புவிராய ரசம்வகைக்கு நாழி
உயர்பெரு சமுத்திரா சோதிகடல் நாரப்புனம்
உடனலி மருந்து சூதம்

சமனாய் வகைக்குவகை நிறையொரு கழஞ்சது
திருதமுன் சார்விட் டரை
தயவான வெண்ணெய்படி ஒன்றுட கரைத்தெரி
தவறாமல் மெழுகு பருவம்

விமலனடி போற்றி நீர்கலச மதில்வடி
விபரமுட னெங்கு மிடுநீ
வெறிவாத மெண்பத்தோ டிளம்பிள்ளை வாதமும்
மேலிபுகலாமல் கையெறிவு காந்தல்

இமைபொழுது இல்லாதமைத்தபடி யென்றாலும்
யேகுமெப்புப் புளிவிடு
இதமாகு நோய்களது சமாகு மென்றான
இகைகுறு முனிக்கரு ளினார்.

417

இளம்பிள்ளை வாதத்துக்குத் தைலம்

418. இருவேலி சமூலம் 875கி, கொடுப்பை முசுமுசுக்கை 350கி, குறுந்தொட்டி 210கி, எடுத்து, 4.2 லி தண்ணீரில் ஒரு பாத்திரத்தில் இடித்துப் பொடித்துப் போட்டு கொதிக்க வைத்து முறைப்படி எட்டில் ஒன்றாகச் சுருக்கி (5.4 லி) க்கொள்ளவும். 2.6 லி நல்லெண்ணெயைக் குடிநீருடன் சேர்க்கவும். 40கி கோஷ்டம், சதகுப்பை, தேவதாரம் இவை வகைக்கு 20கி, எடுத்துக் குடிநீர் விட்டரைத்துக் கலவையில் கலந்து கொள்ளவும். பின் அனலிலிட்டு கொதிக்க வைத்து பதத்தில் வடிக்கவும்.

இத்தைலத்தைத் தலையின் உச்சி மற்றும் அனைத்து உடலுறுப்புகளுக்கும் தாராளமாகத் தேய்த்து வெந்நீரில் தலை குளிக்கவும். இளம்பிள்ளை வாதம், அனல் வாதம் ஆகிய நோய்களும் தீரும்.

ஆ. இளம்பிள்ளை வாதத்துக்கு தைலம்

குவளைத்திரு மருவேலி சமூலபல மையைந்து
கொடுப்பை யகராறு. மதிலே
குறைவா மொசுக்கை பலமீரைந்து கொண்டிடு
குறுந்தொட்டி பலம தாறு

இவைசேர வேயரிந் திடிபொடி விருதாணிகீர்
விட்டெரி எட்டிலொன் றாக இணங்கு
வடியெண்ணெய் படிரெண் டதில்
மரு நான்கு கோட்டம்

வெளுறு சதகுப்பை தேவதா ரஞ்சு
வகைதென்று நாலிக ரஞ்சு
வற்றிய கசாயநீர் வார்த்தரைத் தேகரை
வசணபத தேனில் வடிநீ

சிவமான தயிலமது உச்சிசறு வாங்கமுங்
தேய்த்து வெந்நீரியில் மூழ்கு
சிதைவுறு இளம்பிள்ளை வாதமேல் வாதமும்
திருமிது உண்மை தானே.

418

இளம்பிள்ளை வாதத்துக்குத் தைலம்

419. வேலிப்பருத்தி, எருக்கு, குப்பைமேனி, தைவேளை, முருங்கை ஆகியவற்றின் இலையை இடித்துப் பிழிந்த சாற்றைச் சம அளவெடுக்க. வெள்ளாட்டுப்பால் 1.3லி எடுக்கவும். வெள்ளைப்பூண்டு, வசம்பு, சின்னிநாயகன் பூண்டு, முசுறுமுட்டை, நிலத்தில் படர்ந்துள்ள வேர், கடுக்காய், சுக்கு ஆகியவற்றை 17½ கி எடுத்து மேற்சொன்ன சாறு ஊற்றி அரைத்து விழுதைச் சாற்றுடன் கலந்து கொள்ள -வும். 3825 மி.லி வேப்பெண்ணெயைச் சேர்த்து எரித்துப் பதத்தில் பக்குவமாக வடித்துப் பாத்திரத்தில் நிரப்பிக் கொள்ளவும். காலையில் உச்சி முதல் பாதம் வரையிலும் எண்ணெயைத் தடவி விடவும். மாலையில் பிரமி (வல்லாரை) ஊறிய இடிநீரில் பழைய துணியை நனைத்து எண்ணெய் ஊறிய இடங்களில் ஒற்றடமிடவும். இவ்வாறே நான்கு நாட்களுக்குத் தொடர்ந்து செய்ய இளம்பிள்ளை வாதம் குணமாகும்.

210. அ. இளம்பிள்ளை வாதத்துக்கு தைலம்

வேலிப்பருத்தி கொட்டைநுணை திருமேனி தைவேளை
நன்முருங்கைத் தொலி
மிக்காக இடிபுளிச்சாறு சமனானதில்
வெள்ளாட்டுப்பாலு நாழி
மாவைர்த்த வெள்ளுள்ளி வசம்பு சனி நாயகம்
வரிசை முசிறண்ட நிலவேர்
வரிக்கடுக்காய் சர்க்கரைப் பலமதாகவே
வகைசமன் சார்விட் டரை
பாலித்த நிம்பெண்ணெய் படியளவு கரைத்தெரி
பதம்வடித் ததைய மூச்சி
பாதாந்த மேயிடு சாய்பொழுது பிறவியன்
பச்சிலை கலந்து லவேது
நீலைப் பழந்துணி நனைத்துப் பிழிந்திடு
செய் பாகம் நாது தினமேழ்
தீர்ந்திடு மிளம்பிள்ளை வாதமிது வென்ற
சன் தெக்ஷண முனிக்க நுனினார்

420. இளம்பிள்ளை வாதத்துக்குத் தைலம்

காட்டு வேப்பெண்ணெய், நல்லெண்ணெய், சிற்றாமணக்கெண்ணெய், கருப்பு எள்ளினாலான எண்ணெய் ஆகியவற்றை வகைக்கு 1.3லி எடுக்க. கருநிறமுள்ள வண்டினை 35கி எடுத்து அனைத்தையும் ஒன்று சேர்த்து கருக்கி அம்மியில் வைத்தரைத்து மேற்கூறப்பட்ட எண்ணெயில் கலக்கவும்.

அடுப்பில் அவ்வெண்ணெயை வைத்தெரித்து மெழுகுப்பதமாகும் போது வடித்துக் கலசத்தில் அடைக்கவும். இவ்வெண்ணெயினை எப்போதும் நோயிற்குத் தடவலை செய்து கொள்ள இளம்பிள்ளை வாதம், கைகால் எரிச்சல், கைகால் வலி, உளைவு, ஆகியவை குணமாகும்.

ஆ. இளம்பிள்ளை வாதத்துக்குத் தைலம்

வளமேவு நின்பெண்ணெய் படியொன் றளந்ததோர்
வரிசை நல்லெண்ணெய் நாலும்
வந்ததில் சிற்றாமணக் கிரசி காறென்று
வகைநாசி யான போது

அளிசேர் கரும்பிடம் ஓர்பல மெயல்நலி
அவ்வள வெல்லாம் கருக்கி
அம்மிதனி லேயரை யுண்மைபுக வெண்ணையில்
அடவாக வேக வைக்க

இளகரம் சேரிபதம் மெழுகாகவே வடித்திதை
இருகலச மதில் வைத்து
எந்நாளு மீசன்டியினை பணிந்திடு தயால
பட்டமுடன் தொட்ட பொழுதே

கோரத்தைத்திடு மிளம்பிள்ளை வாதங்கை
கால்விடு குத்து எச்சல்
கெட்டுடன் திருமிது திடமென்று ராமுகக்
கடவுள் குருமுனிக் கருளினார்.

~~19~~ 420

491. இளம்பிள்ளை வாதத்துக்குத் தைலம்

1.3லி வேப்பெண்ணெயை அளந்து பாத்திரத்திலூற்றுக. தைவேளைவேர், வெள்ளைப்பூண்டு, வசம்பு ஆகியவற்றை வகைக்கு 35கி எடுத்துத் தண்ணீர் ஊற்றி அரைத்து அவ்விழுதையும் எண்ணெயில் கலக்கவும். ஏற்றிய அடுப்பில் வைத்து எண்ணெயைக் காய்ச்சவும். ஒரு கைப்பிடியளவு நில-வேரையும் அதில் போட்டெரிக்க. பின் கொதித்தடங்கும் போது வெற்றிலையைப் போட்டு பதம் அறிந்திறக்கி மண்கலசத்தில் அடைத்துக் கொள்ளவும்.

488 மி.கி அளவெண்ணெயை உள்ளுக்குக் கொடுத்து உடலிலும் துவாலை செய்து விடவும். 48 நிமிடங்கள் கழித்து வெப்பமுண்டாகும். தழுதாழை, நொச்சி, சிறியாணங்கை ஆகியவற்றின் இலைகளை இலேசான அனலில் வாட்டி துவாலை செய்ததன் மீது வேதாகச் செய்துவிட இளம்பிள்ளை வாதம், எரிவாதம் குணமாகும்.

148

363 →

அ.1.அ. இளம்பிள்ளை வாதத்துக்கு மூலம்

நீர்கொண்ட நின்பெண்ணை ஓர்படி அளந்ததில்
தைவேளை வேர்வெள் ளுள்ளி
நிருவசம் போபுளைவனைக்கோர் பலம்தாகவே
தப்பாது நீர்விட்டரை

சீர்கொண்ட எண்ணெயில் கலக்கியெரி புமிவேர்
சிரங்கை யாவு யெரித்து
சிதையாமல் வெற்றிலை போட்டுப் பதம்வடி
சிறியமட் கலச மைடநீ

கூர்கொண்ட காசிடை யுட்கொடுத்தே வளைவு
தோறுமிடு கடிகைரெண்டு
தொர்ந்தித்த காந்த தூண்டாகு மேபால்
வேதுசொல்லு தகுதானை நொச்சி

வேர்கொண்ட நின்படம் பாற்றியிலை சேர்த்திடு
மிக்க அங்கம் தனில்விடு
விபரமிதில் இளம்பிள்ளை வாத மெரிவாதம்
விட்டகது உண்மை தானே

421.

488. பான்வாதத்துக்குத் தைலம்

செந்நகரைப்பட்டை 280கி எடுத்து இடித்து 5.3லி தண்ணீரூற்றி காய்ச்சி எட்டிலொன்றாய்ச் சுருக்கி வடிகட்டிச் சட்டியிலூற்றி அதனுடன் 1.3லி வேப்பெண்ணெய், பாலையும் சேர்க்கவும். 17½ கி வசம்பினை இடித்து மேற்சொன்ன குடிநீரூற்றி அரைத்துக் கலவையில் கலந்து அடுப்பேற்றி வைத்துக் காய்ச்சிக் கொள்ளவும். மெழுகு பதத்தில் வடித்துக் கலசத்தில் அடைத்துக் கொள்ளவும்.

அவ்வெண்ணெயை இருப்பு.

முதல் பாகம் வரை துளாவி எடுத்து தேய்த்து பிடிக்கவும். பத்தியமாகக் காத்து சேடை பிடிக்க பாலவாதம், தலைவாதமும் நீங்கும்.

ஆ. பாரிசவாதத்துக்குத் தைலம்

இயல்கொண்ட செந்நகரைப்பட்டை பலமெட்டில் திரை
குறுணி நீர்விட் டெரி
சேருமிது எட்டிலொன்றாக வடி சட்டியால்
செப்பு நின்வெண்ணெய் பாலும்
பயில்கின்ற ஓர்படி தீதமதி லேவிடு
பல மறை வசம்பிடி மொடிபதம்
மாஞ்சி சாயநீர் விட்டரைத்துறவுசெய்
பதிய வெரிதழல் பாகமாய்
அயல்கொண்ட மெழுகுபதம் வடிகலச மீதிலை
அப்புறமுறைப்பு பண்ணா
அரைத்தொடுத் தள்ளடி வரைக்குமிடு மேல்போ
லாகாது மாது சதமும்
இயல்கொண்ட பத்தியம் பிழைகள் வாராமலே
காத்திடப் பாலிவாதம் ~~[illegible]~~
கரைநீல வாதமும் ஒருமிக்க லோடுமிது
களிறினை கத்தி சனே.

422

483. வாதத்துக்குக் கோழித்தைலம்

கருங் கோழியைத் எடுத்து உயிர்நீக்கி
வயிற்றிலுள்ள குடல் மற்றுமுள்ள கழிவு
களை நீக்கவும். வேப்பந்துளிர், கடுகு,
வெங்காயம் இவற்றை வகைக்கு 675 மி.கி
எடுத்தரைத்த விழுதை உள் செலுத்தவும்.
சிற்றாமணக்கிலை, எலுமிச்சந்தோல்,
வெள்ளைத் தான்றி வகைக்கு 1750 கி, தாழை
வேர், கொடிவேலி வகைக்கு 350 கி எடுத்து
இடித்துப் பிழிந்த சாறு 2.6 லி, 3.9 லி
தகரைப் பழம், தேங்காய்ப்பால் இவற்றையும்
உள் ஊற்றுக. முருங்கைவேர், நொச்சி,
வெள்ளைப்பூண்டு, இஞ்சி ஆகியவற்றின்
சாறு வகைக்கு 675 மி.லி தாழியில்
ஊற்றுக. முருங்கைக் கம்புகளை
அடுக்கி அதன் மீது கோழியினைவை
தாழியை வைக்க.

௩௩௮. வரதத்துக்கு கோசித்தையிலம்

கரிய கொக்கட தாவல்கத்தி கிர்சாதியுட

கைப்பிரை மொழித்துறு குல்

கடிதரின் தாமுதல் ... நின்பதன் றுளிர்

கருகின்னி வகையுரி யதாய்

வரவர வரைத்துட் செழுத்துமிளச கிற்றா

மணக்கிலை மொதிந்து கட்டு

.... நின்பர்கோரு வெள்ளை தென்றியது

பலமண்ப தருகுளை வேடும்

பருவ கொழுவேல் வகைபலம்பத் தரிந்திட

பலடசி றெண்ம பழகா

பதியவரு மூன்றுபடி தகுறுபழம் [illegible]

தெளிகா யகிலபி பூிந்து

விரைவினில் முருங்கைவேர் நொச்சி வெள்ளுள்ளி

கொவ்வையா யஞ்சிகிர்

வகையுரிவிதம் விருதாழியால் முருங்கையன்

கம்பு

நிறைமீது கொக்கட மதுவையே.

4 உ

424. தாழியின் வாய்க்கேற்ற பொருத்தமான சட்டியை மூடி அனலேற்றவும். கலவை-யிலுள்ள தண்ணீர் சுண்டி மற்றவை வெந்து இறக்கும் சமயத்தில் 3825 மி.லி வேப்பெண்ணெயைச் சேர்க்கவும். கோட்டம், சுக்கு மிளகு, திப்பிலி, அக்கரா, தேவதாரம், கருஞ்சீரகம், நிர்விடம், கஸ்தூரிமஞ்சள், சீனப்பாகு, வசம்பு, அரத்தை இவற்றை வகைக்கு 5கி, வன்னி, சாதிலிங்கம், இரசகற்பூரம், நவச்சாரம், வெடியுப்பு, சூடன், துரிசு, அயக்காந்தம், வளையலுப்பு, சீனம் ஆகியவற்றை வகைக்கு 10கி, எடுத்துப் பொடித்துக் கலவையில் சேர்த்து ஊறவாக்கிக் காய்ச்சி ஆற வைக்கவும். பழைய கலயத்தில் வேடு கட்டி அத்தைலத்தை ஊற்றிக் கொள்ளவும்.

ஆ. அதிக்குறு தாழ்வாய் கவிழ்சட்டி நீடுபுனல்
அறவெந் திறக்கு கவசம்
அகற்றி மற்றிடி செருநெய்யால் நின்வெண்ணெய்
யதுகால்விடு மருந்து கோட்டம்
கதிமை திரிகடுக்காய் தேவ தாரமும்
கிரியசீர நறுவிச கூடன
களித்திரி மஞ்சள் சீனப்பாவு நாபிநவணம்
கார்வசம் பரத்தை யேகம்
சதுர ~~கு~~ கழுஞ்சாம் வன்னிலிங்கம் கிரசகற்பூரம்
சாரம் வெடியுப்பு கூடன்
திருதிரி சயக்காந்தம் வளையலுப்பு சீனம்
தான்வகைக் கிருக பஞ்ச
பதனமுறவே பொடித்துரவு செய்யடைய
மண்பத் தொண்ணவித் தடக்கு
பண்புற கர்ச்சிறு பொரியப்பூ ரூவமோர்
பழுங்கலசமது வேடுகட்டே

A24

485. இறையருளுடன் இத்தைலத்தை
4886.லி அளவு காலை, மாலை இரு
நேரமும் முறையே பன்னிரண்டு நாட்
-களுக்கும் கொடுக்கவும். வீச்சுவலி,
பதினெட்டு வகை சன்னி, பலவகைச்
சுயசயங்கள், கிருமிவகைகள், வண்டுகடி
சில்விடங்கள், எண்பது வகை வாதங்
-கள், முதுகுவலி, உள்இளைச்சல்,
கை, கால் உளைச்சல், உடல் திமிர்த்தல்
உடல் முடக்கம், உடல்தறிப்பு, உடல்,
கால் விறுவிறுப்பு, ஆகிய நோய்கள்
இவ் வெண்ணெயின் குணத்தால்,
பலத்தால், தீரத்தால் நீங்கும்.
சிவனுக்கும் அகத்தியனுக்கும்
முருகக் கடவுள் அருளிக் கொடுத்
-தது. இது இக்குட விநோதமிக்க
ஔஷதமாகும்.

213.அ. கேட்டான பரமனருள் கிட்டவே திரிபுரி
கருத்தாக யாத்தயாலமே
காசளவு தாக யருபொங்குது பனிரெண்டுநாள்
காலை மாலையு மருந்து
மேட்டிலா வீச்சுவலி சன்னிபாத நெட்டுடனே
வந்தபல காய சயமும்
வருவான வாய்வதா வலிக்கிருமி யானதும்
வண்டுகடி சில்வி ஷங்கள்
ஒட்டியெடு வாத மெண்பது தின்னல்
சூதுவலி உள்க்குடைச்சல் கைகால்
உளைச்சல் தேகதிமிர் முடக்கதுதிரிப்புடன்
நடம்புகால் விறுவி இப்பு
விட்டோடு மென்று சிவ சங்கரர்க்கி
தவமேவு திருமூ்ணிக்கு வுறுக்கி
வெற்றிவேளாயுதக்கடவுளாருள் இக்குட
விநோதமாறு மவுளை கமே

425

426. வாதத்துக்குக் கோழித் தைலம்

கருமையான கோழியின் உயிரை நீக்கி
வயிற்றிலுள்ள குடல் மற்றுமுள்ள கழிவு
-களை நீக்கவும். வெள்ளைப்பூண்டு, கடுகு
இவற்றை 1260 கி, செம்பருத்தி 35 கி,
கருநொச்சி, நாய்க்கடுகு, பாவட்டை, வேம்பு,
முள்முருக்கு, முருங்கை, வெள்ளை மாவிலிங்கு,
எட்டி, வெண்குருந்து, தைவேளை, குப்பை
மேனி ஆகியவற்றின் இலைகளை எலுமிச்சம்
பழ அளவெடுத்து முறித்து சேர்க்கவும். தவைச்
சூடு வல்லி என்றழைக்கப்படும் தவைச்சுருளி
ஆமணக்கிலை, குறுந்தொட்டி வேர் ஆகிய
-வற்றை வகைக்கு 1750 கி எடுத்து 21.4 லி
தண்ணீரூற்றி கொதிக்கவைத்து நான்கிலொரு
பாகமாய்ச் சுண்ட எடுத்துக் கலக்கவும்.
ஆறு தேங்காயைப் பிழிந்து தேங்காய்ப்பால்
எடுத்து தாழியில் சேர்க்கவும். முருங்கைக்
காம்புகளை அடுக்கி வைத்து அதின் மீது
பாண்டத்தை வைக்கவும்.

ஆ. வாதத்துக்குக் கோசித்தைலம்

நோவிருள் கருங்கோசி சத்திகுடல் போக்கியுட
தூய்ய வெண்ணுள்ளி கருகு
சொல்லும் வகைஒன்று சுக்காழக்கு பட்டை
சாரதாரம் வகைபலம் தொன்று

மேவிடு கருநொச்சி நாய்க்கடுகு பாவட்டை
வேம்பு கிஞ்சுக முருங்கை
வெண்மா விலங்கு விரைமுட்டிக் குருந்து
தைவேளை திருமேனி யிலையும்

நாவியரை ஓர்சம்பளத் தளவு எடுத்துச் சாறு
தைதரா மணக்கிலை பொதி
தலைசுருள் வள்ளி சாற்றிக் குறுந்தொட்டியே
தாறு மண்பூசு பலமிட

காவெறுத்தா தாணிக் நாறுபடி காய்ந்து
தேங்கா யுடைத்தாறு புளிந்து
கணதாழி சேர்முருங்கைக் கம்பிடைப்
பக்குவமதில்
பாண்டமதில் வைத்து மூட

✓

427. அப்பாண்டத்தின் வலையைச்சீலை மண்ணினால் அடைத்து, புளி, எட்டி, விறகினை அடுப்பில் வைத்தெரித்து பால், நெய் வற்றிய பிறகு அதனை வடித்துக் கொள்ளவும். மேற்கூறிய குடல் நீக்கிய கோழியினைச் சேர்த்துப் பிசைந்து விடவும். 1.3லி வேப்பெண்ணெய் அக்கு, மிளகு, திப்பிலி, அகில், வால்மிளகு, கோட்டம், வலம்புரிக்காய், கருஞ்சீரகம், நற்கடுகு, கஸ்தூரி மஞ்சள், தேவதாரம் ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துப் பொடித்துக் கலவையில் கலந்து எரித்து மெழுகு பதத்தில் வடித்து வைக்கவும். ஒரு கரண்டி அளவு தைலத்தைப் பத்தியத்தோடு உள்ளுக்குக் கொடுத்து வேப்பெண்ணெயை உடலில் தினமாலையாகத் தேய்த்து ஒற்றடமிட வெறிவாத நோய், இத்துணாவு நீங்கும்.

204அ. மேருவது மேனோடு சந்துவாய் சிலைமேன்
மூட்டுபுரி யெட்டி யான
முதன்மையோர் இலவிறவு தாகளரி பாலிவற்றி
முறுக்கு நெய்யாரி வடிகி
நெடுசினை குக்குட மெடுத்துப் பிசைந்துவிடு
நின்வெண்ணெய் படியு மதிலே
நீதி முக்கருகு துடிவால்மினாகு கொட்டமும்
நேர்வலம்புரி கிரிய சீர
தேருநெற் கருகினோடு கஸ்தூரி மெஞ்சணம்
தேவதாரம்? ... கழுஞ்சு
சித்ரவடி தான்கலந் தெரிபருவ மெருகுதாய்ச்
சேர்வடி யோர்க ரண்டி
விருறும் பத்திய மோருண்று கற்கம்து
கிசிவேப்பெண்ணெய் தனிலே மொற்று
வெற்றிவாத சூலை குத்துனாவு போமென
விளம்பினன் கத்தி சனே.

பதி

428. வாதத்துக்குக் கோழித் தைலம்

கருமையான கோழியின் உயிர் நீக்கி குடல் முதலான வயிற்றிலுள்ள கழிவுகளை நீக்கி அதில் கருஞ்சீரகம், தேவதாரம், இவை இரண்டையும் சமமாக அரைத்து விழுதை உள் செலுத்தவும். சிறு குறிஞ்சிவேர் 1750 கி எடுத்து 21.4 லி தண்ணீரில் போட்டு காய்ச்சி 5.3 லி ஆகச் சுருக்கி வேறு தாழியிலூற்றிக் கொள்ளவும். மேற்சொன்ன கோழியைத் தோலாந்திரமாகக் கட்டி அடுப்பில் வைத்தெரித்து 1.3 லி ஆகக் குடிநீரைச் சுருக்கி அதனுடன் 1.3 லி வேப்ப நெய்யைச் சேர்க்கவும். இதில் மருந்து சேர்த்த கோழியையும் சேர்த்து எரித்து மெழுகு பதத்தில் வடித்துக் கொள்ளவும். வேளைக்கொரு கரண்டி அளவாக காலை, மாலை இரு வேளையும் இத்தைலத்தை உள்ளுக்குக் கொடுக்க மேகவாத சூலை, குத்து, உளைவு, வலி ஆகியவை தீரும்.

155 370

ஆ. வாதத்துக்குக் கொழிஞ்சியுலம்

உரன்கருங் கோழிகுடல் தூவல் முதலனதும்
ஒழித்ததிற் கரிய சீரம்
உயர்தேவ தாரமினை வகைசம னகத்திரைத்
தூப்பு கட்டியது கட்டு

வான்சிறு குறுந்தொட்டி வேருபல வென்பது
மாட்டியெடு குறுணி சீரில்
வாரக. புனலோ மரக்கால் வேறுதாழி
வாரணர் தோவார் சிரம்

நான்கட்டி சூடிபெரி படியொன்று தாக்கி
வேர்ச...கு விடுசின்ப இருபயன்றோ
நாக்கு குக்குட மருந்தொக்கக் கலக்கியுரி
கருமைமுகு பருவம் வடிந்

தேன்றிடத் தினைமரு பொருக்கோர் கரண்டியுண
துவைந்துவிடு மேகவாத நோவை
குத்துளைவு வலிகுடை வகையு மென்றான்
சேர்குட முனிக்க ருளினார்.

~~[illegible]~~

428

429. வரப்பிரசாயன் தைலம்

எண்பது வகை வாதங்கள் முப்பத்திரண்டு வகை சூலை, நாற்றெட்டு வகை பெரு வயிறு, நாற்பது வகை பித்தம், இன்ம வகைகள், இத்து, விக்கல், போன்ற அனைத்து நோய்களும் குணமாக வரப் பிரசயனத்தைலமொன்றைக் கூறக் கேட்பீராக!
எருக்கிலைச்சாறு, சிற்றேரண்டத்தெண்ணெய், 1.3லி தேங்காய்ப்பால் புங்கன் வேர்ச்சாறு ஆகியவற்றை ஒரு பாத்திரத்தி லூற்றி மூன்று நாட்கள் கழிந்தபிறகு கடைமஞ்சள் பத்து, வெந்தயம் எட்டு, பெருங்காயம் ஆறு, வட்டச் சிறுகணை வேர், மாவிலிங்கு தோல், நேர்வாளம் மூன்று ஆகியவற்றையும்

315 அ. வாப்பிரசாயண்தயிலம்

வாதமெண்பது தனைமுப்பத்தி ரண்டு
பெருவயறு நூற்றெட்டு வாய்வும்
பெருன் பித்த மெண்ணாற்சு கின்மக்கொருத்து
வாயுக்குத்து விக்கல்

சாதியெனு நோயெல்லாந் தீர்ந்திட வாப்பிரசா
சாயனத் தயில மொன்று
தானொருக்கின் இலைச்சாற்று கொண்டப்
தெனெண்ணெய் சேர்விட்டு இட்டு
தாதுதேறு காய்ப்பால் சேர்காசி புளிக்கள்ளோர்
சாறு உட்டுதினம்
திவ்ராம தாற்றி செந்நாணபின் னதிலிடு
சரக்கு குடமஞ்சள் பத்து
ஏது சுருவா வெட்டுமாக தியதேகு
அத்தொடு பெருங்காய மாறு
உயர்வட்டச் சாரணைவேர் மாவிலிங்கு
தொகுறு
சத்தி வாண சென்றே

429

432 வது செய்யுண்மை
~~[illegible]~~ தொர்க்கவல்

430. அக்கு, கோட்டம், நற்சீரகம், கருஞ்சீரகம், வசம்பு, திப்பிலி, ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துச்சுத்தி செய்ய வேண்டியவற்றைச் சுத்தி செய்து இடித்து அரைத்து அவ்விழுதை மேற்சொன்ன கலவையில் கலந்து 9 மணி நேரம் ஊற வைத்து அடுப்பேற்றி காய்ச்சி மெழுகு பதத்தில் வடித்துக்கலசத்தில் இறுத்துக் கொள்ளவும் அதினின்று ஒருகுப்பியில் ஊற்றி வெயிலில் வைத்தெடுக் கொள்ளவும்.

இத்தைலத்தை அளவறிந்து கொடுக்க வாய்வு வகைகள், பெரியவயிறு, இரைப்பு, சிறுவாய்வு, வாய்வு இத்தல், ஆகிய வை நீங்கும். மார்பின் நடுவில் வலித்து எதிர்ச்சலைக் கொடுக்கும் வாய்வுகளுக்கும் இத்தைலம் தீர்வாகும்.

157 372

ஆ. மூன்றான வேர்க்கொம்பு கோட்டை ஒரு சீரகம்
ஆதாரு வசம்பு திற்பிலி
மேலம்பலகையோர் கழுஞ்சா யிடித்தே யரை
அச்சாரம் உறா உரைத்துக

காச்சுபத மெருகதொடுடன் இடித்தே யிருத்து
ஒருகுப்பி தனில்விடு ரவியதனில்

௨\ரூ . . . .
. . . . வைத்தெடுத்து

வொன்றெடுங் தயலமானது பெரியவாயிவு இன்மை கிறக்கோ
கழுந்தி வலிய பெருவயறு

. . . .
வந்த சிறு வாயிவு டனே

மோன்றி வாயிவுக்கு தேத்தலா மேலே
நமோற்பிலே வெறிக்கொண்டதும்
. . . . பிராதிடு
வாயுக்கதி
மாறுமன்பிணி நிசமிதே

429

431. <u>வாய்வுக்குச் சிந்தாமணித் தைலம்</u>

தகுந்த பாத்திரத்தில்
சிற்றேரண்டத் தெண்ணெய் 1.3லி
தேங்காய்ப்பால் 1.3லி எடுத்துக் கலந்து
கொள்ளவும். கடுக்காய் 50 எண்ணிக்கை,
வெள்ளுள்ளி எனும் வெள்ளைப் பூண்டுப்
பல் 5௨கி, இந்துப்பு, பொரிகாரம் வகைக்கு
15கி கடுகுரோகணி ௨5கி, உத்தாமணி,
நொச்சி இவற்றின் சூரணம் வகைக்கு
30கி எடுத்துச் சுத்தித்து அரைத்து அவ்
விழுதைக் கலவையில் கலந்து கொள்ளவும்

ஏற்றிய அடுப்பில் கலவையுள்ள
பாத்திரத்தை வைத்தெரித்து கொதித்து
அடங்கிய பின் பதத்தில் இறுத்து வடித்
-துக் கொள்ளவும். இதனை அளவறிந்து
கொடுக்க நாற்பது வகை குட்டம், முப்பது
வகைக் கிரந்தி, சூலை, பதினெட்டு வகை
மேகம், (21), நாற்பது வகை வாய்வு
வெடி கெண்டை ஆகிய நோய்கள் சூரியன்
முன் கண்ட பனி போல் தீரும்.

24/11/84

216. அ. வாய்வுக்கு சிந்தாமணித் தைலம்

சீரக மெருவு சிந்தாமணித் தயிலமொன்று
சிற்றே ரண்ட எண்ணெயிபடி
நேர்தெங்காய் பிழிந்து வரும்பால் ~~[illegible]~~
வாள்நாரினோடு
சேர்கடுக் காயண்பது
ஓர்பெருகு வெள்ளுள்ளி யரிசிபல மொன்றரை
யிந்துப்பொரி காரமனை
தினாந்திறி கழஞ்சு ரோகணி· ஐங்கழஞ்சதி
விளங்கு மூத்தாமணி தானாய்
தேர்பெருகு நொச்சிவேர் வகையறு கழஞ்சதாய்
தானரைத் தேக ரைத்து
தவறாமலெரிபதத் திறுதயில மேகொடு
சார்கிட்டம் காற்ப துடனே
தேர்பெருகு ஆனை நாளைட்டுக் கிரந்தி
பேவர்மேகம் ரண்டு பத்து
வாய்வுந் நாற்பது· கெர்ப்பவாயுவிடி கெண்டையும்
வன்சன முன்பனி யாகுமே.

431. ~~[illegible]~~

432. மேகத்துக்குக் கலியாணித் தைலம்

1.3லி நல்லெண்ணெய் எடுத்துப் பாத்திரத்தில் ஊற்றி 70 கி சேராங் கொட்டையையும் 17½ கி கொடிவேலி வேரையும் சேர்த்தரைத்து எண்ணெயில் கலந்து ஏற்றிய அடுப்பில் வைத்தெரித்துக் காய்ச்சி கொதித்தடங்கி மெழுகு பதமானவுடன் மண் கலயத்தில் வேடு கட்டி நிரப்பவும். ஒரு கரண்டி அளவெடுத்து காலை, மாலை இரு வேளையும் கொடுக்கவும்.

தூக்கத்தில் விந்து கழிவும் கனல் மேக வெட்டை, பிரமேகம், சதையடைப்பு, நிணமுறுக்கி, நீர்மேகம், வயிற்றுப் பொருமல், வாய்வு, அரையாப்பு, ஆகிய நோய்கள் இவ்வெண்ணெயால் தீரும்.

கலியாணி — நீர்க்கடம்பு

159 374

ஆ. மேகத்துக்கு கலியாணத்துதியலம்

திருமருவு கல்யாணி தெயலாகல் வெண்ணெய்படு
சேர்குளம் பலமி ரண்டு
சிவந்த கொடிவேலி வேர்பல மறை நிறுத்திடு
சேர்த்தனைத் தேக லக்கு
மெருவுதழல் தேறக் காச்சுட்ட பதமேவிடு
மட்கலசம் வேடு கட்டு
மங்காம லிதத்தி சந்தியது வேளையும்
வகையாக வோர்க ரண்டு
கருதுபத்திய மதோடு பருகு நித்திரையற
கசிந்த கனல் மேக வெட்டை
கடிதான பிரமேகம் சதையடைப் புடன்
கசிகின்ற வணமு ருக்கி
வருணமுறு நீர்மேகம் வயிற்றெரிச்சல் வாய்வும்
வந்த அரை யாப்பு முதலாய்
மன்றாடி யோடும் நிசமென் றறுமுகன்
பொதிகைமலை முனிவர்க் குரைத்தனர்

438

433. காயம் ஆறுக்கும் அரும் தைலம்

வேப்பம்பட்டை, ஆடாதோடை, தாதுவளை, இசங்கு, செந்தொட்டி, கண்டங்காரி ஆகியவற்றை வகைக்கு 35 கி எடுத்திடித்து 21.4லி தண்ணீருற்றிய பாத்திரத்தில் போட்டு காய்ச்சி எட்டிலொரு பாகமாய்ச் சுருக்கிக் கொள்ளவும். நொச்சி, இஞ்சி, வேளை, குப்பைமேனி, முள்முருக்கு, முருங்கைப் பட்டை ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 325 மி.லி, வேப்பெண்ணெய் 1.3லி, மான்கொம்பு, திப்பிலிவேர், பெருங்காயம், அதிமதுரம், அரத்தை, சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப் பூண்டு, அக்கிராகாரம், சன்னிநாயகன் என்றழைக்கப்படும் காட்டுச்சீரகம், நாட்டுச் சீரகம், கடுகுப்பிசின், வலம்புரிக்காய் வடக்குப் பக்கமாகத் திரும்பியுள்ள வசம்பு, தேக்கு ஆகியவற்றை வகைக்கு 10கி எடுத்தரைத்துக் கலவையில் சேர்க்கவும். முசுறுமுட்டை, நிலவேர், இவையிரண்டையும் சேர்த்தரைத்துக் காய்ச்சி பக்குவத்தில் வடித்து உபயோகப் படுத்த காயம் குணமாகும்.

160 375

அரும்

217அ. காயம் அறுக்கும் தைலம்

ஏர்மேவு நின்பு தருதோல் தோடை தாதனை
இசங்கு செந்தொட்டி கண்டன்
இதன்வேர் பலஞ்சமனா யரிந்திடி சலங்குறணி
எட்டிலொன் றாகு மதிலே

சீர்மேவு நொச்சிஞ்சி வேளை திருமேனி
கிஞ்சுக முருங்கைதோல் ரசம்
சொல்லுகை யுழக்கு நின்வெண்ணெய்படி
இற்பிலா சூலமிங்கு மதுரவும் சிங்கி

தார்மே வரத்தை திரிகடுகுள்ளி யக்கிரா
சன்னி நாயகன் னிரண்டு
தருகடுகு பிசின்வலம் புரிவடக் கயிறோடு
வசம்பு தேக்கிரு கழஞ்சு

சீர்போலரைத்து முசிறண்ட நிலவேர் தெண்டிலே
தெண்டிலே சேர்த்துவடி யண்டமுள்ளி
சிறந்த தயிலம் கலந்துண் ணாட்ட காயி
பகருமிது வுண்மை தானே.

439

434. தேவாரணத் தைலம்

வெள்ளாடு, மயில் இவற்றின் சதை, நரி-யின் சதை, ஆகியவற்றை வகைக்கு 2100கி, வயல்நண்டு, மரவட்டை இவற்றின் சாறு கண்ணி வகைக்கு 1050கி எடுத்து அடுபாத்-திரத்தில் சேர்த்துக் கொள்ளவும். வவ்வால் மீன் மீனின் சதை, விலாங்கு, பச்சைப் பாம்பு, வேலிவாளை மீனின் துண்டங்கள் ஆகிய-வற்றினை வகைக்கு 450கி எடுத்து 21.4லி சாற்றில் போட்டு 10.7 ஆக அருங்கும் அளவுக்கு வேக வைத்துக் கொள்ளவும்.

கதிர்க்கொன்றை, நொச்சி, தழுதாழை, கையாந்தகரை, ஊமத்தை, உலர்ந்த அரைக்-காய், பிரண்டை, செருப்படி, முருக்கு, எருக்கிலை, ஆகியவற்றின் சாறுகளை வகைக்கு 3225மி.லி கலவையில் சேர்க்க. 1.3லி நல்லெண்ணெய், 675மி.லி புங்கெண்-ணெய், 21.4லி பால் சேர்த்து 14½மணி நேரம் சிறிய அளவில், எரியும் அனலில் வைக்க.

161

376

சார்
―――
ஷேவம்

ஆ. தேவாரணத்துயிலம்

தேவாரணத் தயிலமது புகலும் வெள்ளாடு
பெயல் கனக சதை - குழி நிலாம்பிகம்
வகைக்கருவ ஓர்பலம் வயல்நண்டு
ரெவட்டை சாற்பல முப்பது

விதமாம் வவ்வால்க்கறி விலாம்பு பச்சைப்பாம்பு
வேலி வாளைக் கண்டமும்
மிக்கவுமை ~~பே~~வந்து பலநார் மெண்குருணி
வெந்தாறி யறுப தக்கு

கதிர்க்கொன்றை நொச்சி தழுதாழை கையான்
மத்து காஞ்சுரைக் கணி பிரண்டை
கண்டீர் நெரிப்புச் செருப்படி முருக்கெருக்க
கணைறைசம் உழக்கு ழக்கு

நதியார் நல்லெண்ணெய் படி புங்கெண்ணெய் பாதி
நற்பால் குருணிவிட் டுறைவ
நவிலு மேறுபது கடுகை சிறுதி யெரித்து
மேறு நாளிடும் வேந்து கொள.

434

435. அடுத்த நாள் ஏலம், இலவங்கம், நட்டுச் சீரகம், காட்டுச் சீரகம், மரமஞ்சள், தேவ-தாரம் இலாமிச்சம், கஸ்தூரிமஞ்சள், நறு நன்றி எனும் நன்னாரி வேர், ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துப் பொடித்து மேற்-சொன்ன கலவையில் சேர்க்க. 2ம் கிச்சிலிப் பழத்தையும் சேர்த்து அடுப்பை நன்கு எரித்துப் பதமாக வடித்துக் கலசத்தில் அடைக்கவும்.

இதனைத் தலையிலும் உடலிலும் தேய்த்து குளிக்க கூன் முதுகு நிமிரும். திமிர் தூண வாதம் போன்ற எண்பது வகை வாதங்கள், தொண்ணூற்றாறு வகை சிலேற்பன வகைகள், நாற்பது வகை வாதங்கள் பதின்மூன்று வகை சன்னி, ஐந்து வகை வலி, கண்நோய்கள், எட்டு வகைக் குன்மம், இருபது வகை மேகம், மண்டை நோய் ஆக பல வகை நோய்கள் தீரும்.

௨18. அ. நெருநாளி லேலமே வங்கமிரு சீரகம்
ரமஞ்சன் தேவ தாரம்
வாசரம்பிச்சமொடு நீர்வெட்டி கஸ்த்தூரி
மஞ்சன் கருங்கன்றி மேலம்
நிறைமேவு கொம்பு சுக்கோர் கழுக்சதில்
நாரகப் பழுமி வெபது
நிலமான கொரயமதிலே கலந்தைரிபதம்
நயம்பெற வடித்து நீக்கு
திறல்கொண்ட நோய்க ளறுகாது கண்ணிமிருடன்
திமிர்சூலை வாத மான
தெண்பது சிலேற்பனம் தொண்ணூற்றா றானதும்
சிதறுமெண் ணாஞ்சு பித்தம்
வெறிமயசுடன் சன்னி பதிமூன்று வலியஞ்சு
விழிநோவு அட்ட குன்மம்
மேகமிருபது மண்டைநோ யகலுதே
விளம்பினன் கத்தி சனே.

435

436. வெளுப்பு குட்டத்துக்குத் தைலம்

கரிசாலை, வேம்பு, கிச்சிலி, இலைக்கள்ளி, கச்சோலம், பூலா, உழிஞை, புங்கு, நொச்சியிலை, ஆகியவற்றை வகைக்கு 70கி எடுத்து 5.அ லி காடி ஊற்றி இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவும். கோசலம், பசும்பால் வகைக்கு அ.6லி, தேங்காயெண்ணெய், நீரடிமுத்து எனும் மரவெட்டியெண்ணெய் இவை வகைக்கு அ.6லி, வேப்பெண்ணெய் 3அ56.லி எடுத்து ஒன்று சேர்த்துக் கொள்ளவும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, கோட்டம், கருஞ்சீரகம், கருப்பு அகில், குந்திருக்கம், அஞ்சனக்கல், செஞ்சந்தனம், இலவங்கப்பட்டை, அதிமதுரம், கற்பூரம், இலாமிச்சம், வேம்பாடம்பட்டை ஆகியவற்றை வகைக்கு 10கி எடுத்து இடித்துப் பொடித்து எண்ணெய்க் கலவையில் கலந்து காய்ச்சி பதத்தில் வடித்திறக்கவும். இவ்வெண்ணெயை உடலில் மேலுக்குந் தடவி சிறிதளவு (அளவறிந்து நோயின் தன்மை, உடல்வன்மை) உள்ளுக்கும் கொடுக்க உடல் வெளுப்பு, கருங்குட்டம் இணமாகும்.

378

ஆ. வெளுப்புக் ஓட்டத்துக்குந் தைலம்

கிரிசாலை நின்புநில நாரக மிலைக்கள்ளி
கச்சோலி புல்லந்தி உசிலை
கார்வளி புளிக்கு நொச்சியிலை வகையொரு பலம்
காடிபடி நால்விட்டிடு
வருசார் புளிக்கிலகு கோசலம் பாலுமது
வகைபடி யிரண்டு தெங்காய்
மர்வுட்டி யெண்ணெய் யோரொன்று படிரண்டு
மணக்கு நின்னெண்ணெய் படிகால்
ஒருவான கற்கடு மரிவற்க மக்கலகு கோட்டம்
கரிய சீற கார்கில்
இந்துநக்கம் அஞ்சனக்கல் செஞ்சந்தனமொடு
இங்குமெப்பி பட்டை மதுரம்
வரிசைதரு கற்பூரம் ராமிச்சம் லவம்பாடல்
வகைவகைக் கிருக பஞ்சு
மாட்டி வடிடி சுடலிவெளுப்பு பதகரி
கட்டம்
மாறுமிது உண்மை தானே

436

437. கண்ணுக்கு வில்வாதித் தைலம்

வில்வம், குறுந்தொட்டி, சீந்தில், நன்னாரி ஆகியவற்றின் வேர்கள், வேங்கை ஆகியவற்றை வகைக்கு 35கி எடுத்து இடித்து ~~[illegible]~~ 13லி தண்ணீரூற்றி கொதிக்கவைத்து ௨.6லி யாகக் குறுக்கி வேறொரு பாத்திரத்திற்குள் ஊற்றுக. 3௨5மி.லி எலுமிச்சம்பழச்சாறு, கையாந்தகரைச்சாறு, பசும்பால் இவற்றை வகைக்கு 675 மி.லி எடுத்துக் கலந்து கொள்ளவும். வெந்தயம், அதிமதுரம், மிளகு, திருநீற்றுப்பச்சை, கொத்துமல்லி, செவ்வள்ளி, நாககமலர், ஏலம், வலம்புரிக்காய் அபின், ஆகியவற்றை வகைக்கு 5கி எடுத்துப் பொடித்து எண்ணெயில் கலந்து காய்ச்சிக் கொள்ளவும். பதமானவுடன் 1.3லி மிளகைப் பொடித்துப் போடவும். $1/4$ கி அபினியைப் பொடித்துத் தைலத்தில் போட்டு பக்குவத்தில் இறக்கிக் கலசத்தில் அடைக்கவும். இத்தைலத்தைத் தலையில் தேய்த்துக் குளிக்க கண்ணில் நீர் வடிதல், தலைசுற்றல் குணமாகும்.

27/11/04

219.அ. கண்ணுக்கு வில்வாதித் தைலம்

வில்வங் குருந்தொட்டி சீந்திநறு நின்றிவேர்
வேங்கையின் காதல் பலநேர்
விதமெ தரிந்திடிபலத்துக்கு ரண்டுபடி
வெள்ளம் விட்டெரி சலமது

சுல்லாபம் ரெண்டுபடி யாகக் குறுக்கு
சம்பழச்சா றுழக்கு கையான்
சாறுரி யவிவித மானபால்விடு சரக்குவெந்து
மதுர, மிளகு பச்சையும்

மல்லியொடு செவ்வள்ளி நாகமல ரேலம்.
வலம்புரி யவிங்க பூஞ்சிவகை
வீத மெண்ணையில் சேர்த்துரக் காச்சு
பதமான பின்மிளா கொருபடி

எலிமையொடு காசிக்கழுஞ் சவிணிவடி கலச
மீதிடு வடிதயில நீக்கு
இதமான நயனநோ சிரநுனை யோடறு
மிருநயன தெளிவா கிடே.

437

438. நீரழிவுக்கு ஆவரம்பட்டைத் தைலம்

ஆவாரம்பட்டை 210கி, வாழை அல்லி வகைக்கு 175கி எடுத்துப் பாத்தி-ரத்தில் போட்டு 10.7லி தண்ணீரூற்றி காய்ச்சி நான்கிலொன்றாய்ச் சுருக்கிக் கொள்ளவும். கொறுக்கனியுள்ள நீர்வஞ்சி கள்ளி, ஆல், அரசு, காட்டு மருது, இலந்தை, நாகல், வெள்ளைக்கடம்பு, புளி, நூரை ஆகியவற்றின் பட்டைகளை வகைக்கு 35கி, எடுத்துக் கொள்ளவும். வாழைக் கிழங்குச் சாற்றி-னை 15.6லி அளவு சேர்த்துக் காய்ச்சி 7.8லி அளவாகச் சுருக்கி வைக்கவும். ஒரு பாத்திரத்தில் நல்லெண்ணெய், பசும்பால் வகைக்கு 3.9லி எடுத்து ஊற்றிக் கொள்-ளவும். மேற்கூறிய பட்டைகளில் ~~வாழைக்~~ வகைக்கு 5கி எடுத்து மேற்குறிப்பிட்ட ~~கிழங்குச் சாற்றினை~~ குடிநீரை ஊற்றி அரைத்துக் கலந்து மேற்சொன்ன கலவை-யுடன் கலந்து கொள்ளவும்.

ஆ. நீரழிவுக்கு ஆவாரம்பட்டைத் தயிலம்

ஆவாரம் பட்டைபல மூவிரண்டாம் கதலி
யல்லி பலமைந்து தானும்
அரிந்திடு பதக்குநீர் பாண்டம்விடு காலிலான
னாகக் குறுக்கி வடிநீ
வாவிசேர் நீர்வஞ்சி நெல்லிப்பால் மரம்புரசு
வன்மருது வந்தை நாகல் கள்
மகிழ்வெண் கடம்பு புளிநுறையன் பட்டை
வகைக்கு வகையோர் பலமிட்டு
பாவனை யதாகவே வரைநூக்கி பூவிநீர்
பன்னிரண்டு படியாறு
பதமே யெரித்ததென்று பாதியடி கட்டியே
பாண்டத்தி வெண்ணெயி பாலும்
காவலுடா ஆறொன்று மூன்று படியாகக்
கொர்ந்து முன்பட்டை யனம்ஒர்
கழுஞ்சு நிறைமின் கசாயத்தினி லரைத்து
கலக்கி யதனொடு சேரே.

438.

439. ஏலம், இலவங்கம், இலவங்கப்பட்டை, துடி, கல்மதம், திப்பிலி, பேரிந்து, அதிமதுரம், நேர்வாளம், கல்நார், சந்தனம், குரோசாணி ஓமம், வெள்ளரிவிதை, இலுப்பைப்பூ, ஆவாரைவேர், வெள்ளைவேல், கருவேல், வேப்பம்பிசின் இவற்றை வகைக்கு 5 கி எடுத்து வெள்ளைநிறப் பசும்பால் ஊற்றி அரைத்து எண்ணெய்க் கலவையில் சேர்த்து நான்கு நாட்கள் தொடர்ந்து காய்ச்சவும். பக்குவ பதத்தில் இறக்கும் பொழுது பசுவின் கோரோசனை, இலுமிச்சம்பூ இவற்றைச் சம அளவெடுத்துப் பொடித்துப் போட்டு கலயத்தில் வடித்துக் கொள்ளவும். இத்தைலத்தைத் தலையில் தேய்த்துக் குளிக்க உட்டிணம், நீரழிவு, இந்திர கண்டி, உடல் வறட்சி, தலை நோய் ஆகிய நோய்கள் தீரும்.

220.அ செருந் சரக்கு திரிசாதி துடிகல்மதம்
திற்பிலி பேரந்து மதுரம்
செயல்நாக தந்தி கன்னாரமொடு சந்தனம்
சேர்குற காணி யோடமும்
மேரின் வெள்ளரிவித் திருமடைமல ராவரை
வேர்வெள்ளை வேது குருவேல்
வேப்பன் பிசின் கழுந் சொன்னறை நிறுத்து
வெண்பால் விட்டரைத் ததில்விடு
பாரின மிசைநாது நாள்க்காய்ந்து நற்பதம்வடி
பத்திரத் திருசரக்கு
பசுவின் கோரோசனை குங்குமப்பூ சமன்
பிரிந்திட வழித்து சூழ்கு
ஏருவைவ புட்டிணம் நிரசிவு தாக
மிஞ்சிரகண் மு யுடல்வரட்சை
ஏகசிர நோய்முத லகன்றிட வுரைத்தன்
யர்றமிழ்க் கும்ப முனியே

440. சிறிய சந்தனாதித் தைலம்

210கி சந்தனத்தூள், வெட்டிவேர் எடுத்துத் தாழியில் போட்டு 10.7லி தண்ணீரூற்றி கொதிக்க வைத்து நான்கிலொன்றாய்ச் சுருக்கிக் கொள்ளவும். நிலப்பனை, சதா வேலி, சிற்றாமுட்டி, இலாமிச்சம், நெய்தல், தாமரை, கொட்டி, அல்லிக்கிழங்கு, பொன் -னாங்காணி, நன்னாரி, துவளைவேர், வெற்றைகிராந்திவேர், ஆவாரம்பட்டை, கோரைக்கிழங்கு இவற்றை வகைக்கு 157கி எடுத்து 12.8.4லி தண்ணீரூற்றி கொதிக்க வைத்து எட்டிலொன்றாய்ச் சுருக்கிக் கொள்ளவும். வீழி, கொற்றான், கற்றாழை நொச்சி, முருக்கு, பொன்னாங்காணி, ஆகியவற்றின் சாறுகள், செவ்விளநீர் இவற்றை வகைக்கு 7.8லி ஊற்றி காய்ச்சி எட்டிலொரு பாகமாய்ச் சுருக்கிக் குடிநீராக்கிக் கொள்ளவும். அதனுடன் நல்லெண் ணெய், பசும்பால் வகைக்கு 7.8லி சேர்க்கவும்.

167

382

சிறிய சந்தனாதித் தயிலம்

ஆ.

சந்தனத் தாள்பலம் தோறுசமன் வெட்டிவேர்
தாழியரு கம்ப தக்கு
தோறுமது நாலிலொன்று நாயுருவி லப்பணை
சதாவேலி சிந்த முட்டி

அந்தமுறு ஏலமிச்சம் நெய்தல் தாமரை கொட்டி
அல்லிக் கிழங்கு சீதை
அமுதமுறு நறுநன்றி கூவளை மேல்விழுது
ஆவாரம் பட்டை முத்தம்

விந்தையுட னலரைப் பலமதறு தண்ணீர்க்கு
விட்டுவடி யெட்டி லொன்று
வீணி கொண்ணாண் குமரி நொச்சியு முருக்கு
விரானிந்த சீதை நொச்சி

பந்தமுறு சாறுசெவ் விளநீர் வகைக்கானு
படிவிட் டெரித்ததுவு மெண்
பசுங்காய் வடித்திறு கஷாயமொடு ~~செவ்வை~~
செறிந்ணணய்
பால்வகைக்கானு படியே.

~~439~~ 440.

441. சந்தனம், அதிமதுரம், சடாமாஞ்சில்
இலவங்கம், சாதிபத்திரி, இலவங்கப்பட்டை,
தேவதாரம், திருநீற்றுப்பச்சிலை, அரத்தை,
முந்திரிகை, சாத்திரபேதி, ஏலம், சாதிக்காய்,
சாதிபத்திரி, மஞ்சிட்டி, கிளியூறல், செண்பகம்,
கச்சோலம், செஞ்சந்தனம், செவ்வல்லி,
பொரிகாரம், கோரோசனை, லுமம், நாககமலர்,
தாளிசபத்திரி, வெட்டிவேர், பூலாவிருட்சம்,
ஆகியவற்றை வகைக்கு 30கி எடுத்து
செவ்விளநீர் ஊற்றி அரைத்து மேற்
குறிப்பிட்ட எண்ணெய்க் கலவையில்
கலந்து நான்கு நாட்கள் தொடர்ந்து
சிறு அனலில் வைக்கவும். மெழுகு பதத்தில்
கோட்டம், சாம்பிராணி, வகைக்கு ½ கி
கோரோசனை வெள்ளிலோத்திரம், குங்குமப்பூ
வகைக்கு ¼ கி எடுத்துப் பொடித்துப்
போடவும்.

168 383

இஆ.அ. படிக:-சந்தன தேரமாஞ்சி யிலவங்க பத்திரி
பட்டை தேவதாரம்
பச்சிலை யரத்தை முந்திரிகை சாத்திரபேதி
பசுமை திரிசாதி யேலம்
கொடிகமருகு மஞ்சட்டி கிழியூரல் செண்பகம்
